பக்கங்கள்: 14

Registered as a Newspaper

பௌதிக வகுப்பு
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
G.C.E. A/L 90
ஆரம்பம்: 10 08 1988
காலை 6-00 மணி
ஆசிரியர்:
வர்ணம் B.Sc.(Hons)

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

பௌதிக வகுப்பு
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
G.C.E. A/L 89
நடைபெறுகிறது.
ஆசிரியர்;
வர்ணம் B.Sc. (Hons)

மலர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி மீ 22 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 22 (06-08-1988) SANJEA VY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 22

★ ஈழப் பிரச்சினைக்கு

# விரைவான தீர்வு இல்லையேல்

# தமிழகத்தில் பெரும் போராட்டம்

## பொதுக் குழுவைக் கூட்டி முடிவு எடுக்கப் போவதாகக் கருணாநிதி

— சென்னையிலிருந்து தி. மேனகன் —

சென்னை, ஆகஸ்ட் 6

ஈழப்பிரச்சினைக்கு மத்திய அரசு விரைவில் தீர்வு காணவேண்டும். தவறினால் மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்துவோம்.

—பிரதமர் ராஜீவ்காந்திக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி.

சென்னை ராயபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.


கடந்த வாரம் தி. மு. க. ஏற்பாடு செய்திருந்த பேரணியின் முடிவில் இப்பொதுக் கூட்டம் நடைபெற்றது.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக நடைபெற்ற இந்தப் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் சுமார் ஐந்து லட்சம் பேர் கலந்து கொண்டதாக மதிப்பிடப்பட்டது.

பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கலைஞர் கருணாநிதி மேலும் கூறியதாவது:-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி

(6 ஆம் பக்கம் பார்க்க)



''செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் மனித முகசிற்பம்''. இது சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்ட அமெரிக்க விண்கலம் 'வைக்கிங்''. புதிரான உள்ள இதை சோவியத்யூனியன் இப்பொழுது செலுத்தி உள்ள ஃபோபஸ் விண்கலம் ஆராயக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமான கட்டுரை 3ஆம் பக்கத்தில்...

படம்: தி. மேனகன்

## செவ்வாய் கிரகம் பூமியை நெருங்குகிறது

— தமிழகத்திலிருந்து :ஈ.நவநீதன் —

கிரகங்களிடையே விண்ணில் நடக்கும் அதிசயத்தைப் பார்ப்பவர்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஓர் அரிய நிகழ்ச்சி காத்து இருக்கிறது.

இம்மாதத்தில் பூமிக்கு மிக அருகில் செவ்வாய் கிரகம் வரும்.

செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி அன்று செவ்வாய் மிக அருகில் பூமியை நெருங்கும்.

அப்படி மிக அருகில் நெருங்கும் இடைவெளித் தூரமே 5 கோடி 80 லட்சம் கிலோ மீட்டர் இருக்கும்.

அடுத்த 17 ஆண்டுகளில் இவ்வளவு நெருக்கமாக பூமிக்கு அருகில் செவ்வாய் வராது.

இம்மாதம் செவ்வாய்க்கும் பூமிக்கும் இடையேயான இடைவெளித் தூரம் 6 கோடியே 40 லட்சம் கிலோ மீட்டராக இருக்கும்.

இந்த காலகட்டத்தில் பிரகாசமாகவும் செந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. வசம் ஏராளமான ஆயுதங்கள்

கொழும்பு, ஆக - 6

ஜே வி பியின் இராணுவப் பிரிவு ஏராளமான ஆயுதங்களைச் சேகரித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மே மாதம் அளவில் ஜே. வி. பியிடம் 636 ஆயுதங்கள் வரையே இருந்தன. பின்னர் இடம் பெற்ற கொள்ளைகளைத் தொடர்ந்து அவர்கள் தற்போது வைத்திருக்கும் ஆயுதங்கள் ஆயிரத்தைத் தாண்டியிருக்கலாம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## ஜெயலலிதா-திரு பரஸ்பர நோட்டிஸ்

சென்னை, ஆக 6

10 லட்சம் ரூபா (இந்திய பணத்தில்) மான நட்டம் கோரி ஜெயலலிதா சட்டத்தரணி மூலம் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசுவுக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்.

அதேவேளை கட்சி நிதி150 லட்சம் ரூபாவை ஒப்படைக்காவிட்டால் கிரிமினல் வழக்குத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வார இறுதி நாட்களில் யாழ்- கொழும்பு ரயில்சேவை

### இன்று வரும் என எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ்—கொழும்பு ரயில் சனி, ஞாயிறு தினங்களில் சேவையாற்ற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று சனிக்கிழமை முதல் ரயில் இங்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த ரயில் சேவை அடுத்த ஞாயிறு முதல்- வாரத்தில் ஒருநாள் மட்டுமே- நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று முன்தினம் பிரஸ்தாப இருநாள் ரயில்சேவை பற்றிய அறிவித்தலை ரயில்வேப்பகுதி வெளியிட்டது.

இதனை அமைதிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் கவனத்துக்கு

கடந்த வார இறுதியில் அமுலில் இருந்த 60 மணி நேரத்தொடர் ஊரடங்கு காரணமாக சென்றவாரம் சஞ்சீவியை வெளியிட முடியவில்லை என்பதை வாசகர்களுக்கு வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

அதனால், ஊரடங்கு அமுல் அறிவிக்கப்படுவதற்கு முன்னராக, ஏற்கனவே 30-7-1988 திகதியிட்டு அச்சிடப்பட்ட சஞ்சிகையை இணைத்துள்ளோம்.

இன்றைய சஞ்சீவியும் சஞ்சிகையும் மொத்தம் 14 பக்கங்கள்.

## திருமலை தமிழ் ஊழியர் மகஜர்

யாழ்ப்பாணம், ஆக 6

திருகோணமலைப் பகுதியில் கடமையாற்றும் தமிழ் அரச ஊழியர்கள், கூட்டுத்தாபன திணைக்கள ஊழியர்கள் அனைவரும் இணைந்து கடந்த 21 ஆம் திகதி திருகோணமலை கச்சேரியில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி விளக்கி இந்தியப் பிரதமருக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மகஜரை இந்திய பிரதமருக்கு அனுப்பும்படி அது நேற்று இந்திய அமைதிப்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது (ஒ-150)

## வவுனியாவில் 4 வர்த்தக நிலையங்கள்

### அமைதிப் படையால் சீல் வைப்பு

வவுனியா, ஆக 6

வியாழனன்று காலை வவுனியா நகரில் உள்ள நான்கு வர்த்தக நிலையங்கள் அமைதிப்படையினரால் மூடி சீல் வைக்கப்பட்டன.

இக் கடைகளின் உரிமையாளர்களான நால்வரும் ஊழியர்கள் சிலரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவற்றில் இரு கடைகளின் உரிமையாளர் முஸ்லிம்கள் ஆவர்.

மூடப்பட்ட கடைகளின் முன்னால் அமைதிப்படையினரின் ''படையினரால் மூடப்பட்டது'' என்ற அறிவித்தல் காணப்படுவதுடன் ஜவான்களும் காவலில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து நகர வர்த்தகர்களிடையே பதற்றமும் ஒருவித இனம் புரியாத பீதியுணர்வும் காணப்படுகின்றது. (ஒ-164)

## ஸ்ரீலங்கா இராணுவம் கொள்ளையரைக் கைது செய்தது

வவுனியா, ஆக.6

அனுராதபுரத்திற்கும் ரம்பாவைக்கும் இடையில் கொணவசந்தி என்னுமிடத்தில லொறி ஒன்றைக் கொள்ளையடித்த மூவரை ரம்பாவை தடைமுகாம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளார்கள்.

இச்சம்பவம் புதனன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த லொறி ஒன்றை, வீதித் திருத்த வேலைகள் நடைபெறும் இவ்விடத்தில் வழிமறித்துக் கொள்ளையடித்துள்ளனர்,

இது விடயம் ரம்பாவை தடைமுகாமில் கடமையில் இருந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரின் பல பகுதிகள் நேற்றுச் சுற்றிவளைப்பு

குருநகர், ஆக - 6

யாழ் நகரின் பல பகுதிகளிலும் நேற்று இந்திய அமைதிப்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சில இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. நகரில் இருந்து பிறபகுதிகளுக்குச் சென்ற வாகனங்கள் மட்டுமல்லாமல் ஏனைய பகுதிகளில் இருந்து நகரை நோக்கி வந்த வாகனங்களும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

காலையில் நல்லூர் கைலாயபிள்ளையார் கோவிலடி சுற்றிவளைக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். கே. கே. எஸ். வீதி நாவலர் சந்தியில் அமைதிப் படையினர் வாகனங்களைச் சோதனை செய்த அதேநேரம் இராணுவப் பொலீஸார் கன்னாதிட்டி சிவன் கோவில் முன்பாக சோதனைகளை நடத்தினர்.

நேற்றைய தினம் குடாநாடு அடங்கிலும் பரவலாக அமைதிப் படையினர் சோதனைகளில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-51)

## ஜானகி நாடு திரும்பினார்

சென்னை, ஆக- 6

அ. தி.மு.க 'ஜா' அணி தலைவி திருமதி ஜானகி அம்மாள் அமெரிக்காவில் இருந்து நேற்று சென்னை திரும்பினார்.

இவர் ஒரு மாத காலம் நியூயோர்க் புறூக்லின் மருத்துவமனையில தங்கி இருந்து சிகிச்சை பெற்றார்.

விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் நேற்று அவரை வரவேற்றனர். (ஒ-எ)

## இந்திய அரசு பிரபாவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கள் நடத்தக் கோருகிறார் உமாமகேஸ்வரன்

புதுடில்லி, ஆக 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் இந்திய அரசு நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) தலைவர் உமா மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. உமா மகேஸ்வரன் இதனைத் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில நாளிதழ் 'த ஐலண்ட்' நேற்றுச் செய்தி வெளியிட்டது.

பேட்டியில் திரு. உமா மகேஸ்வரன் மேலும் சொன்னதாவது:

இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் இருப்பது தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையேயான இடைவெளியை மேலும் அதிகமாக்கிவிட்டது.

வெளிநாட்டு இராணுவம் ஒன்றைக் கொண்டு வந்த துரோகிகளாகவே தமிழரைச், சிங்களவர் தற்போது கருதுகின்றனர்.

திரு. பிரபாகரனுடன் இந்திய அரசு நிபந்தனையற்ற முறையில பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்பதை நான் இப்போது ஆதரிக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

6 - 8 - 1988
ஆடி - 22
சனிக்கிழமை
சுபநேரம்:
03 04 முதல் 04-34 வரை
ராகுகாலம்:
09-04 முதல 10 34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

## கம்யூ. பிரமுகர் வைத்தி காலமானார்

பலாலி, ஆக. 6

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், நீண்டகால அரசியல்குழு உறுப்பினருமான திரு அ. வைத்திலிங்கம் கடந்த வியாழக்கிழமை இரவு காலமானார்.

யாழ். இந்துக்கல்லூரியின் ஆசிரியராகவும, உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றிய கல்விமானாகிய இவர் பிரபல

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

"அர்ச்சுனு"

மீண்டும் வெளிவருகிறான்!

மாணவன் வரைந்த வர்ண ஓவியம் முகப்பு அட்டையை அலங்கரிக்க...
கவிஞர் முருகையன், கோப்பாய் சிவம், கலாநிதி சபா. ஜெயராசா, சொக்கன், மயிலங்கூடலூர் பி. நடராசன, ஆர். பாலக்கருஷ்ணன், உதங்கா
ஆகியோரின் ஆக்கங்கள் எழிலூட்ட......

மலரும் ஆகஸ்ட் இதழ்!
இன்றே வாங்கிப் படியுங்கள்!
விலை: ரூபா 4-00 மட்டுமே.

சிறுவரின் அறிவுப் பசிக்கு நல்விருந்து! பல்விருந்து!!
பிரதிகளைப் பெற உங்கள் பகுதி 'உதயன்' முகவர்களை நாடுங்கள்.
(6016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Honda, Reconditioned, புதிய, பழைய Model C 90, MB5, Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No 16, கண்டி ரோட், யாழ்ப்பாணம். (உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) (5457)

இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம் முன்பாக இல. 650, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள நிறுவை, அளவை, உபகரண விற்பனை நிலயத்தில் சகல விதமான தராசுகள், படிகள் நியாய விலையில் விற்பனைக்குண்டு. எடை பார்க்கும் தராசும் (Bath room Scale) உண்டு. தராசு திருத்தம் செய்தும் கொடுக்கப்படும். (5516)

நல்ல பாவிப்பிலுள்ள பெரிய இரட்டைக்கதவு வெளிநாட்டு குளிர் சாதனப்பெட்டி, உடன் விற்பனைக்குண்டு. ஹோட்டல், கூல்பார் ஆகியவைக்கு உகந்தது. யவ்னு எலக்ரோ பிளேற்றேஸ், No.7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம், (வண்ணார்பண்ணை சிவன்கோயிலுக்கு கிட்டிய தூரம்) (5464)

Goldi Sausages, Beef, Chicken, Fish, Mutton, Pork, Beef Hot Dogs, Frank furters, Lingus, Powkies, Chicken, Meet balls, Beef Meet Balls, Strcaky Bacon, Back Bacon, Special Bacon, Ham, மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். தொடர்பு :- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C/6062]

ஒலிவேக்கிங் டீ பிறீசர் (D. Freezer) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். '' சேவ்ரி ரவல்ஸ் '' 102, 3-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம், (5530)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் மெத்தைகள், கட்டில், அலுமாரி, Hall Set சாப்பாட்டு மேசை, கண்ணாடி மேசை, விருந்தை கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள், பழைய கதவு, நிலைகள் மற்றும் பல மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5437)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள்எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C/6063]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Gol--den Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hy-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/6066)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

### WATER PUMP விற்பனைக்கு

Robin Water Pump புதிய நிலையுள்ள Robin EY 13 Water Pump உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர். 19, முருகேசர் லேன், நல்லூர். (C/ 6067)

### பொமிரேனியன் குட்டிகள் விற்பனைக்கு

ஆறு கிழமைகள் நிறைந்த நல்லரக பொமினேறியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (Wor--med & Weaned) பிற்பகல் 3 - 00 மணிக்கும் 6-00 மணிக்குமிடையில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Dr. S. நடராஜா, 14 அரச வீதி, (சங்கிலியன் வீதி ஊடாக) முத்திரைச்சந்தி, நல்லூர். (5463)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இணுவில் வீதியில் பிரதான வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் 3 பரப்புக் காணி பயிர்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. கமலநாதன், சட்டத்தரணி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (5460)

### FOR SALE

National Gl Color Video, Camera, EN 180 VCR, Focus Light, and other Video Electronic goods. Contact:- ExpoVideo Complex, No. 7, K. K. S. Road, Kondavil. (5441)

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கைலாசபிள்ளையார் வீதியில் 5 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. [1¾ பரப்பில்] தொடர்பு கொள்ளவும் 311 C/O உதயன் யாழ்ப்பாணம் C/605)

## தேவை

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகளும், வேலை பழகுபவர்களும் தேவை. நேரில் வரவும். முகவரி: அப்பளக் கம்பனி, இல.18.கொண்டலடி லேன், (சங்கிலியன் வீதி ஒழுங்கை) நல்லூர், யாழ்ப்பாணம். (5534)

### சைக்கிள் தேவை

புதிய அல்லது சில காலம் பாவித்த முக்கிய உபகரணங்கள் பொருத்தப்பட்ட மூன்று ஏசியா (GENTS ASIA BIKE) சைக்கிள்தேவை. நல்ல விலைக்கு வாங்கப்படும். இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். சுஜாதா சைக்கிள் வேக்ஸ் 70, ஸ்ரான்லி வீதி ஆரியகுளம் யாழ்ப்பாணம். (5544)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லா சாதி சமயத்திலும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர் முதலானோர் இருக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் நேரே வரவும். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (5451)

### மணப்பெண் தேவை

யாழ்/ இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த B. Sc. பட்டதாரி ஆசிரியருக்கு, 33 வயதிற்குட்பட்ட விஞ்ஞான / கலை பட்டதாரி; கணக்கியல் கற்றுத் தொழில் புரியும் மணப் பெண் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.தொடர்பு: 308 C/O உதயன் யாழ்ப்பாணம். (5524)

### மணமக்கள் தேவை

நற்பண்பும் மிகுந்த அழகும் பொருந்திய வேளாளகுல மணமகள் 37 வயது A/L, 29 வயது Cha. Acc. க்கு உயர் பதவியில் உள்ள மணமகன் தேவை. வெளிநாடு சென்று திருமணம் செய்யக்கூடிய 35 வயதுள்ள மணமகள் தேவை. C/o. 312, உதயன், யாழ்ப்பாணம். (5540)

### மணமகன் தேவை

யாழ் / இந்து உயர்குல 35 வயதுடைய (சைவ போஷண முடைய) பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும்; 34 வயதுடைய அரசதுறையில் பணியாற்றும் சகோதரரும் இருப்பதால் மாற்றுச் சம்பந்தமும் கவனத்தில் கொள்ளப்படும். தொடர்பு: 305, C/o உதயன், யாழ்ப்பாணம். (5510)

### பட்டதாரி மணமகள் தேவை

யாழ்/இந்துவேளாளர் குலத்தைச் சேர்ந்த 27 வயது நிரம்பிய B.Sc சிவில் பொறியியலாளருக்கு (Engineer) பட்டதாரி மணமகள் தேவை.செவ்வாய் குற்றமற்ற உத்தரம் நட்சத்திரம். தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (5537)

### WANTED

A Theodolite in Good Condition (For land - Surveying) The Cost will be decided according to the condition it has Contact: S.M.K Veemankamam, M. V. Tellippalai. (5547)

## சேவை

வீட்டுப்பாவனைகளுக்கு உறுதியான தரமான வேலைப்பாடுகளமைந்த மரத்தளபாடங்கள், கடைச்சல் வேலைகளுக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள். ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். மகாலஷ்மி ரேட் குறூப், 75,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (5461)

### REPAIR சேவை

உத்தரவாதத்துடன் குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள், மின்விசிறிகள், கிறைண்டர்கள் ரான்ஸ்போமர்கள், மற்றும்மின்உபகரணங்கள் உடனுக்குடன் திருத்த, றிவைண்டிங் செய்ய நம்பிக்கையுடன் நாடுங்கள்- OMEGA-ELECTRICAL ENGINEERS MANIPAY ROAD JAFFNA. (5546)

### தவறிவிட்டது

திருமதி செல்லம் சின்னத்துரை ஆகிய எனது அடையாள அட்டை இல. 215980294 V அச்சுவேலி மினிபஸ்ஸில் பிரயாணஞ் செய்யும்போது தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். திருமதி செல்லம் சின்னத்துரை, நீர்வேலி. (5466)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம். ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எஸ்சோதிடம், தொழில்விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் 'சக்தி சரவணு' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ் / இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (C/ 6072)

## கல்வி

G. C. E. (O/L) கட்டாயபாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்கட்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்கட்கும் 20 வருட அனுபவம் உள்ள ஆசிரியரினால் வீடுகளிற்குச் சென்று விசேடசித்திக்குக் கற்பிக்கப்படும், சகல போசன்களும் 2 மாதத்திற்குள் நிறைவேற்றப்படும் மற்றும் பாலர் வகுப்பிலிருந்து O/L, A/L ற்குரிய ஆங்கில, விஞ்ஞான, கணித பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். முகவரி ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை கண்டுக்குளி. (5542)

### தொழில் கல்வி

புதிய பிரிவுகள் ஆரம்பம் — 19 - 8 - 88. 1. Radio Officers (Ship) P. M. G., 2. Electronics. 3. Telex Operators-(International) இருபாலாரும் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். தொடர்பு: Keen Centre—Thirunelvely. (5545)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவிதமான றேடியோ வீடியோ டெக், T. V , மின் விசிறிகள், மின் அடுப்புக்கள், மின் மோட்டர்கள், ஃறஸ்குக்கர், சுமீற் மொலினெக்ஸ் கிரைண்டர்கள், எலக்ரோனிக் கல்குலேட்டர். சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள்: விக்ரர் அன்சன்ஸ் (விக்ரேஸ்) 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/ 6051)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி நெறி, புதிய வகுப்பு விரைவில் ஆரம்பம் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். க.பொ.த.(சா/த) குறைந்த தகைமையாகும். பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் 25 8-88 முன் விண்ணப்பிக்கவும் தொடர்பு: பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5538)

### மடுத் திருப்பதி யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் (சுருவில் வீதி) நிர்வாகிகளால், தனிப்பட்டவர்களுக்கான, மடுயாத்திரை ஆவணி 12 ஆம் திகதி (பிரயாணத்திற்கு) ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விரும்பியவர்கள் ஒரு கிழமைக்கு முன் எம்புடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, கரம்பொன், காவலூர். (5509)

### O/L "88" விசேட வகுப்புகள்

O/L "88" December க்கான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் B.Sc. ஆசிரியரால் தனிப்பட்ட கவனம் எடுத்து 'பாடத்திட்டம் முற்றுக' போதிக்கப்படும். முகவரி: 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (5526)

### கைதடி கலைவாணி இல்லப் போட்டி

கைதடி கலைவாணி வித்தியாசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டி சமீபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கைதடி நவில்ட் பாடசாலை அதிபர் திரு. டேவிற் கலந்து கொண்டார்.

சிவப்பு இல்லம் முதலாம் இடத்தையும் பச்சை மஞ்சள் இல்லங்கள் முறையேஇரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றன. (இ-72)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி நாகேஸ்வரி மனோசிவநாதன்

மலர்வு: 22-11-1965    உதிர்வு: 18-07-1987

திதி: 06-08-1988

மாறுத அன்புடனே வையத்துள் வாழ்ந்தாயே
மானிட வாழ்வினிலே மாண்புடனே புகழ் படைத்தாய்
தீராத துயரினிலே தினம் எம்மை ஆழ்த்திவிட்டு — நாம்
வராத இடத்திற்கோ காலனுடன் சென்றுயோ

நோயுற்றிடாமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாலர் தம்மைப் பாராமல்
தாய் தந்தை தவிக்கத் தக்க துணை வாட—நீயும்
மாயப் பெருங்கடலில் மறைந்து தான் சென்றினையோ
இனி நாம் வாழ்ந்திடும் கால மெல்லாம் கண்ணீர்க் கடல் தானே.

பாச மலராய் பாரினிலே பிறந்து வந்து நேசமுடன்
எல்லோர் மனதிலும் நிழலாடி யாவரையும் ஆறாத்
துயரினிலே ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட
எம் குடும்பக் குலவிளக்கே !

ஆண்டொன்று வந்திடினும் அணையுமோ எம் இதயம்.
ஈசன் திருவடியில் இனிது நீ சாந்தி பெற,
கண்ணீர் பூக்களை யாம் காணிக்கை ஆக்குகின்றோம்.

நின் பிரிவால் தவித்து ஏங்கும்,
கணவர், பிள்ளைகள், தந்தை, தாய்,
சகோதரர்கள், மாமன், மாமி,
மைத்துனர், மைத்துனிமார்.

'நாகேஸ்வரி வாசம்',
வேலணை மேற்கு, வேலணை.

குறிப்பு: அன்றைய இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5458)

ஜூன் மாதம் வரையில்

# 20 ஆயிரம் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர்

## நாடாளுமன்றத்தில் நட்வர்சிங்

புதுடில்லி, ஆக. 6 கடந்த டிசம்பரில் இருந்து ஜூன் மாதம் வரை 20 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தாயம் திரும்பினர் என்று புதுடில்லி நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இணை அமைச்சர் நட்வர்சிங் இதனைத் தெரிவித்தார்.

தற்சமயம் மண்டபம் முகாமில் 2,007 பேரும் திருச்சி, கொட்டப்பத்து முகாமில் 377 பேரும் தங்கியுள்ளனர். (ஒ-எ)

# வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் பேருந்துச் சாரதிப் பயிற்சி

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும், போக்குவரத்துச் சபைகளில் வெற்றிடமிருப்பின் விண்ணப்பிக்கும் பொருட்டும், கீழ்க்காணும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கும் கோண்டாவில் சாலையிலுள்ள பயிற்சிப்பாடசாலையில் பேருந்துச் சாரதிப்பயிற்சி அளிக்கப்பட்டு ''சான்றிதழ்'' வழங்கப்படும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

**தகைமைகள்:**

(1) 22 வயதுக்கும் 45 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
(2) 8 ஆம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(3) உயரம் 5 அடி 3 அங்குலத்திற்கும், நிறை 100 இறாத்தலுக்கும் மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இத்தகைமை உள்ளவர்கள், பயிற்சிச் செலவுகளுக்காக ரூபா 3,000/-இச் சபைக்குச் செலுத்தவேண்டும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

விருப்பமுடையோர் கோண்டாவில் சாலையிலுள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தை இன்று தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்- சி. கனகரத்தினம்)
தலைவர்
வடபிராந்திய
போக்குவரத்துச் சபை.

பலாலிவீதி,
கோண்டாவில் (6076)

# 31 ஆம்நாள் நினைவஞ்சலி



## அமரர் இ. இரத்தினராசா B.sc Dip in Ed
(ஆசிரியர்)

எங்கள் அன்புத் தெய்வமே, தங்கள் பிரிவால் துயருறும் எங்களுக்கு தங்களின் நினைவு ஒன்றுதான் ஆறுதல் அளிக்க முடியும். தங்கள் நினைவு எங்களை என்றும் விட்டகலா. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி: பாரதி இரத்தினராசா
பிள்ளைகள்: சுதர்சனு, இரத்தினராசா
சங்கீத்தா, இரத்தினராசா
(5604)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டில் உலகம் எப்படி இருக்கும்?

## சோவியத் அறிவியல் அறிஞர்கள் கணிப்பு இதோ

**20** ஆம் நூற்றாண்டின் இறுதியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

21 ஆம் நூற்றாண்டில் உலகம் எவ்வாறு இருக்கும் என்பது பற்றிய சோவியத் அறிவியல் அறிஞர்களின் கணிப்பு இதுதான்.

21 ஆம் நூற்றாண்டில் 4 ஆயிரம் புதிய பணிகள் தோன்றியிருக்கும்.

அவை விண்வெளி ஆராய்ச்சி, கடல் ஆராய்ச்சி, தண்ணீரின் அடியில் சாய்கறி வளர்த்தல், ரோபோ இயந்திர மனிதன் ரிப்பேர் செய்தல் போன்ற துறைகளின் அடிப்படையில் அமையும்.

கடலில் நீர் மட்டம் உயர்ந்து விடும். எனவே சுரங்கப்பாதை கண்காணிப்பாளர் பதவி தேவைப்படாது.

★ ஐந்து நவீன இழுவைக் கப்பல்களில் அண்டார்டிகாவில் இருந்து 100 மில்லியன் தொன் எடையுள்ள பனிப் பாறைகள் கட்டி இழுக்கப்பட்டு ஆபிரிக்க கடற்கரைப் பிரதேசப் பகுதிகளுக்குக் கொண்டுவரப்பட்டு சுவையான குடிநீர் வழங்கப்படும்.

★ உலகம் எங்கும் சூரிய சக்தி பல்புகள். சூரியசக்தி கைத்தொழிற்சாலைகள் சாதாரணமாகக் காணப்படும்.

★ வீடியோ ஆதிக்கம் மிக அதிகமாகி அதில் புத்தகம் வாசிப்பது, நண்பனுடன் போனில் பேசுவதுபோலபுதிய நூல்கள் எல்லாம் வீடியோ வடிவில் இருக்கும்.

★ திருடர்கள் விண்வெளி வீரர் போல் உடையணிந்து தொழிலில் ஈடுபட வேண்டும். அவர்களின் முடி தோலின் சிறிய பகுதி, எச்சில், திருட்டு நடந்த இடத்தில் கிடைத்தால் அவை ஜெனடிக் முறையில் பகுக்கப்பட்டு உடனடியாக அவன் கைதாகும் அளவுக்கு குற்றவியல்துறை அறிவியல் முன்னேறி இருக்கும்.

★ 1975 இல் உலகின் மக்கள் தொகையில் 18 சதவீதம் 15-24 வயது இளைஞர் இருந்தனர்.

2 ஆயிரமாவது ஆண்டில் அவர்களின் எண்ணிக்கை மொத்த ஜனத்தொகையில் 23 சதவீதமாகி இளைஞர் ஆதிக்கம் அதிகரிக்கும்.

★ வால் இழந்த பல்லிக்கு உடனே புதிய வால் முளைப்பதுபோல் வெட்டுண்ட மனிதரின் கால் உடனே வளரும் அளவுக்கு மருத்துவத்துறையில் அதிநவீன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.

★ அதிக இரத்தம் வெளியேறியதால் செயலிழந்த மனித திசுக்களுக்கு தற்போதைய அளவைவிட 50 மடங்கு சிறிய செல்களுடன் கூடிய செயற்கை இரத்தம் ஏற்றப்பட்டு புத்துணர்வு பெறச் செய்ய வழி பிறக்கும். எனவே திசுக்கள் அழிவு பற்றிய பயம் இன்றி வாழ முடியும்.

21 ஆம் நூற்றாண்டு இப்படித்தான் இருக்கும் என்று சோவியத் அறிவியல் அறிஞர்கள் கணித்துள்ளனர்.

# 'நான் யார் இறைவன் யார்' என்ற உண்மையைக் கண்ட சீவன்முத்தர் சிவானந்த சரஸ்வதி!

ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹராஜ் மகா சமாதி அடைந்த 25 ஆவது புண்ணிய திதி இன்று ஆகும். இத்தினம் ரிஷிகேசம் மற்றும் உலகில் உள்ள தெய்வீக சங்கக் கிளைகளிலும் கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணம், நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் 31. 7. 88 முதல் சாதனா வாரமாகக் கொண்டாடப்பட்டு இன்று நிறைவு பெறுகின்றது. அதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

உலகத்தில் தருமம் குன்றி அதருமந் தலை தூக்கும்கால், தருமத்தை நிலைநாட்டச் சிவகோடிகளை உய்விக்கும் வண்ணம் பகவான் பூமியில் மானிட அவதாரம் எடுப்பதாகக் கீதையிற் சொல்லப்படுகின்றது. புராண இதிகாசங்கள் இதற்குச் சான்று கூறுகின்றன.

காலத்துக்குக் காலம் நாயன்மார்கள், ஆழ்வார்கள், புத்தர், கிறிஸ்து, முகம்மது முதலான பல அவதார புருஷர்கள் தோன்றி சைவசமயம், விஷ்ணுசமயம், புத்த சமயம், கிறிஸ்துசமயம், முஸ்லிம்சமயம் ஆகியவற்றின் உண்மைத் தத்துவங்களை மனித வர்க்கத்துக்குப் போதித்து, ஆன்ம ஈடேற்றத்திற்கு நல்வழிகாட்டிச் சென்றனர்.

பிற்காலத்தில் சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், இரமண மகரிஷிகள் போன்ற பல மகான்கள் அவதரித்து, மக்கள் கடைத்தேறும் வண்ணம் அரும்பெரும் உண்மைகளை நிலைநாட்டினர்.

ஆங்கில வருஷம் 1887 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ஆம் திகதி பரணி நட்சத்திரத்தில், தென்னிந்தியாவைச் சேர்ந்த திருநெல்வேலியில், 'பத்தமடு' என்னும் ஊரிலே ஞானிகள் பரம்பரையில் பிராமண குலத்தில் ஓர் அரும் பெரும் ஜோதி அவதரித்தது. அந்த ஜோதியின் பிள்ளைப் பெயர் குப்புச்சாமி. அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலான பாஷைகளை நன்கு கற்றுத் தேறி, சேவை மனப்பான்மையோடு ஓர் ஆங்கில வைத்தியர் ஆகத் தேறினார்.

சில காலம் இந்தியாவிலும் பின் மலாயாவிலும் அரும் பெரும் சேவை செய்து நற்பெயரும், புகழும் பெற்றார். மனித வாழ்க்கையின் அநித்தியத்தை நன்கு உணர்ந்த இவர் மனிதப் பிறப்பின் இலட்சியத்தை அடைய எண்ணி பட்டம், பதவி, பணம் இவைகளை உதறித் தள்ளிவிட்டு இந்தியாவிற்குத் திரும்பி வந்து இமயமலைச் சாரலை அடைந்தார். அங்கு சற்குருவைத் தேடி அலைந்து, ஈற்றில் சற்குருவின் உபதேசமும், சிவானந்த சரஸ்வதி என்ற பெயரும் பெற்றுப் பல வருடங்கள் கடும் தவம் புரிந்தார். இத் தவத்தின் பயனால் 'நான் யார்' 'இறைவன் யார்' என்ற உண்மையைக் கண்டு களிப்புற்றுச் சீவன் முத்தர் ஆனார்.

### சிவானந்த நகர்

தான் கண்ட இன்பத்தை ஏனைய மக்களுங் காணவேண்டுமென்ற பேரவாக்கொண்டு இமயமலைச் சாரலில் ரிஷிகேசத்தில், கங்கைக்கரையில், ஆனந்தக்குடில் என்னும் பெயருடன் ஓர் சிறிய ஆச்சிரமத்தை அமைத்து அதில் இருந்து கொண்டு தம்மைத் தேடி வரும் ஞான வேட்கை கொண்டவர்களுக்கு ஞான போதனை செய்து வந்தார். காலப் போக்கில் இச்சிறு ஆச்சிரமம் 'சிவானந்த நகர்' ஆக மாறியது. ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் அவர் தொடங்கிய 'தெய்வீக வாழ்க்கைச் சங்கம்' (Divine Life Society) இப்பொழுது அன்னசத்திரம், வைத்தியசாலை, கண் ஆஸ்பத்திரி, வித்தியாசாலை, வேதாந்தச் சர்வகலாசாலை (Vedanta Forest University) அச்சகம் நூதனசாலை, விஸ்வநாதர்கோவில் முதலான எத்தனையோ ஸ்தாபனங்களை நன்கு நடத்தி மக்கள் நல்வழிபடச் சேவை செய்து வருகின்றன.

சிறுவர் முதல் முதியோர் வரை, பாமர மக்கள் முதல் ஞானிகள் வரை யாவரும் படித்து நன்னிலை அடையும் வண்ணம் கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான நூற்றுக் கணக்கான புஸ்தகங்களையும், மாத வெளியீடுகளையும் எழுதி அச்சிடுவித்தும், தம்மைத் தரிசிக்கச் செல்வோருக்கும், ஏனையோருக்கும் அவற்றை இலவசமாகக் கொடுத்து ஞானமார்க்கத்தைப் போதித்தும் வந்தார்கள்.

இது காரணமாக உலகிலுள்ள பல்வேறு சமயத்தவர்களும், இவரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி இவரின் நற்போதனைகளைப் பின்பற்றி வருகின்றார்கள். இவரின் போதனைகளை அகில உலகத்திலும் பரப்பும் நோக்கமாக 'தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின், கிளைகள் உலகில் பல பாகங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தேசத்தவர்களும் சுவாமிகளின் புஸ்தகங்களைத் தம் பாஷையில் மொழி பெயர்த்து, அச்சிடுவித்து விநியோகம் செய்கின்றார்கள்.

### ஞான போதனை

சுவாமிகளைச் சாதாரண கண்களால் பார்த்தால் காவி உடுத்த ஒரு பெரிய சந்நியாசியார் என்றே சொல்லத் தோன்றும். ஆனால் அங்கு நடப்பனவற்றையும், சுவாமிகளின் அன்பையும், இனிய சுபாவத்தையும், அமைதியையும், கொடையையும், சீவ காருண்ணியத்தையும், அவர் சீடர்களின் பணிவையும், அன்பையும் ஊன்றி உன்னுங்கால் இறைவனும் தேவ கணங்களுமே சுவாமியாகவும், சீடர்களாகவும் மானிட அவதாரம் எடுத்து பாமர மக்களுக்குப் பணியாற்றி, ஞான போதனை செய்கிறார்கள் என்னும் எண்ணத்தை உண்டாக்கும்.

''அழுந்தோறும்
அணைக்கும் அன்னை
அறியாது ஆடி ஓடி
விழுந்தோறும்
எடுக்கும் அப்பன்
விளையாடும் போது
தோழன்
தொழுவோர்க்கெல்லாம்
காக்கும் தெய்வம்
சொந்தமாய்
எடுப்போர்க்கெல்லாம்
குழந்தை
இப்படி உலாவி வரும்
எம் சற்குரு
சிவானந்தர் வாழியவே''

- சி. கனகரத்தினம் -
தலைவர், யாழ் திவ்விய ஜீவன சங்கம்

# செவ்வாயில் தெரிந்த 'மனித' முகம்!

செவ்வாய்க் கிரகத்தில் ஏதேனும் ஒரு காலத்தில் மனிதர்களைப் போல அறிவு ஜீவிகள் இருந்தனரா? அவர்கள் சிற்பம், சட்டுமானக் கலை ஆகியவற்றை அறிந்தவர்களாக இருந்தனரா? அவர்கள் செதுக்கிய சிற்பம் அல்லது எழுப்பிய கட்டுமானம் இன்னமும் செவ்வாய்க் கிரகத்தில் அழியாமல் உள்ளதா?

சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய்க் கிரகத்தை ஆராய அமெரிக்கா அனுப்பிய வைக்கிங்(Vi ing) விண்கலம் எடுத்து அனுப்பிய படங்கள் இப்போது இக் கேள்விகளை எழுப்பியுள்ளன.

வைக்கிங் எடுத்த படங்களில் ஒன்றில் செவ்வாயின் நிலப்பரப்பில் உள்ள ஒரு பாறையானது மனித முகம் போலக் காணப்பட்டது. இது அப்போதே விசித்திரமாகக் கருதப்பட்டது. சூரிய ஒளி குறிப்பிட்ட கோணத்தில் அப் பாறையில் விழுந்தபோது அப்பாறையின் வடிவம், அதில் அமைந்த குழிவுகள் காரணமாக நிழல் ஏற்பட்டு, தற்செயலாக அது மனித முகம் போல அமைந்து வைக்கிங் எடுத்த படத்தில் அவ்விதம் விழுந்திருக்கலாம் என்றே அப்போது கருதப்பட்டது. அந்த மனித முகப் பாறையின் நீளம் சுமார் ஒரு மைல்.

தவிர, 5 பக்கங்களைக் கொண்ட 'பிரமிட்' வடிவங்களும் வைக்கிங் எடுத்தபடங்களில் காணப்பட்டன. இவையெல்லாம் புதிராகவே உள்ளன.

### படங்கள் ஆய்வு

இந்த விஷயங்கள் பின்னர் தீவிரமாக ஆராயப்படவில்லை. பின்னர் அமெரிக்க விஞ்ஞானத் துறை எழுத்தாளர் ரிச்சர்ட் சி. ஹோக்லண்ட் ''செவ்வாய் திட்டம்'' என்னும் பெயரில் லாப நோக்கற்ற ஆராய்ச்சி ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். அந்த அமைப்பின் ஆதரவின் கீழ் பல்வேறு துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வைக்கிங் எடுத்த படங்களையெல்லாம் ஆராய முற்பட்டனர். கடந்த சுமார் 5ஆண்டுகளாக இந்த ஆய்வுகள் நடந்தன. அவர்கள் தமது ஆய்வுகளுக்குக் [illegible] பயன்படுத்தினர்.

இந்த ஆய்வுகளிலிருந்து, செவ்வாயில் உள்ள மனித முகப் பாறையும், பிரமிட்களும் செவ்வாயில் என்றோ ஒரு காலத்தில் இருந்திருக்கக் கூடிய நாகரிக மிக்க செவ்வாய்க் கிரகவாசிகளால் வடிக்கப்பட்ட சிற்பங்களின் புராதனச் சின்னங்களாக இருக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இல்லாததால் மனிதர், விலங்குகள், செடி கொடிகள் போன்ற ஜீவராசிகள் வசிக்க இப்போது வாய்ப்பு இல்லை. என்றாலும், முற்காலத்தில் இந்தக் கிரகத்தில் ஆறுகள் ஓடிக் கொண்டிருந்திருக்கலாம் என்பதற்குப் புகைப்படச் சான்றுகள் உள்ளன.

இவை எளிதில் விளக்கம் கூற முடியாத புரியாத புதிர்களாக உள்ளன என்று கூறுவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன என்று அக் குழுவினர் கூறினர்.

செவ்வாயில் உள்ளவற்றை மேலும் தீவிரமாக ஆராய்ந்தால் மேற்கொண்டு துப்புக் கிடைக்கலாம், அதற்கு என்ன செய்வது?

### ரஷ்யாவுக்குக் கோரிக்கை

செவ்வாயைச் சுற்றும் ஃபோபோஸ் துணைக்கோளை ஆராய ரஷ்யா இப்போது செவ்வாய்க்கு இரு விண்கலங்களை அனுப்பியுள்ளது. ரஷ்யா தனது விண்கலங்களைக் கொண்டு புதிராக உள்ள இச் 'சிற்பங்களை' மேலும் விரிவாகப் படம் எடுக்க வேண்டும் என்று ரிச்சர்ட் ஹோக்லாண்ட் கூறினார்.

இது குறித்துத் தங்களது அமைப்பு ரஷ்யாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

அமெரிக்க முன்னாள் விண்வெளிவீரரும், விஞ்ஞானியும், 'செவ்வாய் திட்ட' உறுப்பினருமான டாக்டர் பிரியன் ஓலியரி ரஷ்ய ஃபோபோஸ் திட்டத்துக்குப் பொறுப்பான விஞ்ஞானிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.


'வைக்கிங்' எடுத்த படங்களை ஆராய்ந்து அதன் பேரில் தாங்கள் கொண்டுள்ள முடிவுகள்பற்றியும் ரஷ்யவிஞ்ஞானிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளதாக ஹோக்லாண்ட் சொன்னார்.

'செவ்வாய் சிற்பங்களை' விரிவாகப் படம் எடுத்து அப் படங்களை அளிக்குமாறும் ரஷ்யாவிடம் மேற்குறிப்பிட்ட அமெரிக்க அமைப்பு கோரியுள்ளது. தங்களது கோரிக்கையை ரஷ்யா ஏற்றுக்கொண்டுள்ளதாக ஹோக்லாண்ட் தெரிவித்தார்.

அமெரிக்கா 1992 ஆம் ஆண்டுவாக்கில்தான் செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலத்தை அனுப்பவிருக்கிறது. எனவேதான் அமெரிக்க அமைப்பு இப்போது ரஷ்ய உதவியை நாடியுள்ளது. ★




## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வீரவாகு சுப்பிரமணியம்

பிறப்பு: 27 - 09 - 1927 இறப்பு: 18 - 07 - 1984

எங்கள் அன்பின் திருவுருவே பாசத்தின் ஜோதியே இல்லத்தின் ஒளியே நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகளாயினும் எத்தனை ஆண்டு சென்றாலும் உங்கள் அன்பை மறக்க முடியாமல் தவிக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடையுமாறு
இறைவனைப் பிரார்த்தித்து

உங்கள் நினைவால் வாடும்
**மனைவி, மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

தேவாலய வீதி,
சங்கானை.

(5597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பர் 1-ஐத் தேடும் பூஜ்யங்கள்

தனி நபரைச் சுற்றி இயங்கும் கட்சி அரசியல், தனி நபர் இறந்த பிறகு கட்சிக்குத் தலைமை வகிப்பதற்குச் செல்வாக்குள்ள தலைவர் ஒருவரைத் தேடவேண்டிய நிலையில் வைக்கப்படும்பொழுது அதுவே ஒரு பிரச்சினையாகி விடுகிறது.

எம். ஜி. ஆர். இருந்தபொழுது ''அவர்தான் நம்பர் 1; நாங்களெல்லாம் வெறும் பூஜ்யங்களே'' என்று தற்பொழுது ஜெயலலிதா அணியை விட்டு விலகிவிட்ட முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு ஒப்புக்கொண்டார்.

அ. இ. அ. தி. மு. க. கட்சி இரண்டாகப் பிளந்தபொழுது நம்பர் 1 ஸ்தானத்திற்கு எம். ஜி. ஆருடைய துணைவியார் ஜானகியைச் சிலரும் ஜெயலலிதாவைச் சிலரும் ஏற்றுக்கொண்டதன் விளைவாக, கட்சி இரண்டுபட்டது.

இரு தலைவிகளுக்குமே எம். ஜி. ஆருக்கு இருந்த செல்வாக்கு இல்லை என்பது ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தும், அந்தந்தக் கோஷ்டிகள் தலைவிகளின் மதிப்பை உயர்த்துவதற்காக ஏராளமான பணம் செலவழித்துப் பிரசாரத்தில் ஈடுபட்டன.

ஆட்சி கைவிட்டுப் போன பிறகு, ஜானகியின் மதிப்பு வீழ்ந்துவிட்டாலும் அவருடைய அணிக்கு அவர்தான் நம்பர் 1; ஆக இருக்கிறார். இப்பொழுது நெடுஞ்செழியன் கோஷ்டி ஜானகி அணியுடன் இணைவதற்கு, நெடுஞ்செழியனுக்கு முதல் ஸ்தானத்தை அளிக்க அந்தக் கோஷ்டி முன்வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஜெயலலிதா தனது கவர்ச்சி அரசியல் யுக்திகளினல் எம். ஜி. ஆருக்கு இருந்த அதே மதிப்பு தனக்கு இருப்பதாகக் காட்டிக் கொண்டார்:

ஸ்தானத்திற்கு ஏற்ற மதிப்பைப் பெறும் என்பது அரிச்சுவடிக் கணக்கு.

0. 1 க்குப் பின்னல் எத்தனை பூஜ்யங்கள் சேர்ந்தாலும் அவற்றிற்கு மதிப்பில்லை என்பதோடு, நம்பர் 1 இன் மதிப்பையும் ஆயிரமாகவோ, லட்சமாகவோ, கோடியாகவோ

> தி.மு.க இரண்டாக உடைந்து அ.தி.மு.க பிறந்தது.
>
> அ.தி.மு.க கடந்த ஜனவரியில் இரண்டாக உடைந்து அ.தி.மு.க 'ஜா' அணி, அ.தி.மு.க 'ஜெ' அணி- என்று இரண்டு பிறந்தன.
>
> இப்போது அ.தி.மு.க 'ஜெ' அணி இரண்டாக உடைந்து விட்டது.
>
> ஓர் அணிக்கு ஜெயலலிதா தலைவி. இரண்டாவது அணிக்கு நாவலர் தலைவர்.
>
> நாவலர் அணி மீண்டும் ஜானகி அணியுடன் சேர்ந்து கொள்ளுமா? அல்லது அ.தி.மு.க 'நா' அணி என்று ஒன்று புதிதாக உருவாகுமா?
>
> இதற்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் தமிழ் நாடு அரசியல் குழம்பியுள்ளது.
>
> இதன் மத்தியில் 'ஜா' அணியின் தலைவி ஜானகி அம்மாள் நேற்று அமெரிக்காவில் இருந்து சென்னை திரும்புவதாக இருந்தார்.
>
> ஜானகி திரும்பிய பின்னர் நாவலரின் நிலைதெரியலாம் என்று சொல்லப்படுகிறது.
>
> இந்தக் கட்டத்தில் ஜெயலலிதாவின் அரசியல்வாழ்வு எப்படி அமையும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

ஆனல் திருநாவுக்கரசு எதிர்ப்புக் கொடியை உயர்த்தி அவருக்கு முன்னல் ஒரு புள்ளியைக் குத்திவிட்டார். ஜெயலலிதா பூஜ்யம் என்று இல்லாவிட்டாலும் புள்ளி 1 (0.1) என்ற நிலைக்கு வீழ்த்தப்பட்டு விட்டார் என்றே தோன்றுகிறது.

மதிப்பு முழுதாக இருக்கு

வரையில் ஒன்றிற்குப்பின்னல் சேரும் பூஜ்யங்கள் அந்தந்த உயர்த்த முடியாது.

ஜெயலலிதாவின் இந்த வீழ்ச்சி அவரே தேடிக்கொண்டதுதான். தேர்தல் நிதியைச் சொந்தப் மணமாகக் கருதிப் பொருளாளர் என்ற பதவியில் இருப்பவரை நம்பாமல், தனது குடும்ப நண்பர் மூலம் கட்சிப் பணத்தை விரயமாக்கி வருகிறார் என்ற திருநாவுக்கரசுவின் குற்றச்சாட்டுக்கு அவர் இன்னும் பதில் கூறவில்லை.

ஜெயலலிதாவின் எதேச்சாதிகார நிர்வாகத்தை ஆட்சேபித்து விலகி விட்ட மற்ற மூத்த தலைவர்களான நெடுஞ்செழியன், அரங்கநாயகம், பண்ருட்டி ராமச்சந்திரன் போன்றோரின் இழப்பு கட்சித் தொண்டர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதோடு, ஜெயலலிதாவின் தலைமை குறித்து மக்களிடையே ஒரு சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜெ. அணியுடன் கூட்டு வைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டிய இ. காங்கிரஸ் கட்சியினர் கூட இப்பொழுது தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

அவரது அணிக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பெரிய பாதிப்பை ஜெயலலிதா எப்படி நிவர்த்திக்கப்போகிறார் என்பது சுவாரஸ்யமாகக் கவனிக்கப்படும் விஷயமாக இருக்கிறது.

ராஜீவ் காந்தியை டில்லியில் சந்தித்துத் தன்னை முதல்வராக ஏற்றுக்கொள்ளும்படி காங்கிரஸ் கூட்டணிக்கு ஏற்பாடு செய்தால் அவருடைய மதிப்பை ஓரளவு மீட்டுக்கொள்ளமுடியும் என்று நினைக்கிறார்.


ஆனல் மிகவும் சர்ச்சைக்கிடமான அரசியல் பேரங்களில் அவர் சிக்கிக்கொண்டிருப்பதாக அவருடைய முன்னள் விசுவாசிகளே இப்பொழுது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டும்பொழுது, காங்கிரஸ் கூட்டணிக்கு ஜெயலலிதாவை தலைவராக நியமிப்பதற்குத் தமிழக காங்கிரஸ் கட்சியில் மூப்பனர் கோஷ்டியிடமிருந்து கடுமையான எதிர்ப்பு எழும். தேர்தலிலும் ஒத்துழைப்பு இல்லாமல் வெற்றி வாய்ப்புக்கள் குறைந்து போகும்.

ஜெயலலிதாவுக்குச் சாதகமாக இருக்கும் ஒரு விஷயம், மூத்த தலைவர்கள் சிலரின் இழப்பை ஈடுகட்டும் வகையில் பெரும்பான்மை அடிமட்டத்தில் மாவட்டம் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள் அவரையே தலைவராக ஏற்றுக்கொண்டு அவர் பக்கமே உறுதியாக இருப்பதாகவும், முன்னள் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் உள்ளிட்ட செல்வாக்குள்ள சில தலைவர்களும் பொதுக்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவும் ஜெயலலிதாவின் தலைமைக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தன்மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை இப்பொழுது சொல்பவர்கள்' ஆட்சிக்காலத்தில் பெருமளவு ஊழல் குற்றத்தைப் புரிந்தவர்களே என்றும் தன் அணியில் இருந்த ஊழல் பேர்வழிகள் பிரிந்து போனதால் நஷ்டம் எதுவுமில்லை என்றும் ஜெயலலிதா பொதுக்கூட்டங்களில் பேச முடியும்

அநேகமாக எல்லாக் கட்சிகளிலுமே உட்பூசல், தேர்தல் நிதி குறித்துச் சர்ச்சை, கட்சித்தலைமையின் எதேச்சாதிகாரப் போக்கு ஆகியவை பற்றி அதிருப்தி இருந்து கொண்டிருக்கிறது.

வாக்காளர்களைப் பொறுத்தவரை ஊழலற்ற ஆட்சியைத் தரக்கூடிய தலைவர் இவர் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். அந்த நம்பிக்கையைப் பெறுவதற்கு ஜெயலலிதா தனது தகுதிகளை இனி மேல்தான் நிரூபிக்கவேண்டும். ★




உஷா தையல் மெஷின் தொடர்

டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்)
ட்ரொப் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும்.
ரூபா 3850/-
தையற்காரர் மொடல் ரூ. 4000/-

எக்ஸெலா 30 (சிக்சாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-

சிக் சாக் எக்ஸெலா 55
பிக்கொட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலைவிளிம்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன.
ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்.

விநியோகஸ்தர்:
உஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
68, அத்திடிய றோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381
Mel Ads 9353


# உலக சாதனை புரிந்த ஆழிக்குமரன் ஆனந்தன்!

ஈழத் தமிழனின் புகழை உலகச் சாதனைப் பதிவேட்டில் (Guinness Book of World Record) பதித்து சாவைத் தழுவிய ஆழிக்குமரன் ஆனந்தன் மறைந்து இன்று 5 ஆண்டுகள் ஆகின்றன.

தனித்து நின்று ஏழு உலக சாதனைகளைப் புரிந்த ஒப்பற்ற உலக வீரன் ஈழத்தமிழ் வீரன் ஆழிக்குமரன் ஆனந்தனே ஆவான்.

வல்வெட்டித்துறை தெணியம்பையைச் சேர்ந்த விவேகானந்தன் ஆனந்தன் என்ற வி. எஸ். சி. ஆனந்தனின்

> ஆழிக்குமரன் ஆனந்தனின் ஐந்தாவது நினைவு தினம் இன்று. அன்னரின் நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

வீரத் தொடர்க் காவியத்தின் முதலாவது அத்தியாயம் வல்வெட்டித்துறை (ரேவடி) சுங்கக் கட்டிடத்துக்கு முன்னுள்ள கடல் ஓரத்திலே ஆரம்பமாகியது.

34 மைல் தூரமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து 19 வயதில் பாரிய சாதனையை நிலை நாட்டினர். அதன் பின் தலைமன்னரில் இருந்து தனுஷ்கோடிக்கும் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னருக்கும் நீந்தி உலகசாதனை ஒன்றை நிலைநாட்டினர்.

சிறுவயதிலேயே இளம்பிள்ளைவாத நோயினல் (போலியோ) பாதிக்கப்பட்டு ஒழுங்காக நடக்க முடியாமல் இருந்த ஆனந்தன் நீச்சல் சாதனையின் மூலம் ஆழிக்குமரனக மாறினர்.

சட்டத்துறைப் பட்டதாரி வக்கீல், இலண்டன் விஞ்ஞான துறைப் பட்டதாரி — இப்படிக் கல்வித்துறையிலும் சாதனை புரிந்தவர் ஆழிக்குமரன் ஆனந்தன் ஆவார்.

மோட்டார் விபத்திலே இடுப்பு முறிந்து எலும்புகள் உடைந்து மண்ணீரல் அகற்றப்பட்டு 6 மாதங்களாக மருத்துவமனையில் படுத்த படுக்கையாக உயிருக்குப் போராடிய ஆழிக்குமரன் 6 மாதங்களாக ஊன்றுகோலின் உதவியுடன் நடமாடியவர் ஆவார். அதன் பின்னரும் 5 உலக சாதனைகளை நிலைநாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே உள்ள ஆங்கிலக் கால்வாயை இதுவரை யாரும் நான்கு முறை கடந்ததில்லை. ஆயினும் அஞ்சாத ஆனந்தன் அதற்கும் துணிந்தார்.

மருத்துவரின் எச்சரிக்கைக்கு மாருக அவர் நீச்சலை ஆரம்பித்தார். ஆங்கிலக் கால்வாய் ஆபத்தானது.

அவர் தனது நீச்சல் முயற்சியை ஆரம்பிக்கும் முன் அவர் கூறிய வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை.

'குளிர்ந்த கடலே எனக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது. அதற்கேற்ப என்னைத் தயார் செய்ய எனக்குக் கால அவகாசம் கிடைக்கவில்லை. எனது நாட்டுக் கடலோ வெப்பமானது, நல்ல வாய்ப்பான தாகும்'

—இப்படிக்கூறிவிட்டு அவர் நீந்த ஆரம்பித்தார் அவரது முயற்சி 5 மணித்தியாலங்களாக நீடித்தது. அவ்வேளை கடும் குளிரினல் பிடிக்கப்பட்டார் ஆனந்தன். இறுதியில் ஆழியிலேயே மயங்கி விட்டார் என்ற செய்தி உலகத்தையே கலங்கச் செய்தது.

ஆங்கிலக்கால்வாயில் ஆழிக்குமரனின் ஆவி சங்கமமாகியது.



ஆழிக்குமரன் ஆனந்தன்

ஆங்கிலக் கால்வாய் நீச்சல் சங்கத்தின் 58 வருட வரலாற்றில் இதுவே முதல் மரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆழிக்குமரன் என்றுமே பொன்னையும் பொருளையும் விரும்பாதவர்.

''என்றேஒரு நாள் மரணம் என்னைத் வந்தடையும்போது எனது இறுதிக் கிரியைகள் நான் பிறந்த மண்ணன வல்வெட்டித்துறையில் இடம் பெறவேண்டும். இது தான் எனது ஆசை'' என கூறிக் கொண்டிருந்த ஆனந்தனின் அஸ்தி, அவர் பிறந்த வல்வெட்டித்துறை ஊறணிக் கடலில் கரைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

25 - 5 - 43 ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறையில் பிறந்த ஆழிக்குமரன் 6-8-84 இல இங்கிலாந்து ஆங்கிலக் கால்வாயில் சங்கமமானர். ★

- ஈழத்தீபன் -

## உருவம் தெரியும் டெலிபோன்

தொலைபேசியில் பேசும்போது மறுமுனையில் பேசுகிறவரின் உருவத்தைத் திரையில் பார்க்கும்வசதியுள்ள டெலிபோனை ஜப்பானைச் சேர்ந்த மிட்சுபிஷி நிறுவனம் தயாரித்துள்ளது.

மறுமுனையில் பேசுகிறவரின் உருவம், டெலிபோனில் இணைக்கப்பட்டுள்ள நாலரை அங்குல திரை கொண்ட கறுப்பு-வெள்ளை மினி டெலிவிஷனல் தெரியும். இந்த நவீன டெலிபோனின் விலை 15 ஆயிரம் ரூபாய்.

மிட்சுபிஷி நிறுவனம் இதுவரை இதுபோன்ற 36 ஆயிரம் டெலிபோன்களைத் தயாரித்துள்ளது. மேலும் 64 ஆயிரம் டெலிபோன்களுக்கு ஆர்டர் வந்துள்ளது. ★

## தேநீர் தயாரிக்க செலவின்றி வெந்நீர்

தேநீர் தயாரிப்பதற்கு வெந்நீர் தேவை.

வெந்நீர் தயாரிப்பதற்கு மண்ணெண்ணெய், அடுப்புக்கரிபோன்று ஏதாவதுஓர் எரிபொருள் அவசியம்.

எவ்வித எரிபொருளையும் பயன்படுத்தால் சூரிய ஒளியைக் கொண்டு வெந்நீரைத் தயாரித்துக் கொள்ள 'சோலார் டீ பொய்லர்' ஒன்று இப்போது உருவாக்கப்பட்டுள்ளது.


ஜோத்பூரில் உள்ள வரண்ட மண்டல ஆராய்ச்சி நிறுவனத்தின் காற்று விசை, சூரிய சக்தி உபயோகப்பிரிவில் பணியாற்றும் என். எம். நஹார் என்னும் விஞ்ஞானி இதை வடிவமைத்துத் தயாரித்துள்ளார்.

தெருவோர டீக்கடைகள், சிறிய ஹோட்டல்கள், அலுவலக கான்டீன்கள் ஆகியவற்றில் இச்சாதனத்தைப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 125 முதல் 150 கப் வரை டீ தயாரிக்க இதனைப் பயன்படுத்த முடியும்.

நான்கு சக்கரத் தள்ளுவண்டியிலும் இச் சாதனத்தை நிறுவிக்கொள்ள முடியும்.

இச்சாதனத்தைப் பயன்படுத்தினல் 677 கிலோ விறகு அல்லது 78 லீட்டர் மண்ணெண்ணெயை மிச்சப்படுத்த இயலும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.




★ நாமிருவர் ★
நமக்கோர் இனியநாள்



செல்விகள்
யாழினி, ஜனனி

யாழினி ஜனனி சோதரிகள் நாங்கள்
யாவரையும் போலே பூவுலகிற் பிறந்து
காலடிகள் இன்று களிப்போடு வைப்பேம்!
ஐந்தாவது மூன்ருவது ஆண்டுகளில் முறையே
ஆகஸ்டு ஆறு எமக்கினிய நாளாகும்;
ஆதலினல் உங்கள்முன் அணைத்தபடி நிற்கின்ருேம்!
இவ்வினிய நாளில் எம்மை வாழ்த்திடுவோர்
எம் அப்பா, அம்மா கனடாவில் வதியும்
தாத்தா, மாமாமார், அன்ரிமார் அனைவருடன்
அப்பம்மா சேர்ந்து அனைத்து உறவினரும்.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு;
யாழ்ப்பாணம்.

ஐயனர் கோவிலடி,
கருவில்,
ஊர்காவற்றுறை.

(5452)



மீண்டும் மணிக்கூட்டு வீதியிலிருந்து....



எமது வழமையான சேவைகளை ஆரம்பித்துள்ளோம்.
★ உங்கள் மனம்கவர் யாழ். வேட்டி, சால்வை
★ நீடித்து உழைக்கும் மின்தறி உற்பத்திகள்
★ தரம் மிக்க கைத்தறிப் புடைவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
★ புடைவை பதப்படுத்தலும் நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
6/2 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C 6038)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

சக்கர வாளில் (Circular Saw) வேலை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த வேலை ஆட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம் நேரில வரவும்.

**வைத்தியலிங்கம் மரக்காலை & அரிவு ஆலை**

பலாலி வீதி, திருநெல்வேலி.

(5588)

## எமது நேற்றைய புதிய வெளியீடு

★ அர்ஜுன் - மாதுரி ★

★ ரகுவரன் - ரஞ்சனி ★

நடித்த

A. V. M மின்

**"தாய் மேல் ஆணை"**

(PYRAMID ORIGINAL)

அடுத்த வெளியீடு:-

**மனசுக்குள் மத்தாப்பு**

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(C. 6071)

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

**Computer Programming in Basic Language**

ஆரம்பம்: 8 - 8 - 88

திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்

பயிற்சிக்காலம்: 40 நாள்

கட்டணம்: ரூபா 750/-

(இரு பிரிவு களாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

கூடிய நேர செய்முறைப் பயிற்சி AMSTRAD (MICRO COMPUTER), E C 2000 (P C), COMMODORE சம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

DIPLOMA IN COMPUTER PROGRAMMING

COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC AND COBOL LANGUAGE

பயிற்சிக்காலம்: 6 மாதம்

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்

## UNIKCO COMPUTER CENTRE

No· 5, மின்சார நிலைய வீதி,

2 ஆம் ஒழுங்கை

யாழ்ப்பாணம்.

(உப தபாற் கந்தோர் அருகாமை)

(C 6039)


மானிப்பாய் கோவில் பற்று

லயன்ஸ் கழகம்

## சீட்டிழுப்பு முடிவு

மேற்படி கழகத்தினரால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி ஈட்டிய டிக்கட்டுக்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு டிக்கட் இல:- | | 9401 |
| 2 ஆம் '' | '' '' :- | 7907 |
| 3 ஆம் '' | '' '' :- | 6418 |

**ஆறுதல் பரிசுகள்**

**டிக்கட் இலக்கம்**

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு:- 6748 | 2 ஆம் பரிசு:- 7846 |
| 3 ஆம் பரிசு:- 8022 | 4 ஆம் பரிசு:- 8078 |
| 5 ஆம் பரிசு:- 2393 | 6 ஆம் பரிசு:- 18 |

வெற்றியீட்டிய டிக்கட்டுகளின் உரிமையாளர்கள் கடித மூலம் செயலாளர் திரு. C. பாலகிருஷ்ணன் லோட்டன் வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

- தலைவர்

(5591)


## Victors - Vacancy

எமது கிளை ஸ்தாபனம் விக்ரேஸ் மியூசிக் சென்ரர், இல. 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி. இவ் ஸ்தாபனத்தில் மனேஜராகப் பணிபுரிவதற்கு ஆள் தேவை. ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் விக்ரேஸ், இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/6075)


கட்டுவன்வாழ் மக்களுக்கு

## ஓர் நற்செய்தி

உதயன்/ சஞ்சீவி பத்திரிகைகளை கட்டுவனில் விற்பனை செய்யப் புதிய முகவர் நியமிக்கப்பட்டுள்ளார். 06-08-1988 தொடக்கம் அதிகாலையில் உதயன்/ சஞ்சீவி பிரதிகளை கீழ்க்காணும் விலாசத்தில் அவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு. நல்லதம்பி அருணகிரிநாதன்**

உப தாபாற் கந்தோர் அருகாமையில்,

கட்டுவன்,

தெல்லிப்பளை


## CEYGMA PUMPS
## சிக்மா பம்ப்ஸ்

### விலை குறைப்பு

எமது தொழிற்சாலை மீண்டும் நாவற்குழியில் இயங்குவதால் உற்பத்தி செலவு குறைந்துள்ளது. அதற்கேற்ப எமது மின் மோட்டர்களின் விலை களை குறைத்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளருக்கும், விற்பனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

**புதிய விலைகள்.**

| | | |
|---|---|---|
| ½ HP | 1'' X 1'' | - 3500 00 |
| ½ HP | 1½'' X 1¼'' | - 3950.00 |
| 1 HP | 2'' X 1½'' | - 5250 00 |
| 1½ HP | 2'' X 2'' | - 5850.00 |

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்

**யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்**

**United Agro Engineering**

274/1, ஆஸ்பத்திரி வீதி,

(பெரியாஸ்பத்திரி முன்பாக)

யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:

நாவற்குழி,

கைதடி.

(C 6069)

## LEARNING FRENCH

AUDIO VISUAL METHOD

NEW TERM COMMENCES on 08-08-1988 for biginners and other level.

Join:

**THE ALLIANCE FRANCAISE De JAFFNA**

130, 1st Cross Street, Jaffna,

(C 6068)


யாழ். (மாநகர) வர்த்தக ஊழியர் சங்க

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 07-08-1988 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. மா. இலக்குமிகாந்தன் தலைமையில் யாழ். விக்ரோரியா வீதியில் உள்ள சுபாஸ் உல்லாச விடுதியில் நடைபெற இருப்பதால் சகல வர்த்தக நிலையங்களிலும் கடமைபுரியும் ஊழியர்களையும் கலந்து சமுகமளிக்கும்படி சங்கச் சார்பில் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

க. தியாகலிங்கம்

(கௌரவ செயலாளர்)

(5449)


## பிரயாண ஒழுங்குகள்

**சவூதி அரேபியா, குவைத், பஹாரின், சிங்கப்பூர்**

ஆகிய நாடுகளுக்கு துரித கதியில் பிரயாணம்

**House Maid சிங்கப்பூர்**

உடன் தேவை

சம்பளம்: 250 S.D

வயதெல்லை: 20 - 30 வரை

Passport, கலர் படம்.

Passport Size படம் 6 தேவை

**முற்பணம் அறவிடப்படமாட்டாது.**

பிரயாணம் செய்ய கடவுச் சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச் சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 முதல்மாலை 4.30 மட்டும் திறக்கப்படும்.

தலைமைக்காரியாலயம்:

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரதநிலைய வீதி,

சுன்னாகம்.

கிளை. 1

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

குப்பிளான் சந்தி,

குப்பிளான்.

கிளை. 2


**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

வன்னிச்சி கோவிலடி,

வல்வெட்டி.

(C6070)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கதிரேசு மாரிமுத்து**

நயினாதீவு

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 4-1912 | 7-7-1988 |

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று பாலூட்டி தாலாட்டி வளர்த்து இப்பாரினில் சிறப்புற வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் அன்பு அரவணைப்புகளும் அன்பு கனிந்த தெள்ளுந் தமிழ் வார்த்தைகளும் எங்கள் நெஞ்சில இருந்தும் அகலமாட்டா.

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

மகன்

6ம் வட்டாரம், நயினாதீவு. — ஆ. க. குமாரசாமியும், சகோதரர்களும்.

(5465)


## யாழ் - கொழும்பு
## விமான சேவை

இன்று 6 ஆம் திகதி ஐந்து ஆசனங்கள் கொண்ட இரண்டு விமானங்கள் சேவையில் ஈடுடுத்தப் பட்டுள்ளன. சில ஆசனங்கள் காலியாக உள்ளன.

பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

## MACK TRAVELS

பருத்தித்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

(C/6059)


## காணவில்லை



செல்வன்

**துரைராஜசிங்கம் பிரேமானந்தன்**

தோற்றம்: 06-08-1970

சாணாமற்போன திகதி: 22-10-1987

துரைராஜசிங்கம் பிரேமானந்தன் என்ற 17 வயது இளைஞரை 22-10-1987 இல் இருந்து இன்றுவரை காணவில்லை. இவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மாணவர் ஆவார். இவரின் பிறந்த தினம் ஆகிய இன்று (06 - 08 - 1988) இவரின் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா சகோதரர், சகோதரிகள், மைத்துனர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

இவரைப்பற்றி இந்திய அமைதிப் படையிடம் விசாரித்தும் எதுவித பலனும் கிடைக் வில்லை ஆகையால் பிரேமானந்தன் பற்றி எவருக்கும் விபரம் தெரிந்தால் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T. K. துரைராஜசிங்கம்,

ஸ்டேஷன் வீதி, தெல்லிப்பளை.

(5436)

## 10ஆம் வருட நினைவு அஞ்சலி

(06 - 08 1988)

IN LOVING MEMORY OF OUR BELOVED MUMMY



**திருமதி நிற்று றூபி லீனஸ்**

வித்தூன்றி, வித்தைச் செடியாக்கி செடியை மரமாக்கினீர்கள் ஓங்கித் தழைத்த மரத்தினடியில் நிழலுக்குச்கூட நீங்கள் ஒதுங்காமல் போனதேனோ?

உங்கள் நினைவில் வாழும்,

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி, உறவினர்.**

ஊர்காவற்றுறை.

(5446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் தேர்த் திருவிழாவில்

மில்க்வைற் சகாயம்

மில்க்வைற் தயாரிப்புகள் இருபது ரூபாவுக்கு வாங்குவோருக்குப் பொலித்தீன் பையில் கவர்ச்சிகரமான

பரிசுகள் வழங்கப்படும்.

இன்னும், மேலுறைகளுக்கும் விசேட பரிசுகள் உண்டு.



# சஞ்சீவி

06 - 08 - 1988 சனிக்கிழமை



"தன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானே திருந்திவிடும்"

- சுவாமி சிவானந்தர்

இன்று சுவாமிகள் மகா சமாதியடைந்த இருபத்தைந்தாவது புண்ணிய தினமாகும். 20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி

" சிவானந்தத்தேன் "

என்ற சிறந்த நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்

" மில்க்வைற் "


## வார இறுதி..

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

படை வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

ரயில்வேத் திணைக்களம் இது குறித்து தெரிவித்ததாவது:-

வெள்ளி, சனி தினங்களில் இரவு 11. 30 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் விசேட ரயில்கள், அடுத்த நாள் முற்பகல் 11.30 மணியளவில் யாழ் வந்தடையும்.

யாழ்ப்பாணத் தில் இருந்து சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 12.45 மணிக்கு புறப்படும் இந்த ரயில்கள் இரவு 9.50 மணிக்கு கோட்டையில் சென்றடையும்.

வவுனியா வரையான யாழ். தேவி ரயில் சேவை வழமை போல் தினமும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ-9)

### அறிவித்தல்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக உறுப்பினரும் நீண்டகால அரசியல்குழு உறுப்பினருமான தோழர் அ.வைத்திலிங்கம் அவர்கள் 04 - 08 - 88 வியாழனன்று காலமாகிவிட்டார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நாளை 07 - 08 - 88 ஞாயிறு காலை 10 மணிக்கு ஈமக்கிரியைகள் நடைபெறும்.

(5472) யாழ். மாவட்டக்குழு.

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம்

எமது முன்னாள் அதிபர் திரு. இளையதம்பி சபாலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கழகம் தமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சே. சிவசுப்பிரமணிய சர்மா
செயலாளர்

யா. இ. க. ஆ. க.
05 – 08 - 1988

(C 6081)

### அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்தமையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், இதய அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரரின் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்.

அதிபர், ஆசிரியர்,
06 – 08 – 1988 மாணவர்
யா.இ.க. (C 6078)

### யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

எமது முன்னாள் அதிபரும், எமது சங்கத்தின் முன்னாள் தலைவருமான திரு. இ. சபாலிங்கம் அவர்கள் இங்கிலாந்தில் 4- 8- 88 அன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

''சபையை அலங்கரித்து;
சந்ததியை உருவாக்கி!
சன்மார்க்க வழிதனிலே;
எம்மவரை வழி நடத்தி!!
சென்றுயோ மன்ன நீ,
எம்மையெல்லாம் விட்டுவிட்டு;
சபாவே நீ என்ஞான்றும்
சிவன்தாளில் இருந்திடுவாய்!!

சு. டிவகலாலா
யா.இ.க.ப.மா.ச. செயலர்
6- 8- 88 (C .6077)

## விரைவான தீர்வு....

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

ஓராண்டு முடிந்து விட்டது. ஆனால் ஈழத்தமிழருக்கு ஏற்பட்ட பலன் என்ன?

அமைதியான முறையில், நம்மை நாமே வருத்தியும், சிறை சென்றும், பதவியைத் துறந்தும், சித்திரவதையை ஏற்றும், சிலர் தீக்குளித்தும் கடந்த ஐந்து ஆண்டு காலமாக ஈழத் தமிழர்களுக்காக நாம் எழுப்பிய குரலை டில்லியில் உள்ள காங்கிரஸ் அரசு கேட்கவில்லை.

ஆனால் இதுவரையில் எள்ளளவும்பயனும் எட்டவில்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டில்லியில் உள்ள—ஆளவந்தவர்களின் ஆணவம் தொடர்ந்து நீடிக்குமாயின் - விரைவில் எமது செயற்குழு, பொதுக்குழு ஆகியவை ஒன்று கூடி இத்தனை அநியாயங்களுக்கும் முடிவுகாண மாபெரும் போராட்டம் ஒன்றை அறிவிக்கும்.

இதற்காக செயற்குழு பொதுக்குழு விரைவில் கூட்டப்படும்.

கூட்டத்தில் ஆற்காடு வீராசாமி, என். வி. என், சோமு, டி. ஆர். பாலு எம். பி. ஆர். டி. சீதாபதி, கன்னியப்பன், ஈழவேந்தன், பரிதிஇளம் வழுதி ஆகியோரும் உரையாற்றினர். (உ-4)

## ஸ்ரீலங்கா....

ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் முறையிடப்பட்டதும் அதே லொறியில் படையினர் அவ்விடத்துக்கு விரைந்தனராம்.

கொழும்பு நோக்கிச் செல்லும் லொறி இது என்று எண்ணி இதனையும் மறித்து கொள்ளையிட முயன்றபோதே கொள்ளையர் மூவரும் ஆயுதங்களுடன் வகையாகச் சிக்கிக்கொண்டார்கள்.

மூவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

(ஒ-164)

## செவ்வாய்......

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

நிறத்துடனும் காணப்படும் செவ்வாய்க்கோளை நன்றாகப் பார்க்கமுடியும்.

கிழக்குத் திசையில் சூரியன் மறைந்த பிறகு நட்சத்திரக் குவியலில் இது தென்படும். அநேகமாக இரவு முழுவதும் இது தெரிய வாய்ப்பு உள்ளது.

செப்டம்பரில் மிக பிரகாசமாகக் காட்சியளிப்பதுடன் மீன ராசியில் அது பரிமளிக்கும்-

இப்படி இந்தியாவில் உள்ள பிர்லா கோள் அரங்க மையடைரக்டர் சித்தார்த் தெரிவித்தார். [எ]

## ஜெயலலிதா...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

தொடரப் போவதாக ஜெயலலிதாவுக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார் திருநாவுக்கரசு.

(ஒ - எ)

## கம்யூ...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

தொழிற்சங்கவாதியாகவும் தொழிற்பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டவர். யாழ். மாவட்டக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகவும், அமைப்பாளராகவும் கடமை புரிந்தவர் இவர். [ஒ-119]

## இந்திய அரசு-----

(1ம்பக்கத் தொடர்ச்சி)

றேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் புதுடில்லி விரைவில் ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

வெளியுறவு அமைச்சு ஊடாக, 'றோ' வைத் தவிர்த்து, அரசியல் மட்டத்தில் இப் பேச்சுக்களை இந்தியா நடத்த வேண்டும்.

### நிறுத்துக

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமைதிப்படையினால் நசுக்க முடியாது.

கெரில்லா இயக்கம் ஒன்றை பலவீனப்படுத்தலாம்; ஆனால் நசுக்கி அழித்துவிட முடியாது. அவர்கள் பலவீன நிலையில் இருக்கலாம், அதன் கருத்து அவர்களை அமைதிப்படை புறக்கணித்து விடவோ அழித்து விடவோ முடியும் என்பதல்ல.

### அர்த்தமில்லை

விடுதலைப் புலிகள் இயக்கம் பங்குபற்றுமல் வடக்கு, கிழக்கில் தேர்தலை நடத்துவதில் அர்த்தமே இல்லை. ஒருவரும் போய் வாக்களிக்கக் கூடாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தால் ஒருவருமே வாக்களிக்கச் செல்லமாட்டார்கள்.

சகஜ நிலைமை வந்த பிறகும் தேர்தலை நடத்துவதற்குமிடையே மூன்று மாதகால இடைவெளி இருக்கவேண்டும். அப்போதுதான் வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து மக்கள் நம்பிக்கை கொள்வர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு தரவில்லை. எனது இயக்கமும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

நாம் இந்திய எதிர்ப்பாளர்கள் அல்லர்; இலங்கைக்கு ஆதரவாளர்கள் நாம். இலங்கையில் இந்தியத் தலையீட்டுக்கு நாம் எதிர்ப்பு— இப்படி திரு. உமாமகேஸ்வரன் பேட்டியில் சொன்னார். (அ-எ)


உங்கள் மங்கள வைபவங்களை

வீடியோப் படமாக்குவதில் ஒரு புரட்சி !

விவரங்களுக்கு எங்களைச் சந்தியுங்கள்

மற்றும்

- ✶ வர்ண நிழற்படப் பிடிப்பு
- ✶ T. V. ✶ டெக் ✶ வீடியோக் கமரா மற்றும்
- ✶ எலக்ரோனிக் உபகரணங்கள் பழுது பார்க்க
- ✶ சூரிய மின் சக்தி அமைப்புகளைப் பெற்றுக்கொள்ள

எவர்விஷன்

21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: எவர்விஷன், C/o. S. நித்தியானந்தன்,

திருத்தணிகை, புங்குடுதீவு - 1. (C 6056)


## திருமதி புஸ்பகாந்தியம்மா நாகநாதர்

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி புஸ்பகாந்தியம்மா நாகநாதர் 4- 8- 88 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பையா நாகநாதரின் (Retired Post master) அன்பு மனைவியும், காலம் சென்ற சின்னத்துரை நல்லம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், ஸ்ரீபுஸ்பநாதன் (Principal, Union College Tellippalai), பாலசுப்பிரமணியம் (Telecom Engineer), காலம் சென்ற திருமதி தர்மாவதி இரத்தினசபாபதி, காலம் சென்ற திருமதி புனிதவதி வேலும்மயிலும் திருமதி பத்மதேவி பொன்னம்பலம், விஜயநாதன் (Accountant Canada), சிவநாதன் (Canada), திருமதி கௌசலாதேவி பிரேமச்சந்திரன் (Montisori, trained, Ontario Canada). திருமதி சத்தியாதேவி சண்முகநாதன் (U K). சத்தியநாதன் (Civil Engineer, Australia) ஆகியோரின் அன்புத் தாயாரும், அங்கயற்கண்ணி (Teacher, mallakam), பரமேஷ்வரி (B. A. Ceylon). இரத்தினசபாபதி (Retired Inspector, Building Dept), வேலும்மயிலும் (S A., A. C. L G. office, vavuniya), காலம் சென்ற பொன்னம்பலம் (Inspector class- I, Building Dept), லலிதா (Canada), கலாமதி (Canada), பிரேமச்சந்திரன் (Accountant Canada), சண்முகநாதன்(Accountant u k), கலாவதி(Australia) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி மகேஷ்வரி நடராஜா, நாகலிங்கம் (Canada), ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரமேஷ், கணேஷ், குமரேஷ், காங்கேயன், இந்திரஜித், சேந்தன், பிரதீபன், சத்தியராம், சாய்கிருஷ்ணு, சாய்சுப்ரன், பிரகாஷ், புனிதா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-08-88 இன்று சனிக்கிழமை மாலை 2 மணி அளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **பிள்ளைகள்.**

(5469)

## திரு. பா. கருணைராஜா
### (கருணை)

உடுவிலை பிறப்பிடமாகக் கொண்டரும் அளவெட்டி வடக்கை (நிச்சிங்க வாசம்) வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. பாக்கியநாதன் கருணைராஜா (05-08-1988) காலமாகி விட்டார். இவர் திருமதி கணேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வன் க. நிரஞ்சன் (யாழ் வளாகம் மாணவன்,)

செல்வன்நிஷாகன் பிரதீபா அஞ்சியா, (மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் பா. தியாகராசா, காலஞ்சென்ற பா. புலேந்திரன் காலஞ்சென்ற ஞானசிரோன்மணி கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார், இவர் காலஞ்சென்ற இ. கனகசபை (துரை) திருமதி க. கனகசபை ஆகியோரின் மூத்த மருமகனும் இரத்தினேஸ்வரன், ஞானேஸ்வரன், கேதீஸ்வரன் யோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 6-8-1988 சனிக்கிழமை அவரது இல்லத்தில்நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**திருமதி கருணைராஜா குடும்பத்தினர்.**
(5605)

## செல்வி சுபோஜினி தேவராசா

செல்வி சுபோஜினி தேவராசா அவர்கள் 4-8-88 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராசா [Former Superintendent Cement Factory K.K.S] பூபதி ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், திருமதி ஜெயந்தி செல்வராஜா, திருமதி நளாயினி சோதிநாதன் (Former Lecturer Jaffna- Batticaloa Universities), திரு. குருநாதன் (Architect) செல்வி வசந்தி (Medical Faculty Kaitady) செல்வி ஜனனி (Medical Faculty Colombo) ஆகியோரின் சகோதரியும், திரு. செல்வராசா (Saudi Arabia) திரு. சோதிநாதன் (Former Lecturer Batticaloa University) ஆகியோரின் மைத்துனியும், திரு. க. மு. தர்மராஜா (Notary Public) திலகவதி ஆகியோரின் பெறு மகளுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 7- 8- 88 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்,**
கோவைநாயகி வீதி,
இருபாலை.
( 5602 )

# மரண அறிவித்தல்கள்

## செல்வி மாதங்கி சிவசுப்பிரமணியம்

செல்வி மாதங்கி சிவசுப்பிரமணியம் அகாலமரணமாகிவிட்டார். இவர் த. சிவசுப்பிரமணியம் (மாலைதீவு), இளைப்பாறிய வரி உத்தியோகத்தரும், முன்னாள் வேலைப்பகுதி முகாமையாளர்(உதயன்) ராதாதேவி ஆகியோரின் அன்புமகளும், மாதுமையின் அன்புச் சகோதரியுமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**செ. வேலாயுதபிள்ளை**
K. K. S. Road,
Inuvil.
(5459)

## அம்பலவாணர் வைத்திலிங்கம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் அம்பலவாணர் வைத்திலிங்கம் (இளைப்பாறிய முன்னாள் அதிபர் உரும்பிராய் இந்துக்கல்லூரி) அவர்கள் காலமானார். இவர் அன்னபூரணியின் அன்புக் கணவரும், திருமதி சிவகாமி அம்பலவாணர் (Chief annalyst Bamber & Bruce Ltd Colombo) திரு. கோபால் சங்கரப்பிள்ளை (பொறியியலாளர் ஸ்கொட்லாந்), திருமதி லீலா தவக்குமாரன், திருமதி விமலா மணிவாசகன், திருமதி அம்பிகா பிரபாகரன் (ஆசிரியை புளியங்குளம்) திரு. மோகன் சுப்பிரமணியம், ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி வி. அம்பலவாணர் (பணிப்பாளர் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு கொழும்பு), திருமதி சந்திரா (ஸ்கொத்லாந்) திரு. தி. தவகுமாரன்(Foreman- வாழைச்சேனை காகித ஆலைக் கூட்டுத்தாபனம்) அமரர் திரு. க. மணிவாசகன் (பொறியியலாளர் இலங்கை துறைமுக அதிகாரசபை) திரு. மா.பிரபாகரன் (ஆசிரியர்) மானிப்பாய் மகளிர் கல்லூரி), திருமதி மோ. நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி காரைக்கால் அம்மையின் அன்பு மருமகனும், திரு. அ பொன்னம்பலம் (இளைப்பாறிய கிராமசேவகர் கொட்டைக்காடு அராலி மேற்கு) அமரர் திரு அ. சரவணமுத்து (முன்னாள் ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமரன், அனுராதா, விஜனுதன். வணி, பிருந்தா, திலீபன், வாசுகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் ஞாயிறு (7-8-88) காலை 10 மணி அளவில் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
**திருமதி வைத்திலிங்கம்**
42/1, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (5607)

## திருமதி. சரஸ்வதி சோமசுந்தரம்

அச்சுவேலி தெற்கு திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் 5. 8. 1988 அன்று காலமானார். அன்னார் சோமசுந்தரம் [இளைப்பாறிய புகையிரத தலைமை பாதுகாவலர்] அவர்களின் அன்பு மனைவியும் கருணாகரன் [கணக்காளர், கொழும்பு] கிருபாகரன்[ சீமெந்து கூட்டுத்தாபனம் புத்தளம்] ஞானகரன், வனிதா, வனஜா, கிரிஜா, ஆகியோரின அன்புத் தாயரும் கணேசமூர்த்தி [தபால் அதிபர்] கஹட்டகஸ்திகிலியா] மார்க்கண்டு [சீமெந்து கூடடுத்தாபனம் காங்கேசன்துறை] ஜான்ஸிராணி, பவளராணி [கல்விக்கந்தோர், புத்தளம்] ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 6. 8. 1988 ஸ்ரீ விக்னேஸ்வர வீதி இல்லத்தில் பிற்பகல் நடைபெறும்.

தகவல்
**ஆ. சோமசுந்தரம்**
(5606)

## பாலகிருஷ்ணன் நாகரேத்தினம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் பாலகிருஷ்ணன் நாகரெத்தினம் அவர்கள் 05-8-88 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்புச் சகோதரரும் சிவமணியின் அன்புக் கணவரும் யோகராணி, யோகநாதன் (மருத்துவக் கல்லூரி மதுரை) சரவணபவன், சோதிராஜா, சிவகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகராசாவின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சாட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சுந்தரமூர்த்தி**
(5473)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06 - 08 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Saturday 6th August 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

# ராஜ ராஜ சோழன் அகந்தை நீங்க இறைவன் நடத்திய திருவிளையாடல்

சோழர் குலத்தில் மிக்க புகழ்பூண்டவன் இராஜராஜ சோழன். அவன் கட்டியது தஞ்சைப் பெரியகோயில்.

கடல் கடந்து கீழை நாடுகளுக்குச் சென்று, அரசர்களை அடிமைப்படுத்தி அவர்கள் வழங்கிய காணிக்கைப் பொருளைக் கொண்டு வந்துகுவித்தான். அப்படியே வடநாடு சென்று, அங்குள்ள மன்னர்களோடு பொருதி தோல்வியுறச்செய்து, அவர்கள் வழங்கிய பொருள்களையும் கொண்டுவந்தான்.

இப்படி மிகுதியாகச் சேர்ந்த பொருளை என்ன செய்யலாம் என்று யோசித்தான். தனக்குப்பெரிய அரண்மனை ஒன்றைக் கட்டிக்கொள்ளலாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றவில்லை. அரண்மனை - இறைவனுக்குக் கோயில் கட்டலாம் என்று தீர்மானித்தான்.

பல சிற்பிகளையும் ஏராளமான தொழிலாளர்களையும் வருவித்துப் பெரிய கோயில் ஒன்றைக் கட்டச்சொன்னான். இறைவன் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக் கிருகத்தின் மேலுள்ள விமானத்தைக் கருங்கல்லால் பெரிய தாகக் கட்டவேண்டும் என்று உத்தரவிட்டான். அதற்கு இப்போது 'தட்சிணமேரு' என்ற பெயர் வழங்குகிறது.

விமான வேலை நடந்து கொண்டிருந்தது. இப்போது தஞ்சாவூர் வழியாகச் செல்லும் மேட்டூர்க் கால்வாய் அக்காலத்தில் இல்லை. ஆழமான கிணற்றிலிருந்துதான் தண்ணீரை எடுக்கவேண்டும்.

தொழிலாளர்கள் வேலை செய்யும்போது அவர்களுக்கு நீர்வேட்கை உண்டாகும். அங்கேயிருந்த சிவபக்தையாகிய கிழவி ஒருத்தி இதை அறிந்து இரவு முழுவதும் தண்ணீர் எடுத்துச் சேமித்து வைத்தாள். பகல் நேரத்தில் சிற்பிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் அந்தத் தண்ணீரை வழங்கித் தாகத்தைத் தீர்த்தாள்.

விமான வேலை முடியும் தறுவாயில் இருந்தது. சிற்பியர் தலைவனுக்கு அந்தக் கிழவி செய்த உபகாரத்துக்குக் கைமாறாக ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவன் தரும் பண்டத்தை விமானத்தில் வைத்துக் கட்டினால் அது என்றும் நின்று நிலவும் என்று நினைத்தான்.

அந்தக் கிழவியிடம் வந்து, "தாயே, ஏதாவது ஒரு பொருளைத் தா விமானத்தில் வைத்துக் கட்டுகிறேன்" என்றான்.

"எதற்கு அப்பா?"

"உன்னுடைய நினைவு என்றும் மாறாமல் இருப்பதற்காக நீ செய்த உபகாரத்திற்காக இந்தச் சிறிய காரியத்தைச் செய்ய எண்ணுகிறேன்"

"நான் என்ன உபகாரம் செய்து விட்டேன்? ஆண்டவன் அளித்த தண்ணீரைக் கொடுத்தேன். அவ்வளவு தானே?

"இல்லை; இல்லை அதை விடப் பெரிய உபகாரம் வேறு என்ன இருக்கிறது? நீ செய்த தொண்டை எங்கள் தொண்டை அல்லவா அறியும்? குளிர்ந்த தண்ணீரை இவ்வளவு பேருக்கும் கொடுத்து நலம் செய்தாயே! நீ ஏதாவது ஒரு பொருளைத் தரத்தான் வேண்டும்!"

- கி. வா. ஜகந்நாதன் -

"என்னிடத்தில் என்ன அப்பா இருக்கிறது? இதோ இந்த வாசற்படிக் கட்டுத்தான் இருக்கிறது" என்று சிரித்தபடியே சொன்னாள் கிழவி.

சிற்பி பார்த்தான். அந்தக் கல்லைப் பெயர்த்தெடுத்துப் பலகைக் கல்லாகச் செதுக்கினான், விமானத்தில் கும்பத்தைப் பதித்து வைக்கும் பலகைக் கல்லுக்குப் பிரமரந்திரக் கல் என்று பெயர். அந்த வாயிற்படிக் கல்லைப் பொழிந்து பிரமரந்திரக்கல்லாக வைத்து அதன் மேலே கலசத்தையும் பதித்துவிட்டான்.

உரிய நாளில் குறிப்பிட்ட நேரத்தில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த பக்தர்கள். 'இத்தகைய கோயிலை எங்கும் பார்த்ததில்லை. இத்தகைய கும்பாபிஷேக வைபவத்தையும் கண்டதில்லை' என்று வியந்தார்கள்.

கும்பாபிஷேகத்துக்குப் பிறகு மகாபிஷேகமும் நடைபெற்றது. தான் நினைத்தபடி யாவும் இனிது நிறைவேறியதில் இராஜராஜனுக்கு அளவற்ற மகிழ்ச்சி. கோயிலையும் விமானத்தையும் பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போனான்.

அப்போது அவன் உள்ளத்தில் சிறிய அகந்தைக் கீற்று ஒன்று எழுந்தது. 'நாம் சக்கரவர்த்தியாக இருப்பதனால் தானே இவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்க முடிந்தது? வேறு யாராலும் செய்ய முடியாதது அல்லவா இது?' என்று எண்ணினான்.

மகா பக்தனான அவன் உள்ளத்தில் தோன்றிய இந்த அகந்தையைப் போக்க இறைவன் எண்ணினான். அரசன் உறங்கும்போது ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில் இறைவன் ஒரு முனிபுங்கவரைப் போல எழுந்தருளினான். இறைவனே அவ்வாறு வந்ததை அரசன் உணர்ந்து கொண்டான். உடனே, 'எம்பெருமானே, அடியேன் கட்டிய திருக்கோயில் திருவுள்ளத்துக்கு உவப்பாக இருக்கிறதா?' என்று கேட்டான்.

எம்பெருமான், 'அப்பா, நீ கட்டி வைத்த இந்தப் பெரிய கோயிலில் ஒரு கிழவியின் நிழலில் சுகமாக இருக்கின்றோம்... என்று திருவாய் மலர்ந்தருளினான்.

அதைக்கேட்டதும் இராஜராஜனுக்குத் துணுக்கென்றது. 'கிழவியின் நிழலா? கிழவி யார்? பட்டை நிவேதனம் செய்த மதுரைக் கிழவியா? அவள் இங்கே இப்போது வர நியாயம் இல்லையே! ஒருகால் புராதனை என்ற பெயருடைய அம்பிகையையே அப்படிச் சொல்கிறாரோ?' என்று எண்ணமிட்டான். அவனுக்கு விழிப்புக் கொடுத்து விட்டது. எழுந்து உட்கார்ந்து, 'கிழவியா? யார் அந்தக் கிழவி?' என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அரசன் எழுந்ததைக் கண்டு மற்றவர்களும் எழுந்துவிட்டார்கள். அவன் கனவைப் பற்றிச் சொன்னான். "அந்தக் கிழவி யார்?" என்று எல்லோருமே யோசித்தார்கள்.

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. சிற்பியர் தலைவனுக்கும் இது தெரிந்தது. அவன் ஓடி வந்தான், அரசன் காலில் விழுந்து, "அரசே, நான் செய்த ஒரு காரியத்தைச் சொல்கிறேன். அது தவறானால் அதற்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்" என்றான்.

"என்ன அது?

"எங்களுக்கெல்லாம் நீர் வேட்கையைத் தீர்த்த கிழவியின் நினைவை என்றும் மக்கள் நினைப்பதற்காக அவள் வீட்டு வாயிற்படிக்கட்டுக் கல்லைப் பிரமரந்திரக் கல்லாக வைத்துக் கட்டினேன். அவள் கால் பட்ட அந்தக் கல் இறைவனுக்கு மேலே இருப்பது தவறானால் எனக்குத் தண்டனை கொடுங்கள்."

"தண்டனையா"! - அரசன் பெருமூச்சுவிட்டான். "இறைவனே அதன் கீழ்ச் சுகமாகத் தங்கியிருப்பதாகச் சொன்ன போது அது எப்படித் தவறாகும்? நான் கட்டினேன் என்ற என் அகந்தையைப் போக்க ஆண்டவன் செய்த திருவிளையாடல் இது. அந்தக் கல்லைத் தந்த பெருமாட்டியைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்று சொல்லி அவள் வீட்டுக்குச் சென்று அவள் காலில் விழுந்து கண்ணீர் மல்க நின்றான் அரசன்.

"தாயே, என் அகந்தையைப் போக்கச் செய்தாயே!" என்று விம்மினான். அவளுக்கு நிலங்களை மானியமாக அளித்தான். ★

---

கருத்துக் கலசம் - வஜூரா

## சொல்லும் செயலும்

நீர் சொல்வதைச் செய்வீரா? செய்ய முடியுமா? என்று மற்றவரிடம் கேட்கிறோம்.

ஒருவர் சொல்வதை அவர் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பதே மனித சுபாவம் என்பதையே அந்தக் கேள்விகள் சுட்டி நிற்கின்றன.

சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே நீதியும், தர்மமும் ஆகும். ஒன்றைச் சொல்லி விட்டு, அதனைச் செய்யாது, விடுவது அல்லது வேறு ஒன்றைச் செய்வது மனுநீதிக்கு மாறானது. மற்றவனை ஏமாற்றிய பாவத்துக்கு ஆளாக்குவது; குற்றத்துக்கு உரியது. நாணயம் மீறிய செயலாகக் கருதப்படுவது

சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும் நாணயஸ்தர்களை இப்போதெல்லாம் கண்டு கொள்வது கடினம். நூற்றில் ஒன்று இருக்குமோ என்பதைத் தேடிப் பிடிக்க வேண்டும்!

சொல்வது ஒன்று செய்வது மற்றொன்று என்ற அதர்மமே இப்போது மலிந்து விட்டது; பழக்கப்பட்டு விட்டது. அரசியல் வாதிகள் மட்டுந்தான் நாணயமில்லாமல், சொல்லொன்று செயல் வேறாக நடக்கிறார்கள் என்பதில்லை. அறதப மபலவாத மநய் இப்போது சமூகத்தில் சகல மட்டங்களிலும் புரையோடிய சாபக்கேடாக மாறிவிட்டது.

மற்றவனை ஏமாற்றிப் பிழைப்பதும், மோசடி செய்வதும் சர்வசாதாரணம் ஆகிவிட்டன. ஏமாற்றப்படுபவனும், ஏய்க்கப்படுபவனும் நீதிகோரிச் செல்லவும் இடமில்லை என்றாகிவிட்டது. அந்தளவுக்கு நீதியும், நியாயமும் தர்மமும் கெட்டுச் சீரழிகிறது சமுதாயம்.

மோசடிக்காரரும், நாணயமில்லாதவர்களும் எப்படியோ சமூகத்தில் மதிப்பான அந்தஸ்தைத் தங்களுக்கு உருவாக்கிவிடுகிறார்கள்; அல்லது எட்டிப்பிடித்து விடுகிறார்கள். அதனால் ஏமாந்தவன் நல்லவனாக இருந்தாலும், ஏழை சொல் அம்பலம் ஏறாது என்ற நிலையே உருவாகிறது.

சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பதற்கு, ஒருவரிடம் இதயசுத்தி அவசியம். தர்மத்துக்கு அஞ்சி நேர்மையாகவும், விசுவாசமாகவும், நாணயமாகவும் நடக்கும் மனப்பக்குவம் தேவை. கயமை இல்லாத மனம் வேண்டும்.

சமூகம் சிறப்படைய வேண்டுமானால், தர்மநெறிகளைக்கடைப்பிடிப்பது மிகப் பிரதானம். தனது மனச்சாட்சிக்குத் தானே விரோதமாக, குரோதமாக நடக்கக்கூடாது என்ற நற்குணம் உள்ளத்தில் ஊறிநிற்பது பிரதானம்; உணர்வுகளில் செறிந்திடுதல் வேண்டும்.

ஒவ்வொருவரும் மனுநீதி வளர்க்க உழைத்திடுதல் அவசியம். ஒவ்வொருவரும் தம்மைத் தாமே திருத்திக் கொண்டால் அது இலகுவாகும். ★

---

# அமாவாசையில் ஏவப்பட்டதால் தான் ஆழ்கடலில் வீழ்ந்தது!

### இந்திய ரொக்கட் தோல்வி குறித்து விஞ்ஞானி ஸ்ரீவத்சவா

சென்னை அருகே ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த 13 ஆம் திகதி ஏ. எஸ். எல். வி. டி 2 என்ற ரொக்கட் ஏவப்பட்டதும், 3 ஆவது நிமிடத்தில் வெடித்து, சிதறி கடலுக்குள் விழுந்ததும் தெரிந்ததே.

ரொக்கட்டின் மோட்டார் சரியாக இயங்காததே இந்தத் தோல்விக்குக் காரணம் என்று விண்வெளி ஆராய்ச்சிக் கழகத் தலைவர் பேராசிரியர் யு. ஆர். ராவ் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்தூரைச்சேர்ந்த பிரபல விஞ்ஞான டாக்டர் எஸ் ஸ்ரீவத்சவா கோளாறுகளுக்கான காரணங்களை விளக்கினார்.

அவர் கூறுகிறார்;

சுற்றுப்புற சக்திகளால் மட்டுமல்லாமல் பூமியின் புவிஈர்ப்பு விசையாலும் ரொக்கட் பாதிக்கப்படும் இது விஞ்ஞானரீதியாக எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நிலா ஒளி இல்லாத நாளில் (அமாவாசை) பூமியின் அதிர்வு அலைகள் அதிகமாக இருக்கும். அமாவாசை அன்று சூரியன், சந்திரன் பாதைக்கு அருகே பூமி வரும். ஆகவே புவியீர்ப்பு விசை அதிகமாக இருக்கும் என்பதால் அமாவாசை அன்று ரொக்கட் ஏவப்படுவது இல்லை.

ஆனால் இந்திய ரொக்கட் அமாவாசை அன்று தான் ஏவப்பட்டது.

இந்திய ரொக்கட் (ஏ. எஸ். எல். வி. டி. 2) ஏவப்பட்ட முதல் நிலையில் ரொக்கட்டின் முதல் மோட்டார் 4 விநாடி இயங்கி இருக்கிறது.

2 ஆவது நிலையில் ஆரம்பித்ததும் அடுத்த மோட்டார் ரொக்கட் முழுப் பொறுப்பு ஏற்று உள்ளது.

அந்த நேரத்தில் மோட்டாரில் வெடிப்பு ஏற்பட்டு அதிர்வு உண்டாகி இருக்க வேண்டும்.

அதோடு புவியீர்ப்பு விசைகளும் மாறியதால் ரொக்கட் கடலுக்குள் தள்ளப்பட்டு விட்டது.

பொதுவாக ஸ்ரீ ஹரிகோட்டா தளம் ரொக்கட் விடுவதற்கு ஏற்றது அல்ல.

இங்கு இருந்து ரொக்கட் விடுவது கிணற்றுக்கு அடியில் இருந்து கல்லை எறிவதற்கு ஒப்பாகும்.

1987 இல் ஏவப்பட்ட ரொக்கட் தோல்வி அடைந்த உடனேயே நான் இதைச் சொன்னேன். இதற்குப் பதிலாக நிக்கோபர் தீவுகளில் இருந்து ரொக்கட் ஏவலாம் என்று யோசனை தெரிவித்தேன்.

அப்போது ஹரிகோட்டா தளம் ரொக்கட் விடுவதற்கு மிகவும் சரியான இடம் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்படி ஸ்ரீவத்சவா கூறினார்.


### நாடாளுமன்றத்தில்

ரொக்கட் தோல்வி குறித்து வார இறுதியில் பல உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினர்.

புவிஈர்ப்புச் சக்தி (Gravitational pull) காரணமாகத்தான் ஏ. எஸ். எல். வி-2 ரொக்கட் பாதை தவறிச் சென்று கடலில் வீழ்ந்தது என்று உறுப்பினர்கள் அப்போது தெரிவித்தனர்.

பதிலளித்த விஞ்ஞான தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் கே. ஆர். நாராயணன், ஹரிகோட்டா ரொக்கட் ஏவுதளம் உலகிலேயே இரண்டாவது சிறந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

ரொக்கட் தோல்விபற்றி நிபுணர் குழு ஆராய்ந்து வருகிறது. அதுவரை காரணம் கூறமுடியாது என்று இணை அமைச்சர் தெரிவித்தார்.



கடலில் விழுந்த இந்திய ரொக்கட் தொடக்கத்தில் நெருப்புப் பிழம்பைப் சக்கியபடி வானில் சீறிப் பாய்ந்து சென்ற காட்சி

## சாதனையும் சோதனையும்

விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா பல சாதனைகளை படைத்து உள்ளது. அதே சமயம் சில சோதனைகள் இல்லாமல் இல்லை

இது பற்றிய விவரம்:

1962: அணுசக்தி துறையின் ஒரு பிரிவாக விண்வெளி ஆராய்ச்சி துறையை இந்தியா முதன் முதலில் அமைத்தது இந்த ஆண்டில்தான்.

1963: ராக்கெட்டை விண்வெளிக்கு ஏவ முடியுமா என்று சோதித்துப் பார்க்க திருவனந்தபுரம் அருகே தும்பா என்ற இடத்தில் விண்வெளி ஏவு தளம் அமைக்கப்பட்டது.

1965: விண்வெளி ராக்கெட் தயாரித்து அனுப்ப ஆராய்ச்சி மையம் தும்பாவில் அமைக்கப்பட்டது.

1967: விண்வெளி தொழில்நுட்பத்தில் விஞ்ஞானிகளுக்கு பயிற்சி தர ஆமதாபாத்தில் தரைக் கட்டுப்பாட்டு நிலயம் அமைக்கப்பட்டது.

1972: பூமிக் டியில உள்ள இயற்கை வளங்களைக் கண்டறிய விண்ணில் இருந்து ஆய்வு செய்யலாமா என்பது பற்றிய ஆராய்ச்சி துவங்கியது.

1975: ஏப்ரல் 19 ஆம் திகதி அன்று ரஷ்யாவில் இருந்து முதல் இந்திய செயற்கைக் கோள் ஆர்யபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.

1976: ஜூலையுடன் முடிந்த ஒரு ஆண்டுவரை அமெரிக்க ஏ. டி. எஸ். — 6 செயற்கைக் கோளைக் கொண்டு விண்வெளி ஆய்வில் இந்தியா இறங்கியது.

1977: பிரான்ஸ் ஜெர்மனி கூட்டாக விடப்பட்ட 'சிம்பொனி' செயற்கைக்கோளைப் பயன்படுத்தி நுண்ணலைத் தொடர்பை ஏற்படுத்தித் தொலைத் தொடர்பு வசதியை அமைப்பது குறித்து ஆய்வை இந்தியா மேற்கொண்டது.

1979: இந்தியாவின் இரண்டாவது செயற்கைக் கோள் பாஸ்கரா ஜூன் 7 ஆம் திகதி ரஷ்யாவில் இருந்து ஏவப்பட்டது. ஆகஸ்ட் 10 ஆம் திகதி செலுத்தப்பட்ட எஸ். எல். வி—3 தோல்வி அடைந்தது.

1980 ஜூலை 18 ஆம் திகதி ரோகிணி செயற்கைக் கோள் எஸ். எல். வி.—3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டா தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

1981: எஸ். எல். வி.—3 (டி1) செயற்கைக் கோள் மே 31 ஆம் திகதி ஏவப்பட்டது. 35 கிலோ எடை கொண்ட இந்த ரோகிணி செயற்கைக் கோள் விண்வெளிப் பாதையில் 9 நாள் மட்டுமே இருந்தது பின்னர் ஜூன் 19 ஆம் திகதி ஐரோப்பிய விண்வெளி ஆய்வு ஏஜன்சி 'ஏரியான' மூலம் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது. நவம்பர் 20 ஆம் திகதி ரஷ்யாவில் இருந்து பாஸ்கரா—2 செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது.

1982: ஏப்ரல் 16 ஆம் திகதி அமெரிக்க ராக்கெட் மூலம் இன்சாட்—1ஏ கோள் செலுத்தப்பட்டது.

1983: ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து ஏப்ரல் 17 ஆம் திகதி 42 கிலோ செயற்கைக் கோளுடன் எஸ். எல். வி.—3 (டி2) ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. ஆகஸ்ட் 30 ஆம் திகதி அமெரிக்க விண்வெளி ஓடம் சாலஞ்சர் மூலம் இன்சாட்—1பி செலுத்தப்பட்டது.

1984: ஏப்ரல் 3 ஆம் திகதி விண்வெளிக்கு சென்றார் முதல் இந்திய விண்வெளி வீரர் ராகேஷ்சர்மா. ரஷ்ய விண்கலம் மூலம் இவர் சென்று வந்தார்.

1987: ஏ. எஸ். எல். வி—1 ராக்கெட் ஏவப்பட்டு தோல்வி அடைந்தது.

1988: ரஷ்யாவில் இருந்து ஐ. ஆர். எஸ் —1 ஏ கோள் மார்ச் 17 ஆம் திகதி செலுத்தப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் நல்ல சிறுகதைகள் எழுதலாம்; அவை உலகில் தலைசிறந்தவையா?

சிறுகதை வரலாறு, வளர்ச்சி, ஈழத்தில் சிறுகதை, சமூகரீதியில் சிறுகதையின் தாக்கம் பிறமொழிகளில் சிறுகதைகள்—

இவற்றை எல்லாம் ஆராய தளம் அமைத்துக் கொடுத்தது கலை இலக்கியக்களம்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடந்த ஞாயிறு இடம்பெற்ற 'சிறுகதை நாள்' கலை இலக்கியக்களத்தின் 15 ஆவது ஒன்று கூடலாகவும் அமைந்தது.

நான்கு அரங்குகளாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

### அரங்கு—1

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையுரையில் 'சிறுகதை வடிவம் பிறநாட்டினுடையது என்றாலும் அதன் உள்ளடக்கம் எமக்கு ஒட்டியதாகவே இருக்கின்றது'—என்று வலியுறுத்தினார்.

'தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக் கட்டங்கள்' என்ற தலைப்பில் பேசினார் கருணையோகன்.

'ஈழத்தின் தமிழர் சிறுகதையின் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் பேசிய திரு. அ. ரவி, அரைநூற்றாண்டுக்கு மேலான ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் ஒரு ஜானகிராமனோ, அசோகமித்திரனோ, புதுமைப்பித்தனோ தோன்றாதது நமது துரதிஷ்டமே'—என்று கவலைப்பட்டார்.

டாக்டர் எம். கே. முருகானந்தன் தொடக்கி வைத்த கலந்துரையாடலில் கலாநிதி சபா ஜெயராஜா பேசுகையில், 'உலக கிறுகதை விமர்சனம் வளர்ச்சி அடைந்துவிட்டது. ஆனால் எமது சிறுகதை விமர்சனத்துறை வளர்ச்சி அடையவில்லை. விமர்சனம் வளராவிட்டால் சிறுகதை வடிவம் வளரவே முடியாது—' என்று சொன்னார்.

### அரங்கு—2

குறமகள் தலைமை வகித்தார்: ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் முற்போக்குச் சிந்தனைகள் என்ற தலைப்பில் சொக்கன் எழுதிய கட்டுரை வாசிக்கப்பட்டது.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் தேசிய இனப்பிரச்சினையும் என்ற தலைப்பில் திரு. அ. யேசுராசா பேசுகையில் 'பிழையான இலக்கியக்கொள்கைகளே சிறுகதைத்துறை வளராததற்குக் காரணம்'—என்றார்.

கலந்துரையாடலை மயிலங்கூடலூர் நடராஜன் தொடக்கி வைத்தார்.

### அரங்கு—3

வரதர் தலைமை வகித்தார். யாம் சுவைத்த பிறமொழிச் சிறுகதைகள் என்ற தலைப்பில் திரு. க. உமாமகேசுவரனும் திரு. சோ. பத்மநாதனும் பேசினர். கலந்துரையாடலை திரு. க. சட்டநாதன் தொடக்கிவைத்தார்.

### அரங்கு—4

'எழுத்தும் அரங்கும்' என்ற தலைப்பிலான இந்த நிகழ்ச்சிக்கு கோகிலா மகேந்திரன் தலைமைவகித்தார்.

இதில் பங்குகொண்ட நெல்லை. க. பேரன், நா. சோமகாந்தன் - இருவரும் மேடையில் பேட்டி காணப்பட்டனர்.

'சிறுகதைநாள்' நிகழ்ச்சி புதியது, புதுமையானது— இதுவே சபையோரின் பிரதிபலிப்பு.

### சிறப்புரை

நான்கு அரங்குகளின் முடிவில் பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி சிறப்புத் தொகுப்புரை நிகழ்த்தினார்.

'சிறுகதை நாள்' இலக்கிய ஆர்வலர்களுக்கு பெருவிருந்தாக அமைந்தது எனலாம்.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட அத்தொகுப்புரையின் சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன. ★

## 'சிறுகதை நாள்' கலந்துரையாடலில் பேராசிரியர் சிவத்தம்பி கேள்வி

சிறுகதை, உலகப் பொதுவான இலக்கிய வடிவம்.

இது தமிழில் இருந்து வரவில்லை.

இந்தியாவில் இருந்து வரவில்லை.

ஆசியாவுக்குள் இருந்து வரவில்லை.

எமக்கு இது காலவரை தோன்றிய இலக்கிய வடிவங்கள் எல்லாமே ஒன்று தமிழ் நாட்டில் இருந்து வந்ததாக இருக்கும் (அகம், புறம்) மற்றது இந்திய மரபுக்குள் இருந்து வந்ததாக இருக்கும் (காவியம் புராணம்).

சிறுகதை அவற்றுக்கு முற்றிலும் அப்பாலுள்ள ஒரு தளத்தில் இருந்து வந்துள்ளது.

இதனுடைய உரைகல் தமிழ்நாட்டில் இல்லை. இந்தியாவில் இல்லை.

இதனுடைய உரைகல் அமெரிக்காவில் இருக்கிறது. சோவியத் யூனியனல் இருக்கிறது. பிரான்ஸில் இருக்கிறது. இங்கிலாந்தில் இருக்கிறது என்றும் சொல்லலாம்.

நாவலுக்கும் சிறுகதைக்கும் வருவோம்.

எவ்வாறு கைத்தொழிற் புரட்சி, நவீனமயமாக்கம், மேல்நாட்டு ஆதிக்கம் எம்மிடம் ஒரு பொதுவான கல்விக் கருத்தை, பொதுவான ஆடை அணியும் முறையை (Standard Universel form) கொண்டு வந்ததோ அதே போல சில International Biterary forms ஐயும் கொண்டு வந்தது.

அதில் ஒன்றுதான் புனைகதை (fiction).

தமிழில் சிறுகதைகள் உண்டே தவிர தமிழ்ச் சிறுகதைகள் என்று பேசலாமோ என்று எனக்கொரு சந்தேகம்.

### தலைசிறந்தவையா?

தமிழில் நல்ல சிறுகதைகள் எழுதலாம். ஆனால் அவை உலகத்தில் தலைசிறந்த சிறுகதைகளா?

'அன்னாகரினா' நாவல் பற்றி டால்ஸ்டாய் சொன்னார்.

"நாம் (ரஷ்யர்கள்) ஐரோப்பிய இலக்கிய அரங்குக்குள் 'அன்னாகரினா' நூலுடன் நுழையலாம்"— என்று டால்ஸ்டாய் சொன்னார்.

என்னுடைய கேள்வி, நாம் உலகப் புனைகதை அரங்கில் எந்த ஆக்கங்களைக் கையில் வைத்துக் கொண்டு நுழையலாம் என்பதே?

பிரெட்ரிக் ஜேம்சன் என்பவர் அமெரிக்கப் பேராசிரியர். மார்க்ஸிய விமர்சகர்.

மூன்றாவது உலக நாடுகளில் உள்ள இலக்கியத்தை மிக அனுதாபத்தோடு பார்ப்பவர். அண்மையில் அவர் ஒரு கட்டுரை எழுதினார்.

"மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் தலைசிறந்த எழுத்தாளர்களை ஏன் தோற்றுவிக்கவில்லை?" இப்படி அவர் கேட்கிறார்.

தமிழ் நாவல் என்ற மதிப்பீடு உலகநாடுகள் என்கிற வட்டத்துக்குள் வரவேண்டும்.

நாங்கள் தமிழில் நாவல் எழுதலாம். ஆனால் தமிழ் நாவல் ஒன்றோடு போகிறபோது அந்த நாவல் என்கிற உலக இலக்கியக் களம் விரிவடையவேண்டும்.

சிறுகதையைப் பொறுத்தளவில் உலகத்தைப் பற்றிச் சொல்ல முடியாது. அது பற்றிய அறிவு எனக்குப் போதாது. நாங்களும் மொழிபெயர்ப்பு நூல்களைத்தான் வாசிக்கிறோம். அதனால் ஒன்றும் சொல்ல முடியாமல் உள்ளது.

### பெருமை

ஆனால் ஒன்றைப் பெருமையாகச் சொல்லலாம்.

அகில இந்திய மட்டத்தில் போகும்போது, தமிழ்ச் சிறுகதைகளோடு பெருமையோடு போகக்கூடிய எழுத்தாளர்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள் என்று பெருமையாகச் சொல்லலாம்.

பாரதி எழுதியது சிறுகதைகள் அல்ல; அவை சிறியகதைகளே. பாரதி பற்றி நான் ஆய்வு செய்ய விரும்பவில்லை.

தாகூரின் மொழி பெயர்ப்புக்களைச் சிறுகதைகளில் சேர்க்கலாம்.

### தமிழகத்தில் சிறுகதை வளர்ச்சி

தமிழகத்தில் ஏற்பட்டு வருகிற சிறுகதை வளர்ச்சி உன்னதமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கிற சமூக மாற்றம் பற்றிய தெளிவு எல்லா எழுத்தாளருக்கும் இல்லை.

இந்த மாற்றம் ஊடே காணப்படுகிற சமூக இன்னல்களை, குறிப்பாக கிராமப் புறங்களிலே ஏற்படுகிற சமூக, தனிமனித உறவுகளை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார்கள்.

எமது சிறுகதைகள் இப்போதும் காரண காரியத் தொடர்புடன் தான் இருக்கிறது.

## தொகுத்துத் தருபவர்: "இலக்கியநம்பி"

இன்றும் எம்முடைய சமூக அமைப்பில் தனிமனிதன் ஒரு சமூக அலகு அல்ல. அப்படி சமூக அலகாக மேல்நாடுகளில் கருதப்படுகின்றது.

குடும்பத்திலே ஏற்படுகிற சிதைவுகள், தாக்கங்கள், தன்மைகள், தனிமனிதர்கள் படும் அவலங்கள்தான் எமக்குக் கருவாக அமைகின்றன.

அந்தக் காரணத்தினால் தான் குடும்பத்தின் அச்சாணியாகக் கருதப்படும் பெண்கள் எமது புனைகதைகளிலே முக்கியமான இடத்தைப் பெறுகிறார்கள்.

தாயாக, தங்கையாக, காதலியாக, மனைவியாக எந்த வகையாகப் பார்த்தாலும் ஒரு Crisis Analysis செய்து பார்ப்போமானால் பெண்களுடைய அனுபவங்களிலே ஏற்படுகிற மாறுதல் பெரும்பான்மையாக அமைகின்றன.

சமூகம் வளர்ந்துகொண்டு போகிறது. ஒரு காலத்தின் வளர்ச்சிப்படிதான் இன்னொரு காலத்தில் வரலாறாக மாறுகிறது. அந்த வளர்ச்சிப்படியின் தளத்தில் நின்று கொண்டு நாம் இதனைப் பார்க்கவேண்டும்.

சிறுகதையின் தன்மை இன்று மாறிவிட்டது.

சீவக சிந்தாமணியில் இருந்த காப்பியம் அல்ல கம்பன் கையாண்ட காப்பியம்.

இந்த மாற்றங்களினூடாக சிறுகதை, மனிதனின் Moral பிரச்சினைகளைப் பற்றிய தேடுதலுக்கான வடிவமாக உள்ளது. எம்மிடம் அந்த வளர்ச்சி இன்னும் வரவில்லை. எம் சமூகத்தில் இவ்வளவு மாற்றம் ஏற்பட்ட பிறகும் கூட நாம் இன்னும் Basically rooted on oursoil ஆக இருக்கிறோம், அதை இழக்காத வரை நாம் அன்னியப்பட்ட மனிதப் பண்பு பற்றிப் பேச முடியாது. ஏனென்றால் நாம் இன்னும் அன்னியப்படவில்லை.

### புனைகதையில் மொழிநடை

புனைகதையில மொழி பற்றிய அம்சங்களை நிதானமாகப் பார்க்கவேண்டும்.

மொழியைக் கையாளுவது என்பது வெறுமனே சித்தரிப்பது அல்ல. உள்ளத்தைப் படம்பிடிக்கவே எழுத்தை நாம் பயன்படுத்துகின்றோம் என்று நினைக்கிறேன். அப்படி அல்ல.

You are modelling reality. யதார்த்தமாக உள்ள ஒன்றுக்கு எழுத்தாளன் பிரதிவடிவம் கொடுக்கின்றான். அந்தப் பிரதிவடிவம் கொடுக்க எழுத்தாளன் பயன்படுத்தும் ஆயுதமே மொழி. ஆகவே அந்த மொழியில் நிதானம் வேண்டும். அதில் loose ஆக ஒன்றும் நிச்சயம் இருக்ககூடாது.

எழுத்தாளனுக்கு மொழி ஊடகம்.

காப்பியங்களுக்கு ஒரு மொழி நடை இருப்பது போல.

சிற்றிலக்கியங்களுக்கு ஒரு மொழி நடை இருப்பது போல,

புனைகதைக்கோ, சிறுகதைக்கோ, நாவலுக்கோ எம்மிடம் Language of Fiction இருக்கிறதா?

தமிழில் இந்தப் புனைகதை மொழிப் பாரம்பரியம் ஒன்று மொழியியல் ரீதியில் வளர்ந்துள்ளதா? மொழி வளராததினால் பல எழுத்தாளர்கள் ஏற்கனவே இருக்கின்ற சில தொடர்களைத் திரும்ப, திரும்ப பயன்படுத்தி வருகின்றனர்.

மொழிக்கு ஒரு ஆற்றல் உண்டு. ஆற்றலுக்கு ideology முக்கியம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ideology இருக்க வேண்டும்.

### விசுவாசம் வேண்டும்

உலகம் உருண்டை அல்ல; தட்டை என்று சொல்கிற தத்துவஞானிகள் இன்றும் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் அதை விசுவாசத்துடன் சொல்கிறார்கள். அந்த நேர்மை எழுத்தாளருக்கும் வேண்டும். இல்லை என்றால் இலக்கியம் வராது.

இது விஷயத்தில் பத்திரிகாசிரியர்களுடைய பொறுப்பு மிகமிக முக்கியம். அவர் அந்த இதழை மாத்திரமல்ல, சிறுகதையையும் எடிற் செய்ய வேண்டும்.

கைலாசபதி காலத்தில் சிறுகதைகளுக்கு ஒரு மதிப்பு இருந்தது.

காரணம் கைலாசபதி ஒவ்வொரு சிறுகதையையும் எடிட் பண்ணினார்.

சரியோ, பிழையோ எழுத்தாளனுக்கு ஒரு சமூக அந்தஸ்து வந்து விட்டது. எழுத்தாளனைக் கிண்டல் பண்ணிய பண்டிதனுக்கு இல்லாத அந்தஸ்து எழுத்தாளனுக்கு இன்று உண்டு.

எழுத்து என்பது, எழுத்தாட்சியின் நுணுக்கங்களைப் பற்றிக் கவனியாத ஒன்றாக விளங்குகிறது.

எழுத்தாளனுக்குக் கிடைத்துள்ள சமூக அந்தஸ்து காரணமாக எழுத்து என்பது மனிதப்படுத்தப்பட்டு விட்டது.

எம்மை எதிர்நோக்குவது வெகுஜனப் பண்பாட்டின் ஆதிக்கமே.

வெகுஜனப் பண்பாட்டின் வளர்ச்சி காரணமாக, இலக்கியம் மற்றைய சாதனங்களோடு போட்டி போட்டுக் கொண்டு வளர வேண்டியுள்ளது. அதற்குக் காத்திரமான இலக்கியம் தேவை.

மக்கள் இலக்கியம் என்பது எல்லாரும் வாசிக்கும் இலக்கியம் அல்ல. அது காத்திரமான இலக்கியம் Serious Writing தான் இன்றைக்கு வேண்டியது.

எழுத்தாளன் தன்னுடைய Craft பற்றி, தான் எழுதுகிற தன்மை பற்றித் தெரிந்திருந்தால் தான் அந்த Serious Writing வரும்.

உலக இலக்கியங்கள், அவற்றின் வளர்ச்சி பற்றி கவனித்துக் கொள்ளவேண்டும்.

தண்டிகை, யாப்பருங்கலங் காரிகை ஆகியவற்றைப் படிப்பது எப்படிப் புலவர்களுக்கு அத்தியாவசியமானதோ, அதே போல செக்கோவ் கதைகளைச் சிறுகதை ஆசிரியர்கள் படிக்க வேண்டியது அத்தியாவசியமாகும். ★

# கர்மா

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்...' என்று சாதாரண பேச்சு வாக்கில் சொல்வதுண்டு.

உலகுக்கு இந்துசமயம் கற்பித்த கர்மநியதியின் தத்துவத்தையே இப்பொன்மொழி எடுத்துரைக்கின்றது.

ஒவ்வொரு செயலும் சிந்தனையும் கர்மா எனப்படுகிறது. ஒவ்வொரு செயலுக்கும் சிந்தனைக்கும் எதிர்வினைவு உண்டு என்பதுதான் கர்மநியதியின் அடிப்படைத் தத்துவம். அச்செயலின் அல்லது சிந்தனையின் தன்மைக்கும் அளவுக்கும் ஏற்பவே எதிர்வினையின் தன்மையும் அளவும் அமையும் என்பதே அதன் கோட்பாடு (Cause & Effect).

இப்பிறப்பில் நாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு நாமேதான் காரணகர்த்தாக்கள். கடந்த பிறப்புக்களில் நிறைந்த தர்மம் செய்த பயனை இப்பிறவியில் செல்வந்தனாகவந்து அனுபவிக்கின்றோம்.

நாம் முன்னர் செய்த பாவவினைகளுக்குப் பிரதி பலனாக இப்பிறப்பில் நோய், பிணி, வறுமை ஆகியவற்றால் துன்பப்படுகிறோம்.

நாம் ஒருவருக்குச் செய்யும் தீமையின் விளைவு எமக்கே திரும்பிவருகிறது என்று நாம் உணரும்பொழுது, நாம் பிறருக்குச் செய்யும் தீமை நமக்கே

**- அ. குமரகுரு -**

செய்யும் தீமையென்பதைப் புரிந்துகொள்ளுவோம்.

பிரபஞ்சத்தில் எந்த நிகழ்வும் தற்செயலாகவோ விபத்தாகவோ நடைபெறுவதில்லை. எல்லாம் ஓர் ஒழுங்கு முறைக்கேற்பவே நடைபெறுகின்றன.

நாம் முன்னர் செய்த காரியங்களுக்கும், இன்று செய்பவற்றுக்கும் இனிமேல் சந்திக்கப்போகும் இன்பதுன்பங்களுக்கும் நிச்சயமான, ஒழுங்குமுறையான தொடர்புண்டு.

கர்மநியதியின் தத்துவத்தை எமக்கு உணர்த்துவதற்காகத்தான் யோகர் சுவாமிகள் 'எல்லாம் எப்போதோ நடந்துமுடிந்த காரியம். நடக்க நடக்கக்காண்,' என்று அடிக்கடி கூறிவந்தார் போலும்.

வேத நூல்கள் கர்மாவை மூன்றுவகைகளாகப் பிரித்துக் கூறுகின்றன. அவை சஞ்சித கர்மா, பிராரப்துவ கர்மா, அகாமியகர்மா என்பவை.

சஞ்சித கர்மா என்பது எமது முற்பிறப்புகளிலிருந்து நாம் சேர்த்துக்கொண்ட கர்மவினைகள். ஒருவனுடைய குணஇயல்புகள், சிந்தனைகள், எண்ணங்கள், உருவ அமைப்பு எல்லாம் இதிலிருந்து பிரதிபலிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இது பிறப்புகள் தோறும் தொடர்ந்துவருவது.

பிராரப்துவ கர்மா என்பது நாம் இப்பொழுது எடுத்துள்ள பிறப்புக்குக் காரணமாக அமைவது, இப்பிறப்பில் நாம் அனுபவிக்கப்போகும் இன்பதுன்பங்கள் இதைப் பொறுத்தே அமையும்.

அகாமியகர்மா என்பது நாங்கள் இப்பிறப்பில் செய்யும் காரியங்களில் இருந்து விளையும் கர்மா. இது மறுமைக்கும் கொண்டுசெல்லப்படுவது. ★

## உல்லாசக் கப்பல்!

உலகிலேயே மிகப்பெரிய உல்லாசக் கப்பல் ஒன்றை நோர்வே நாட்டுக் கப்பல் அதிபர் கிளாஸ்டர் கட்டி வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

இரண்டரை லட்சம் தொன் எடையுள்ள இந்தக் கப்பல் ஒரு குட்டி நகரம் போல கடலில் மிதந்து வரும்.

## ******கவித்துளி******

### சலிப்பு

பூமாலையில் இருந்த
நார்கள்
சலித்துக் கொண்டன
தனியே
இருக்கும் போது
யாரும் கவனிப்பதில்லை
பூவுடன்
சேர்ந்ததும்
என்னை உயர்த்துகிறார்கள்.

### மழை

முகில் கூட்டம்
கொடுத்த
உதையினால்
மேகக்குதாநாயகி
சிந்தும் கண்ணீர்

அல்வைத்தணி உமா

### நாணல்

அடிக்கடி தலைசாய்க்கும்
நாணலின்
பணிவை விட
தலைநிமிர்ந்து நிற்கும்
ஆவின்
செருக்கு
போற்றுதற்குரியது
- ஆனாலும்
நாணலே,
இன்று உன்னை
மதிக்கின்றேன்
- ஏனெனில்
காற்றடிக்கும் பக்கம்
சாய்ந்தாலும்,
உனக்குக்
காட்டிக் கொடுக்கத்
தெரியாதே!

- மாவை ரதி

### சொந்தங்கள்

காலங்கள் கழிகின்றன
- என்
கோலங்களும் மாறுகின்றன
- ஆனல்
சோகங்கள் மட்டும்
சுமைகளாக
சொந்தம்
கொண்டாடுகின்றன.

### அன்பு

நான் ஓட, ஓட
எனை அணுக மறுக்கும்
அலைகடல் ஆயிற்று
அணைக்கச் செல்கையில்
அகன்று செல்லும்
அடிவானமாயிற்று.

இரா. ரஞ்சிதகலா

### புகையும் பகையும்

சுத்தமான
காற்றைச் சுவாசித்து
சுகமாய் வாழும்
வழியிருக்க
மூக்கைப் பலரும்
புகைப்போக்கி
ஆக்கித் தினமும்
உடல் நலத்துடன்
பகைத்துக் கொள்வதுடன்
மற்றவர்க்கும்
பற்றக் கொடுத்து
கெடுதல் செய்கின்றார்.

- நுணுவில் நாகராஜா

### விதி

விதி என்பது
வெறும் விட்டில் பூச்சிதான்
அதன் விதி
மதி என்கின்ற
சுடரில் சிக்கிக்
கொள்வதோடு
முடிந்து விடுகிறது.

- மொழியன்

### மாயமான்

யன்னலைத் திறந்து
என்னையவள்
பார்த்த போது;
உள்ளத்திலிடம்
கேட்கின்றாள்
என்று எண்ணினேன்
ஆனல்......
திறந்த யன்னலை
மீண்டும் மூடவும்
முடியும் என்பதைக்
காலம் கடந்த
பின்னர் தான்
புரிந்து கொண்டேன்.

- சாரங்கன்

### நாக்கு

திக்குகள் எட்டும் ஒளிச்
சுடர் விட்டுப் பிரகாசிக்கும்
திக்கு மட்டும் ஏன் -
பலநாக்கு?
திக்குகள் எட்டும் அறிவுச்
சுடர் விட்டுப் பிரகாசிக்கும்
மனிதர்க்கு ஏனோ
ஒரு நாக்கு?
வரையற்று யார்க்கும்
வசைபாடும் மனிதர்க்கு
ஒரு நாக்கே போதும்
எனநினைத் தானோ
இறைவன்.

சிற்றுண்டி ஆர். நந்தா

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'சேரி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

'ஆப்பிள்' சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி. Pfizer சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லி.

ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

COMPUTERIZED PROCESSING
& PRINTING A 135 COLOUR ROLL
P.C PRINTS - 4-00
PROCESSING
Free 8x10
COLOMBO studio, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவர எண்ணெயில் ஓடும் கார்!

தாவர எண்ணெயில் ஓடும் காரைப் பிரெஞ்சு நிபுணர்கள் தயாரித்து உள்ளனர்.

இந்தக் காரில் என்ஜினை குளிரச் செய்யும் ரேடியேட்டர் கிடையாது.

மணிக்கு 170 கிலோ மீட்டர் வேகத்தில் செல்கிறது.

மற்ற கார்களைப் போல அதிகமாகப் புகையைக் கக்குவதில்லை. வெளியேறும் புகையில் தாவர எண்ணெயின் கருகிய வாசனைதான் இருக்கிறது. ★

## 101 வயதில் பல் முளைக்கிறது!

சீனாவில் உள்ள நிங்சியா பகுதியில் வசிப்பவர் யவர் யாங் ன்.

101 வயதான இவருக்கு இப்போது முத்து முத்தாக புதிய பற்கள் முளைத்து உள்ளன.

இது பல் மருத்துவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

உடற்கூறு ரீதியாக இந்த வயதில் பல்முளைப்பது சாத்தியம் அல்ல என்று அவர்கள் கூறுகிறார்கள்.

யாங்கான் புகைப்பிடிப்பது இல்லை. மது குடிப்பது கிடையாது. தினமும் ஆற்றில்தான் குளிக்கிறார். ஆனால், சாப்பாடு விஷயத்தில் மட்டும் கட்டுப்பாடாக இருக்கிறார். ★

## மனநோய் வரக் காரணம் என்ன?

மனிதன் ஆரோக்கியமாக இருக்க விட்டமின் தேவை.

நாம் உட்கொள்ளும் உணவில் விட்டமின் சக்தி குறைவாக இருந்தால், அல்லது இல்லாமல் போனால் உடல் நலம் பாதிக்ப்படும்.

விட்டமின் பி 12 பற்றாக்குறை ஏற்பட்டால் மூளை செயல்படுவது பாதிக்ப்படும்.

நாளடைவில் அதுவே மன நோய்க்கு வித்திடும் என்றும் நியூயோர்க் மருத்துவ நிபுணர் டாக்டர் ஜோன் லிண்டன் தெரிவித்திருக்கிறார். ★

## தணியாத ஆசை!

இத்தாலியைச் சேர்ந்த இளைஞர் பி பாஸ்டுவல் என்பவருக்கு ஆஸ்பத்திரியிலேயே என்றும் தங்கியிருக்க வேண்டும் என்று தணியாத ஆசை.

வேலையில்லாத இந்த 23 வயது இளைஞர் அண்மையில் 50 நாணயக் குற்றிகளையும் 30 ஆணிகளையும் விழுங்கி விட்டார்.

உடனே அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சுகமடைந்து ஆஸ்பத்திரியில் இருந்து வீடு செல்ல அனுமதிக்ப்பட்டார். ஆனால் அவர் உடனே கைக்கடிகாரத்தை 'லபக்' என்று விழுங்கி விட்டார். மீண்டும் ஆஸ்பத்திரி வாசம் தொடங்கியது. ★

## வீதிகள் பற்றி கம்பியூட்டர்!

வீதிகளின் சரித்திரங்களைக் கூறும் கம்பியூட்டர் ஒன்று இந்தியாவில் செயல்படுகிறது.

இந்தியாவில் 32 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலைகள் உள்ளன.

இந்தச் சாலைகள் எந்த இடத்தில், என்ன நிலைமையில் இருக்கின்றன என்ற தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை கம்பியூட்டரில் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் கம்பியூட்டரின் ஒரு பொத்தானை அமுக்கினால் போதும், இந்தியாவின் எந்த ஒரு பகுதியில் உள்ள நெடுஞ்சாலையின் நிலைமையையும் அடுத்த நொடியில் தெரிந்துகொள்ள முடியும்.

★ ★ ★

இந்தியாவிடம் 20 அணுகுண்டுகளும் பாகிஸ்தானிடம் 4 அணுகுண்டுகளும் இருக்கின்றன என்று அமெரிக்க சஞ்சிகை 'நியூஸ்வீக்' தெரிவிக்கிறது. ★

# இந்துமா கடலுக்கு இழுத்து வரப்படும் பனிப்பாறை!

1750 இல் பிரெஞ்சு கடற்கரையோரம் ஒதுங்கிய ஒரு மாபெரும் பனிப்பாறை கிட்டத்தட்ட ஒரு வருட காலம் அங்கேயே இருந்து பின்னர் உருகிக் கரைந்தது. மனிதத் தேவைகளுக்குத் 'திடநீரை'ப் பயன்படுத்தும் கருத்தை ஒருவேளை அச்சம்பவம் தூண்டியிருக்கக்கூடும். இத்தகைய ஒரு சாத்தியப்பாடு இருப்பதை யாரும் அக்கறையுடன் சிந்தித்ததில்லை.

கடந்த சில ஆண்டுகளாக, மனிதத் தேவைகளுக்குப் பனிப்பாறைகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு அநேகமாக எல்லா வளரும் நாடுகளும் தள்ளப்பட்டன. பின்னர் உருவாக்கப்பட்ட பல திட்டங்கள் அதிகம் செலவு பிடிப்பவையாகவும் ஆபத்தானவையாகவும் இருந்தன. மிகப் பாதுகாப்பான, சிக்கனமான ஒரு திட்டத்தை சோவியத் யூனியன் முன்வைத்துள்ளது. அன்டார்க்டிக்கிலிருந்து பனிப்பாறைகளை இழுத்துச் செல்லும் சாத்தியக்கூறுகளை ஐ.நா. வில் தண்ணீர் சப்ளை நிபுணராக இருக்கும் ஓய், பொகமலோங், பி எச். டி. (பூகர்ப்பவியல் மற்றும் கனிஜ பொருளியல்) தலைமையில் சோவியத் விஞ்ஞானிகளின் குழு ஒன்று ஆராய்ந்து வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், தண்ணீர்ப் பற்றாக்குறையினால் அவதிப்பட்டு வரும் யேமன் அரபுக் குடியரசில் அவர் நீண்டகாலம் பணிபுரிந்தார். ஜனாதிபதி சாலேயின் வேண்டுகோளின் பேரில் டாக்டர் பொகமலோவ் நீர் வளங்களைக் கண்டறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தெற்குக் கடல்களுக்குப் பனிப்பாறைகளை இழுத்துச் செல்வதைப் பற்றி அப்போதுதான் அவர் தீவிரமாகப் பரிசீலனை செய்தார்.

ஒரு நாடு முழுவதற்கும் தேவையான தண்ணீர் சப்ளை செய்வதற்குக் கடல்நீரை நல்ல நீராக்கும் மிகச் சக்தி வாய்ந்த அணுசக்தி வசதிகள் பெருமளவில் தேவைப்படும். இத்தகைய ஒரு திட்டத்தை எந்த நாடும் இன்றைக்கு மேற்கொள்ள முடியாது என்று டாக்டர் பொகமலோவ் கருதுகிறார். கடல் நீரை நல்ல நீராக்கும் ஒரு பெரிய அமைப்புத் தரக்கூடிய நீரை, சராசரி அளவு கொண்ட ஒரு பனிப்பாறை கொண்டிருக்கிறது. அன்டார்க்டிக் பனிக்கட்டி தூய்மையான நீரினாலானது. இதைக் கடல் நீருடன் கலந்து பாசனத்திற்குப் பயன்படுத்தலாம். கடல் நீரை நன்னீராக்குவதற்கு ஆகும் செலவைவிட பனிப்பாறை நீர் 50 – 60 சதவிகிதம் மலிவாக இருக்கும்.

அன்டார்க்டிக் கடலில் 100 சதுர கி. மீ. பரப்பில் 60-80 நடுத்தர அளவுடைய பனிப்பாறைகள் மிதக்கின்றன. செயற்கைக் கோள் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி விசேட கருவிகள் பொருத்தப்பட்ட கப்பல்கள் இந்தப் பனிப்பாறைகளைப் 'பிடித்து' இந்துமா கடல் வழியாக இழுத்து வரும். இக் கடல் பயணத்திற்கு ஐந்து மாதங்கள் பிடிக்கும். வழியில் பனி உருகிவிடாதிருப்பதற்காக மிதந்த வேகத்தில் அவை இழுத்து வரப்படும். வளைகுடாவில் கொண்டு வந்து அவை நிறுத்தப்படும். பின்னர் விசேடமாக உருவாக்கப்பட்ட குழாய்கள், நீரை நிலத்திற்குக் கொண்டு செல்லும். இந்த நீர் விவசாயத்திற்குப் பேருதவியாக இருக்கும், இதனால் உணவுப் பொருள் உற்பத்தி அதிகரிக்கும். ★

## தப்பிய எயிட்ஸ் நோயாளி சுட்டுக் கொல்லப்பட்டார்!

ஆஸ்பத்திரியில் இருந்து தப்பிய எய்ட்ஸ் நோயாளி ஒருவரை, வீதியில் வைத்துப் பொலீஸார் சுட்டுக் கொன்றனர்.

எகிப்து தலைநகரான கெய்ரோவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பாய்சி முகமது அசமது (வயது 32) என்பவர் இத்தாலியில் இருந்து எகிப்து வந்தார்.

அவர் ஒரு எய்ட்ஸ் நோயாளி என்பது கண்டு பிடிக்கப்பட்டு கெய்ரோ நகரில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கிருந்து அவர் வெளியே செல்லமுடியாதபடி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இருந்தும் அவர் தப்பிவிட்டார். அவரைப் பிடிக்கப் பொலீஸ் வலை விரித்தது.

அவரது துரதிஷ்டம் அவர் மாட்டிக் கொண்டார்.

மக்கள் நடமாட்டம் மிகுந்த வீதி ஒன்றில் அவர் சென்று கொண்டிருந்ததைக் கண்ட பொலீஸார் உடனே அவரைச் சுட்டுக் கொன்றனர். ★

## பரிணாம வளர்ச்சியில் மடகஸ்கார் லெமூர்!

மனிதன் முதன் முதலில் ஆபிரிக்காவில் தோன்றியதாகப் பல நிபுணர்கள் கருதுகின்றனர்.

மனிதன் தோன்றுவதற்கு வழிவகுத்த பரிணாம வளர்ச்சி சங்கிலியில் ஆதிக்கால லெமூருக்கும் (Lemur) இடமுண்டு. படத்தில் காணப்படுவது மடகாஸ்கர் தீவில் உள்ள இப்போதைய லெமூர் ஆகும்.

உயிரினம் முதலில் கடலில் தோன்றியது என்று பிரபல விஞ்ஞானி கார்ல் சாகன் (Carl Sagan) கூறியிருக்கிறார். 50 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் கடலில் தோன்றிய Trilobite என்னும் பூச்சிகளின் கற்படிவங்களை இதற்கு ஆதாரமாகக் காட்டுகிறார்.

பூமியில் தான் முதலில் உயிரினம் தோன்றியதற்கு 85 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பல செல் நுண்ணுயிரின் கற்படிவம் ஆதாரமாகக் காட்டப்படுகிறது. ★



## காந்திஜி கூறிய உணவு வகை!

மகாத்மா காந்தி எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'Key to Health' என்ற நூலை எழுதினார்.

மக்களின் உடல் நிலை, ஆரோக்கிய நிலை, உடல், அதற்கு அவசியமான காற்று நீர், உணவு, நல்வாழ்வுக்கு அவசியமான கட்டுப்பாடுகள், போதைவஸ்துக்கள் எனப் பல விஷயங்கள் பற்றி அந்த நூலில் காந்தி அடிகள் அழகாக விவரித்திருக்கிறார். உணவு பற்றிக் காந்திஜி கூறுவதை வாசியுங்கள்;

''பச்சைக் காய்றிகளையும் கீரைகளையும் தினமும் சுமாரான அளவு சாப்பிடவேண்டும்.

''உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு போன்றவற்றை நான் காய்கறியில் சேர்க்கவில்லை. அவை மாவுப் பொருளை மட்டுமே கொடுப்பதால் அவற்றைத் தானிய வகைகளில் தான் சேர்க்கவேண்டும்.

சாதாரணமாகப் பச்சைக் காய்றிகளைப் போதிய அளவு சாப்பிடுவது நல்லது. வெள்ளரிக்காய், தக்காளிப்பழங்கள், கடுகுக்கீரை போன்ற மிருதுவான இலைகளை உடைய கீரைகள் ஆகியவற்றைச் சமைக்கவேண்டியதில்லை. அவற்றை நன்றாகக் கழுவி விட்டுக் குறைந்த அளவு எடுத்துப் பச்சையாகச் சாப்பிடவேண்டும்''—இப்படி காந்திஜி அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார். ★

## பழங்கள் கெடாதிருக்க புதிய மருந்து!

பழங்கள் கெட்டுப் போகாதபடி ஒன்பது மாதங்கள் வரை புத்தம் புதிதாக வைத்திருக்க உதவும் நூதன திரவக் கலவை ஒன்றை எர்னஸ்ட் ஹேய்ஸ் என்ற விஞ்ஞானி கண்டு பிடித்திருக்கிறார்.

பூச்சிகள், நண்டு. நத்தை போன்றவற்றில் இது எடுக்கப்படுகிறது.

இந்தப் பொருளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட திரவக் கலவையை பழங்கள் மீது மெல்லிய ஆடை படிந்தது போன்று தடவி விடவேண்டும். ★

## பாடசாலை வாசலில் "மெட்டல் டிரெக்டர்" கருவி

அமெரிக்காவில் நியூயோர்க் பாடசாலைகளில் 'மெட்டல் டிரெக்டர்' கருவிகளைப் பொலீஸார் நுழைவு வாசலில் பொருத்தி வைக்க முடிவு செய்து உள்ளனர்.

இதற்குக் காரணம் நகர பாடசாலைகளில் துப்பாக்கிச் சூடு, கத்திக்குத்து சம்பவங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன.

கடந்த ஆண்டு மட்டும் அங்குள்ள 974 பாடசாலைகளில் 1,500 துப்பாக்கிச்சூடு, கத்திக்குத்துச் சம்பவங்கள் நடந்து உள்ளன.

இதில் ஆயிரம் ஆசிரியர்கள் காயம் அடைந்து இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு இந்தக் குற்றங்கள் இன்னும் 10 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி உலோகங்களை அடையாளங் காட்டும் 'மெட்டல் டிரெக்டர்' கருவிகளைப் பாடசாலை நுழைவு வாசலில் பொருத்தி வைக்க பொலீஸார் முடிவு செய்து உள்ளனர். ★

# சரித்திரத்தில் இடம்பெறும் பாண்!

உலக மக்கட் தொகையில் மூன்றில் இரண்டு பாகம், கோதுமையையே மிக முக்கிய உணவுப் பயிராகக் கொண்டுள்ளது. வருடத்திற்கு 40 கோடி தொன்னுக்கு அதிகமான கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது.

இது உலக தானிய அறுவடையில் 25 சத வீதமாகும்.

சோவியத்யூனியனில் உள்ள போறணைகளில் 600 வகைகளுக்கும் மேலான பாண் தயாரிக்கப்படுகின்றது.

இவற்றில் ரோஸ்,பேகல்ஸ், ரஸ்க் போன்றவை பிரசித்தமானவை. மேலும் 30 வகையான பத்திய (Diet) விதபாண் தயாரிக்கப்படுகிறது.

அரைக்கிலோ அளவு உள்ள நல்விதப் பாண், மனிதனின் தினசரி தேவைகளில் புரோட்டின், கார்போஹைடிரேட், விட்டமின் 'பி', 'ஈ' போன்றவற்றில் 50 சத விகிதத்தை நிறைவு செய்கிறது. மேலும் தாதுப்பொருள்களைத் தந்து ஈடு செய்கிறது.

எகிப்திய பிரமிட்டுகளைவிட பாண் பழைமையானது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, சூரிச் மியூஸியத்தில் உள்ள பாண் 6 ஆயிரம் வருடங்களுக்கு முன்பான கற்காலத்தைச் சேர்ந்ததாம்.

நியூயார்க் மியூசியங்களில் ஒன்று கொஞ்சம் [illegible] பாணை வைத்திருக்கிறது. இது 3,400 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டதாம்.

பண்டைய கிரீஸில் பாண் தயாரிப்பவர்கள் (Bakers) தனிச் சலுகைகளையும், பாடசாலைகளில் சிறப்புப் பயிற்சிகளையும் பெற்றனர்.

பண்டைய ரோமில் 'பேக்' செய்யத் தெரிந்த அடிமை மற்றவர்களைக் காட்டிலும் 10 மடங்கு அதிகமாக விலை போகக் கூடியவனாக மதிப்பிடப்பட்டான்.

மேலும் அக்கால ரோமானியச் சட்டத்தின்படி பேக்கரைக் கொலை செய்தவன், இரண்டு முறை கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று [illegible]. ★

## திருடன் கூறிய புத்திமதி!

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெண் எலீனா. இவரது வீட்டில் இருந்த தங்கவளையல், மோதிரம் ஆகியவற்றைக் கொள்ளையர்கள் திருடிக்கொண்டுபோய்விட்டனர்.

இதனால் வேதனை அடைந்த எலீனா டெலிவிஷன்மூலம் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

'கார் விபத்தில் மரணமடைந்த எனது 15வயது மகள் நதியாவின் நினைவாக அந்த மோதிரத்தையும் வளையலையும் வைத்திருந்தேன். யார் எடுத்தாலும் திருப்பித்தந்து விடுங்கள்' —என்று கண்ணீர் மல்கக்கேட்டார்.

இதைப்பார்த்த திருடர்களின் உள்ளம் உருகிவிட்டது. மோதிரத்தையும் வளையலையும் எலீனாவுக்கு அனுப்பி வைத்தனர்.

'இனிமேலாவது ஜாக்கிரதையாக பாதுகாக்கவும்' —இப்படி ஒரு கடிதத்தையும் அவருடன்கூட அனுப்பிவைத்தனர்.

## 121 பெண்களைத் திருமணம் செய்தவர்!

கென்யா நாட்டைச் சேர்ந்த விவசாயி டெஞ்சா.

69 வயதான இவர் இதுவரை 126 பெண்களைத் திருமணஞ் செய்து இருக்கிறார்.

அவர்களில் 85 பேரை அவர் விவாகரத்துச் செய்து விட்டார்.

இப்போது அவருடன் இருப்பது 41 மனைவிகள். இவருக்கு 497 குழந்தைகளும் உள்ளனர்.

41 மனைவிகளும் தினமும் காலையில் டெஞ்சா வீட்டில் உள்ள ஓர் அறையில் கூடுகிறார்கள்.

அப்போது டெஞ்சா அங்கு வந்து அவர்களுக்கு இடையே உள்ள சண்டை, சச்சரவுகளை விசாரித்து தீர்த்து யார், யாருக்கு என்ன வேலை என்று சொல்லி அவர்களை வயல் வெளிக்கு அனுப்பி வைக்கிறார்.

'மேலும் திருமணஞ் செய்து கொள்ள மாட்டேன்'— என்று கூறும் டெஞ்சா, 'பெண்கள் பியர் போன்றவர்கள். குடிக்கக் குடிக்க மேலும் கேட்கத் தோன்றும்'— என்று சொல்கிறார். ★

## நீண்டநாள் வாழும் ஜப்பானியப் பெண்கள்!

உலகிலேயே ஜப்பானிய பெண்கள்தான் நீண்ட நாள் உயிர்வாழ்கிறார்கள்.

அவர்களது சராசரி ஆயுட்காலம்; 81. 39 ஆண்டுகள் ஆகும்.

ஜப்பானுக்கு அடுத்து ஐஸ்லாந்து. ஹாலந்து நாட்டுப் பெண்கள் அதிகநாள் உயிரோடு இருக்கிறார்கள்.

ஆண்களில் ஐஸ்லாந்து நாட்டினரின் ஆயுள்காலம்தான் அதிகம். அதற்கு அடுத்து ஜப்பானிய ஆண்கள் இரண்டாவது இடத்தை வகிக்கிறார்கள். ஜப்பானிய ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 75. 61 ஆண்டுகள் ஆகும்.

1985இல் ஜப்பானின் மக்கள் தொகை 12 கோடி 10லட்சம் ஆகும். இதில் 1 கோடியே 25 லட்சம் பேர் 65 வயதைத் தாண்டியவர்கள்.

2020 ஆவது ஆண்டில் ஜப்பான் மக்கள் தொகை 13 கோடியே 20 லட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அப்போது 3 கோடி 17 லட்சம் பேர் 65 வயதைத் தாண்டியவர்களாக இருப்பார்கள்.

அதாவது மொத்த ஜனத்தொகையில் 25 சத வீதம் பேர் 65 வயது கிழவர்களாக இருப்பார்கள்.

## மூளையின் இயக்கத்தை அறிய உதவும் கருவி!

மனித இருதயம் செயற்படும் விதத்தை நவீன கருவிகளின் உதவியால் டாக்டர்கள் அறிய முடிகிறது.

இதேபோல மனிதனின் மூளை செயற்படும் விதத்தை அறிய நூதன முறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த முறையில் கண்ணுக்குத் தெரியாத 'இன்பிராரெட் ஒளிக் கதிர்' மண்டை ஓட்டுக்குள் செலுத்தப்படுகிறது.

அது மூளை இயங்கும் முறையைத் தெரிந்துகொண்டு மீண்டும் வெளியே வருகிறது.

அந்த ஒளிக்கற்றையை கம்பியூட்டரில் செலுத்தி அதை மொழிபெயர்த்து திரையில் போட்டு மூளை செயல் செயல்படும் விதத்தைப் பார்க்கலாம்.

இந்தப்புதிய முறை, உயிருக்குப்போராடும் 20 நோயாளிகளிடம் பரிசோத்துப் பார்க்கப்படவிருக்கிறது. ★

## கண்பார்வைக் குறைவைக் கண்டு பிடிக்க எழுத்துப் பட்டியல்!

தற்போது கண்பார்வைக் கோளாறைக் கண்டு பிடிக்க டாக்டர்கள், எழுத்துப் பட்டியல் ஒன்றைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தப் பட்டியலில் மேலே உள்ள எழுத்துக்கள் பெரிதாகவும் கீழே உள்ள எழுத்துக்கள் வரவரச் சிறிதாகவும் இருக்கும்.

எவ்வளவு சிறிய எழுத்துவரை நோயாளியால் படிக்க முடிகிறது என்பதை வைத்து அவர் அணிய வேண்டிய கண்ணாடியை டாக்டர்கள் முடிவு செய்வார்கள். இப்போது புதிய எழுத்துப் பட்டியலை அமெரிக்கக் கண் டாக்டர்கள் தயாரித்து உள்ளனர். இந்தப் பட்டியலில் எழுத்துக்கள் அனைத்தும் ஒரே அளவில் இருக்கும்.

ஆனால் மேலே உள்ள எழுத்துக்களில் கறுப்பு மை அழுத்தமாகவும் கீழே வரவர மங்கலாகவும் ஆச்சாகி இருக்கும்; எவ்வளவு மங்கலான எழுத்துவரை நோயாளியால் படிக்க முடிகிறது என்பதை வைத்து அவர் அணிய வேண்டிய கண்ணாடி முடிவு செய்யப்படுகிறது.

இந்தப் புதிய பட்டியல் மூலம் கண்பார்வைக்கோளாறை மட்டுமின்றி கண்நோய்களையும் கண்டுபிடிக்க முடிகிறது. ★

பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் புலவர்கள் - ஒரு மதிப்பீடு

ஆங்கிலத்தில் மைனர் போயெற்ஸ் என்றே லெசர் போயெற்ஸ் என்றே வகுக்கப்பட்டவரை தனிப்பாடற் புலவர் எனக் குறித்தல் அமைவுடைத்தாகும். சில்லறைப் புலவர் என்றோ சிறு புலவர் என்றோ கூறல் மரபுக்குப் பொருந்துவதாயில்லை. தனிப்பாடற் புலவர் பலர் டொன்ஸி முதல் சால்மேஸ் வரையுள்ளவராவர். அவர்களுள் யங், சென்ஸ்ரோன், டயர் கிறின், பிளெயர், ஆம்ஸ்ரோங், அகென்சயிட், பீட்டி, சிமாட் முதலானோர் அவ்வப்போது சில தனிப்பாடல்கள் சுவை ததும்பப் பாடியவராவர்.

எட்வேட் யங் என்பவர் 1683 ஆம் ஆண்டிற் பிறந்து 1765 ஆம் ஆண்டுவரை வாழ்ந்தவர். அவர் நாடகத்துறையில், அரசியலில், சமயத்திலே பிரகாசிப்பதற்கு முயற்சிசெய்து மனமுடைந்து ஈற்றில் எழுத்துலகில் தஞ்சம் புகுந்தார். அவர் முதலில் புசிரிஸ் என்னும் நாடகம் ஒன்றைத் தயாரித்தார். ஈரடிச் செய்யுளில் யொப் என்னும் நூலுக்கு உரை விளக்கம் பாடினர். பின்னர் 1721 ஆம் ஆண்டில் பழிவாங்குதல் என்னும் புகழ்பெற்ற நாடகத்தை யாத்துப் பெரிதும் மதிக்கப்பெற்றர்.

பின்னர் பல நையாண்டிப் பாடல்களைப் பாடி வெளியிட்டார். மேலும் சமுத்திரம், வாழ்க்கையைப் பற்றிய இரவுச் சிந்தனைகள், மரணமும் அமரத்துவமும் முதலிய பாடல்களையும் பாடினர். பின்னர் மீண்டும் நாடகத்துறையில் ஈடுபட்டுச் சகோதரர் என்னும் தமது புகழ்பெற்ற நாடகத்தை எழுதி முடித்தார். ஈற்றில் எல்லாவற்றுக்கும் பார்க்கச் சிறந்ததான விலகியிருத்தல் என்னும் கதைப் பாடலை நாட்டார் பாடற்பாணியிற் பாடி முடித்தார்.

யங் புலவரின் பாடல்கள் அதிகமாகப் பயிலப்படாவிட்டாலும் அவற்றில் விரவி வரும் அடிகள் பல ஆங்கிலேயரின் நாளாந்த வாழ்க்கையில் வழக்கில் இருந்து வருகின்றன என்பர். அவர் பாடிய நையாண்டிப் பாடல்கள் போப் புலவரின் நையாண்டிக் காவியத்துக்கு முற்பட்டனவாகும்.

யோன்டயர் என்பவர் 1699 ஆம் ஆண்டிற் பிறந்து 1757 ஆம் ஆண்டுவரை வாழ்ந்தவராவர். அவரின் பாடல்கள் மிகவும் குறைவாக இருந்த போதிலும் அவர் தரமான புலவர் என மதிக்கப்பெறுகிறார். அவர் பாடிய கம்பசி மலீர், உரோமாபுரியின் சிதைவுகள் உச்சமான போதிலும் களாய் இருந்த போதிலும் கருதப்பெறுவனவாகும்.

மாதியு கிறின் என்பவர் 1696 ஆம் முதல் 1737 வரை வாழ்ந்தவர். அவரின் பாடல்களுள் டொன்ஸ்ரி என்பது சிறந்ததாகும். இன்னும் ஸ்பிளீன் என்னும் உளச்சோர்வுப் பாடலும், குக்கிப் பாக்களுக்குக் கடிதம் என்னும் பாடலும் தரமானவையாகும்.

கிறின் சுயாதீன சிந்தனையாளரான குவேக்கர் கூட்டத்தினரைச் சேர்ந்தவராவர். அவர் தம் கோட்பாடுகளில் நேர்மை, நிதானம், கடுமை, விழிப்பு, தமைப்பு ஆகிய நல்லியல்புகள் சிறக்கச் சுங்கப் பகுதியில் மேலுத்தியோகம் வகித்தவராவர்.

கிறின் புலவரின் செய்யுள்கள் கடுமையானவை என்பதோடு அவர் எண்சீர்யாப்பிலும் இலகுவாகப் பாடியுள்ளார். அவர் பாடல்களில் இயல்பாயுள்ள நகைச்சுவையும் நிதானமும் பாராட்டற்பாலன. அன்றி அவரின் எப்பிகிலிறியன் என்னும் உலோகாயதக் கோட்பாட்டின் சிற்றின்பப் பிரியம் பாடல்களில் ஆங்காங்கே புலப்படுகின்றது.

றேபேட் பிளயர் என்னும் அவர் 1699 முதல் 1746வரை வாழ்ந்தவராவர். அவர் வாழ்வில் மலர்ச்சியோ, சிதைந்த நிறைவோ இல்லாதவராய் ஒருவகையில் மப்பான போக்குள்ளவராய் வாழ்ந்தார் என்பர். அவர் பாடிய ஒரே ஒரு செய்யுள் அவரின் நாற்பத்தி நான்காம் ஆண்டுப் பராயத்தில் கல்லறை என்னும் தலைப்பில் பாடப்பட்டதாகும். அது இன்றுவரை தரமான பாடல் என எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.

**க. சி. குலரத்தினம்**

யோன் ஆம்ஸ்ரோங் என்னும் ஸ்கொத்துலாந்தின் வைத்தியர் 1709 ஆம் ஆண்டிற் பிறந்து எழுபது ஆண்டுகள் வாழ்ந்தவர். அவர் உடல்நலம் பேணுதல் என்னும் தலைப்பில் 1744 ஆம் ஆண்டளவிற் பாடிய ஒரு செய்யுள் இன்றுவரை உயர்ந்ததாக மதிப்பிடப்பட்டு வருகிறது.

றிச்சாட் குளோவர் என்பார் 1712 ஆம் ஆண்டிற் பிறந்து 1785 வரை வாழ்ந்தவராவர். அவர் நாட்டார் பாடல்கள் பாடுவதில் சிறந்தவராய் ஹொசியர் தளபதியின் ஆவி என்னும் தலைப்பில் ஒரு கதைப்பாடல் பாடியுள்ளார். அது அவருக்குத் தற்செயலாகப் பாட வந்தது என்று கருதுவாரும் உளர்.

குருட்டுத் தவிசு வக்குகள் பாய்ந்த மாதிரி அவர் தற்செயலாகப் பாடினதாலும் பாட வந்து பாடிய பாடற்றிறத்தினலே அவர் உண்மைப் புலவன் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை எனலாம். இன்னும் அவர் பாடிய லியோனிடாஸ் அதினெயிட் என்னும் பாடல் மிகச்சிறந்ததென முன்னொரு காலத்தில் கருதப்பட்டதாயினும் இக்காலத்தில் அதிகம் பயிலப்படுவதாக இல்லை. அது மிக உயர்ந்த தரத்தது எனபர்.

வில்லியம் சென்ஸ்ரோன் என்னும் ஆற்றல்மிக்கவரும் இயற்கை விவேகியுமான புலவர் 1714 ஆம் ஆண்டு முதல் 1763 ஆம் ஆண்டுவரை வாழ்ந்தவராவர். நிரம்பிய புலமையுள்ளம் படைத்த அவர் விவசாயத்தில் பெரிதும் ஈடுபட்டு வந்தார். அவர் இளமையிலேயே செய்யுள் யாப்புக்கள் பெற்றுப் பலவகையான சீர்கள் அமைந்த செய்யுள்களை இலகுவாகப் பாடி வந்தார். அவரின் செய்யுள்களில் உபாத்தியாயர் அம்மா என்னும் செய்யுள் நாட்டுப்புற வாழ்க்கையின் அழகை அருமையாகப் படம் பிடித்துக் காட்டுவது. எழுத்துப் பொறிப்பு என்னும் தலைப்பில் அவர் பாடிய பாடல்கள் எல்லோராலும் படித்துப் பாராட்டப்பெற்றுப் பொதுமக்கள் நாவில் பயின்று வருவதாயிற்று. விகடத் துணுக்கு ஒன்றைப் பீடிகையாகக் கொண்டு பாடிய பாடலும் தரமானது. ஆனால் அவர் கையறு நிலையில் பாடிய பல பாடல்கள் அவ்வளவு புகழ்பெறவில்லை என்பர்.

அவர் இடையர் சேரியைக் களமாகக் கொண்டு பாடிய முல்லைத்திணையின் இசைப் பாடல் நான்கு பாகங்களைக் கொண்டு அருமையாக அமைந்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஹென்லி மடத்துள் இருந்து எழுதியது என்னும் தலைப்பில் பாடிய கட்டற்ற வாழ்வுப் பாடல் மிக நேர்த்தியானதாய் உள்ளது. மாக் அகென்சயிட் என்னும் புலவர் 1721 முதல் 1770 வரை வாழ்ந்தவர். அவர் புலனெறிவழுக்கார்ந்ததும் சொல்லாட்சித் திறனுள்ளதும் கற்பனை நிரம்பியதுமான ஒரு போக்குடையவராய்ப் பாடி வந்தார். அவர் கற்பனையின் இன்பங்கள் என்னுந்தலைப்பிற் பாடிய நெடிய பாடல் உணர்ச்சி ஆர்வங்குறைந்த போக்கில் வெறும் நிழற்சிறிவு அமைந்துள்ளது என்பர். அவர் பாடிய நீரர மகளிர் என்னும் பாடல் பதினெட்டாம் நூற்றாண்டின் தலைசிறந்த ஐந்து சீர் செந்தொடைப் பாடல் என மதிக்கப்பெறுவதாயிற்று. இன்னும் அவர் பாடிய ஹிழுறிபோவுக்கு முடங்கல் என்னும் கவிதை முடங்கல் நையாண்டித் தன்மையுள்ளதாகும். அதுவே அவரின் மிகத்திறமான படைப்பு எனப் பாராட்டுவாரும் உளர். எவ்வாறாயினும் அவர் உண்மைக் கவிஞர் என்ற முடிவென்று அது எங்குள்ளது என்றே அறியாதவர் என்று ஆய்வாளர் இன்டல் செய்துள்ளனர்.

கிறிஸ்தபர் சிமாட் என்னும் புலவர் 1722 முதல் 1791 வரை வாழ்ந்தவர். அவர் முன் சொன்ன அகென்சயிட் புலவரைப் போலன்றிப் புலமை எங்கேயுள்ளது, உண்மையான பாடல் எத்தகையது என்னும் நுணுக்கத்தைக் கண்டறிந்தவராவர். அதுவும் அவர் ஒரு சமயம் பித்தர் மருத்துவமனையில் இருந்த போது கண்டார் என்பர். அவர் தாவீது அடிகளுக்குப் பாடிய பாடல் விவிலிய மத நூலின் தழுவலாயுள்ள போதிலும் நன்கமைந்துள்ளது என்பர். அதில் புலமை வளம் நிரம்பியுள்ளது என்றும் கூறியது கூறல் என்னும் குற்றம் அவ்வளவாக அதனைப் பங்கப்படுத்தவில்லை என்றும் கருதுகிறார்கள். பொதுவாக அச்செய்யுள் படிப்பவர் மனதுக்குப் பெருவிருந்தளிக்கின்றது என்பதே ஆய்வாளரின் கருத்தாகும்.

இன்னும் சிமாட் புலவர் பாடிய பல்வேறு பாடல்கள் பலதரப்பட்டவாய் உள்ளன. அவை ஹிலியர் என்னும் நையாண்டிப்பாடல், சங்கீதத் தேவதைக்குச் சென்சிசிறியா தினத்தில் பாடிய எழுச்சிப் பாடல், இறைவன் மேல் பாடிய பாசுரப்பாடல், பரிசுப் பாடல் என்றித் திறத்தன. அவை யாவும் புலமைப் பஞ்சம் நிரம்பிய சொல்லடுக்குக் கவிதைகள் என ஒதுக்கப்பட்டுள்ளனவாகும். ஆனால் அவர் பித்தர் மருத்துவமனையில் இருந்தபோது பாடியதாகப் பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட டியபிஸ்டர் அக்னொ என்னும் இன்புறு நல்லின பாடல்கள் மிகவும் நல்லன என்னும் மதிப்புக்குரியனவாகும்.

வில்லியம் பால்கொணர் என்னும் கடலோடி 1732 முதல் 1769 வரை வாழ்ந்தவராவார். அவர் பாடிய பாடல்கள் சில அவர் காலத்துக் கவிதைகளிற் சிறந்தவை என மதிப்புப் பெற்றனவாகும். கப்பல் உடைவு என்னும் நிகழ்ச்சியைப் பற்றி அவர் பாடிய பாடல் கடலோடிகளின் வாழ்க்கையை விபரிப்பதாகும்.

யேமஸ் பீட்டி என்னும் பெரிய புலவர் 1735 முதல் 1803 ஆம் ஆண்டுவரையும் வாழ்ந்தவராவார். அவர் வரலாற்றுப் பின்னணியும், வீரம், காதல் ஆகிய உணர்ச்சியும் கொண்டு ஸ்பென்சர் புலவரின் போக்கிற் பாடல் யாத்த பெருமைக்குரியவராவர். ஆனால் அவர் பாடல்களில் ஸ்பென்சரின் கவித்துவத்திலுள்ள ஓசை நயம் இல்லை என்று ஆய்வாளர் கருதுகிறார்கள். இன்னும் அவர் மலைகள், குன்றுகள், பள்ளத்தாக்குகள் ஆகிய இயற்கை வளங்களை அருமையாகப் பாடியுள்ளார் என்பதைப் பாராட்டாமல் விட முடியாது. அவர் பாடிய தனிப் பாடல்கள் தரமில்லாதவை என்பதில் சந்தேகமில்லை. அவர் புலவர் இனே யாத்த வழியில் கையேடு நிறைவற்ற கலங்கிய பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களும் தரமில்லாதவை என்பதே ஆய்வாளர் கருத்தாகும். இறுதியாகப் பீட்டியைப் பற்றிப் அவர் அபர்டீன் பல்கலைக்கழகத்தில் தத்துவ சாத்திரப் பேராசிரியராய் இருந்து சிறப்புப் பெற்றர் என்று தெரிகிறது. அவரின் எழுத்தோவியங்கள் புகழ்பெற்றுள்ளன. ★

# நேதாஜி வாழ்வில் ஒருநாள் ....

அப்போது கல்கத்தா பிரஸிடென்ஸிக் கல்லூரியில் சரித்திரப் பேராசிரியராக ஒரு வெள்ளைக்காரர் இருந்தார். அவர் பெயர் சி. எப். ஒட்டன் என்பது. அவர் எப்போதும் இந்தியர்களைப் பற்றி இழிவாகவே பேசுவார்.

ஒரு நாள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது அவர் வங்காளிகளைப் பற்றி மிகவும் கேவலமாகப் பேசி விட்டார். ''சார், இந்த மாதிரிப் பேசுவது அழகல்ல. எங்கள் மனத்தைப் புண்படுத்தாதீர்கள்.'' என்று அவரிடம் மாணவர்கள் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், அவர் மாணவர்களின் பேச்சை மதிக்கவில்லை. திரும்பத் திரும்ப வங்காளிகளைக் கேவலப்படுத்தியே பேசிக் கொண்டிருந்தார். அவரது பேச்சைக் கேட்கக் கேட்க மாணவர்களின் உள்ளம் கொதித்தது. ஆத்திரம் கொண்டார்கள். கட்டுப்பாடாக எல்லாரும் வகுப்பை விட்டு வெளியேறிவிட்டனர்.

மாணவர்களின் கிளர்ச்சியைக் கண்டு ஒட்டன் திடுக்கிட்டார். கல்லூரி அதிகாரிகள் திகைத்தார்கள். கடைசியில் இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்தவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்தார்கள். அவர்களுக்கு உடனே அபராதம் விதிக்கவில்லை; அல்லது சில நாட்களுக்கு அவர்கள் கல்லூரியில் கால் எடுத்து வைக்கக் கூடாது என்றும் உத்தரவு போடவில்லை. வேறு என்ன செய்தார்கள்? அவர்களை அந்தக் கல்லூரியை விட்டே நீக்கிவிட்டார்கள்! அத்துடன், இரண்டு ஆண்டுகளுக்கு வேறு எந்தக் கல்லூரியிலுமே அவர்கள் சேர முடியாதபடியும் செய்து விட்டார்கள்.

அப்படி நீக்கப்பட்ட மாணவர்களில் நமக்கு மிகவும் வேண்டிய ஓர் இளைஞனும் இருந்தான். 'கல்லூரியை விட்டு நம்மை நீக்கிவிட்டார்களே' என்று அவன் கவலைப்படவில்லை. ''மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் திரும்பவும் கல்லூரியில் சேர்த்துக் கொள்வார்கள்'' என்று சிலர் அவனிடம் கூறினார்கள். ஆனால் அவன் அதற்கும் தயாராக இல்லை. ஒரு வெள்ளைக்காரர் நம் நாட்டவரைப் பற்றிக் கேவலமாக நம்மிடமே பேசுகிறார். அதைக் கேட்டுக் கொண்டு மரக்கட்டை மாதிரி நாம் சும்மா இருப்பதா? அவரது போக்கைக் கண்டிக்கவே நாங்கள் கிளர்ச்சி செய்தோம். நாங்கள் செய்ததில் தவறே இல்லை'' என்றான் அந்த இளைஞன்.

அத்துடன் அவன் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டுச் சும்மா இருக்கவில்லை. இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகு, திரும்பவும் கல்லூரியில் சேர்ந்தான்; அக்கறையுடன் படித்தான்; பி. ஏ. வகுப்பில் தேறினான்; பிறகு இங்கிலாந்து சென்றான். ஐ. ஸி. எஸ். படித்தான். அதிலும் தேறிவிட்டான் ஐ. ஸி. எஸ். பட்டம் பெற்றபோது அவனுக்கு வயது இருபத்துமூன்று தான்.

ஐ. ஸி. எஸ். படித்தவர் என்றாலே ஆண்டவனுக்கு அடுத்தவர், என்று நினைக்கும் காலம் அது! ஆனால் அந்த இளைஞன் பணத்தைப் பற்றியோ, பதவியைப் பற்றியோ கவலைப்படவில்லை. பம்பாய் வந்து இறங்கியதும் உடனே விடுதலைப் போரில் குதித்து விட்டான். பல முறை சிறை சென்றான்; பலமுறை நாடு கடத்தப்பட்டான்; வாழ்நாள் முழுவதையும் தேசத்துக்காகவே அர்ப்பணம் செய்தான். அந்த இளைஞன் தான் ஜெய்ஹிந்த் என்னும் மந்திரத்தைத் திக்கெல்லாம் முழங்கச்செய்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். ★

# வால்நட்சத்திரங்கள் - 'வெடிகுண்டுகள்'

வால்நட்சத்திரங்கள் வாயு-ஹைட்ரேட்டுகளின் ''வெடிகுண்டுகளே''—

இவ்வாறு மாஸ்கோவிலுள்ள பேராசிரியர் யூரி மகோகோன் அறுதியிட்டுக் கூறுகிறார். சோவியத் ஆராய்ச்சியாளர்கள் கோஷ்டியில் ஒருவர் என்ற முறையில் அவர் ஒருமுறை ஓர் உண்மையைக் கண்டுபிடித்தார்' இது அண்டவெளியில் நடமாடும் வால்நட்சத்திரங்களின் இயல்பின் மீது ஒளிபாய்ச்சுவதாக இவர் கருதுகிறார். பூமி அதன் அடியாழத்தில் வாயு-ஹைட்ரேட்டுக்கள் எனும் 'திடப்பொருளான வாயுவை' ஏராளமான அளவில் கொண்டிருக்கிறது என இவர் ஊகித்தார். இது நீரும் இயற்கை வாயுவும் (மெதேன்) அடங்கிய ஒரு இரசாயனச்சேர்க்கைப் பொருளாகும். எனவே இந்த ஊகத்தைச் சோதித்துப் பார்க்க மகோகோன் பல மாடல் பரிசோதனைகளை நடத்தினர். உயர்த்தப்பட்ட அழுத்தங்களையும் குறைந்த தட்ப நிலைகளையும் கொண்ட ஒரு பிரத்தியேக அறையில், இவர் வாயு-ஹைட்ரேட்டுகளை உருவாக்கினர்.

1986 இல் ஹால்லியின் வால் நட்சத்திரம் பற்றி, முக்கியமாக அதன் உட்கருவிலிருந்து வெளிப்பட்ட வெடிப்புப் போன்ற வெளிப்பாடுகளைப் பற்றிக் கண்டறிந்த விவரங்களை ஆராய்ந்து பார்த்த பின்னால், பேராசிரியர் மகோகோன் வால்நட்சத்திரங்கள் என்பவை கனிஜப்பொருள் தூசியையும் உலோக உள்ளடக்கங்களையும் கொண்ட வாயு - ஹைட்ரேட்டுகளின் திரள்களே என்ற முடிவுக்கு வந்தார். அவற்றில் ஒரு பகுதி தண்ணீரில் 70 முதல் 300 பகுதி வரையிலான விகிதசாரத்தில் கரியமிலவாயு அடங்கியுள்ளது. ★



# விடுகதை

1) உரித்த முயல் ஊருக்குப் போகுது.
அது என்ன?

2) மத்தால் அடித்து பத்துப் பேர் பிடித்து பதமாய் எடுப்பது அது எது?

3) நடுவே இருக்கும் கறுப்பனுக்கு நாலுபுறமும் வெள்ளையர் காவல்.
அது என்ன?

4) மீன் பிடிக்கத் தெரியாது ஆனாலும் வலை பின்னுவான்.
அவன் யார்?

5) புதைத்து வைத்த பொருள் பொத்துக்கொண்டு வருகிறது.
அது என்ன?

6) உடல் உண்டு தலை இல்லை கை உண்டு கால் இல்லை அல்லும் பகலும் ஓடும்.
அது என்ன?

7) கறுப்பச்சட்டைக்காரன் சபடு அதிகம் உள்ளவன்.
அவன் யார்?

8) முள்ளு தோட்டைக்குள் முத்துக்குவியல்கள்.
அது என்ன?

9) பாதாளத்தில் பிறந்தவன் பம்பரத்தில் சுழன்றவன் வெய்யிலில் சாய்ந்தவன் எல்லோர் வீட்டிலும் இருப்பவன்.
அவன் யார்?

10) அவன் இல்லையேல் அவனியில் ஒன்றுமில்லை. அவனை நிரப்பலாம் பிடிக்க முடியாது உணரலாம் காண முடியாது.
அவன் யார்?

## விடை

1) புளியம்பழம்
2) வெண்ணெ
3) சிலேட்டுப் பலகை
4) சிலந்திப்பூச்சி
5) விதை
6) சுவர்க்கடிகாரம்
7) காகம்
8) பலாப்பழம்
9) மண் சட்டி-பானை
10) காற்று

# அற நூல்கள்

அருளாளர்கள் இயற்றிய அறநூல்களைப் படிக்கும் தோறும், நம்முடைய மனம் பண்பாடு அடைகிறது. இறை நாட்டத்தில் ஈடுபடும், ஆத்ம சாதகர்கள் நாள்தோறும் உயர்ந்தோரின் கூற்றுக்களைச் சிந்தனை செய்ய வேண்டும். தேவாரம், திவ்வியப்பிரபந்தம், போன்ற அமுத வாக்குகள் உள்ளத்தெளிவையும், ஆன்மிக விழிப்பையும் ஏற்படுத்துகின்றன. ★

தொகுப்பு - க. கனகராசா



**உழுத்தம் பருப்புக் கறி:**

**தேவையான பொருள்கள்**

உழுத்தம் பருப்பு - ½ சுண்டு
தேங்காய் - பாதியிலும் குறைவு
மிளகாய்த்தூள் - அளவாக
செத்தல் மிளகாய் - 10
பெருஞ்சீரகம்
வெந்தயம்
வெங்காயம்
பச்சைமிளகாய்
உப்பு, தேசிக்காய் - கறிவேப்பிலை.

**செய்முறை:-**

உழுத்தம் பருப்பை பாத்திரத்தில் போட்டு நீர்விட்டு ஒரு மணித்தியாலத்திற்கு ஊறவிடவும் நன்றாக ஊறிய பின் தோல் போகும் வரை கழுவி அம்மியில்இட்டு விழுது போல் அரைத்தல்வேண்டும்.

அரைத்து வரும்பொழுது செத்தல் மிளகாய், பெருஞ்சீரகம், வெங்காயம் ஆகிய வற்றையும் சேர்த்து அரைத்தல் வேண்டும்.

பின்பு ஒரு அளவான அலுமீனிய பாத்திரத்திற்குள் எண்ணெயை பூசி அரைத்தவற்றை அதனுள் இடுதல் வேண்டும். பின்பு ஒரு அகன்ற பாத்திரத்திற்குள் நீர் விட்டு நன்றாக கொதிக்கவைக்க வேண்டும்.

கொதித்துவரும்பொழுது கரைசல் உள்ள அலுமீனியப் பாத்திரத்தை மூடி நீர்ப்பாத்திரத்தின் அரைப்பகுதிவரை நிற்கும் படி செய்து அடுப்பில்

# சமையல் செய்வோம்

உள்ள பாத்திரத்தையும் இறுக மூடிவிடுதல்வேண்டும். அரைமணித்தியாலத்தின்பின் இரண்டு மூடிகளையும் திறந்து வெந்து இருக்கின்றதா என்று தென்னம் ஈர்க்கினால் குத்திப் பார்த்தால் ஈர்க்கில் கரைசல் ஒட்டாவிட்டால் வெந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

பின்பு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதற்குள் சிறிதளவு எண்ணெயை விட்டு கொதிக்கவைக்கவேண்டும். கொதிக்கும்பொழுது வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாயுடன் பெருஞ்சீரகம், வெந்தயத்தையும் இட்டு வதங்கியவுடன் தேங்காய்ப்பால், தூள், உப்பு போன்றவற்றையும் போட்டு கொதிக் வைத்தல் வேண்டும்.

கொதித்து வரும்பொழுது வெந்த உழுந்தை சதுரத் துண்டுகளாக வெட்டி அதனுள் போட்டுவிடுதல் வேண்டும். இறுதியில் இறைச்சிக் கறிக்கு வாசனைத்திரவியங்கள், தேசிக்காய் போடுவது போலபோட்டு கறியை இறக்கவும்.

திருமதி சீதாலக்ஷ்மி செல்வரட்ணம்.

# அஷ்டலட்சுமி விரதம்

அஷ்ட லட்சுமிகளுள் சிறந்த மூர்த்தியாகிய வரலட்சுமியை பூஜிக்கும் விரதமே வரலட்சுமி விரதம்.

பெரும்பாலும் பெண்களே இருக்கும் விரதங்களில் இதுவும் ஒன்று.

வரலட்சுமி மங்கல தேவதை. ஆதலால் இதில் விரதம் இருக்கும் கன்னிப் பெண்களுக்கு நல்லகணவனைக் கொண்டு வந்து சேர்ப்பாள் என்பது நம்பிக்கை.

திருமணமான பெண்களும் வரலட்சுமி விரதம் இருக்கிறார்கள். சந்தோஷமான வாழ்க்கை, பிரியமான கணவன் இதெல்லாம் வாழ்வில் நிலைத்திருக்கவேண்டும் என்பது அவர்கள் நோன்பின் நோக்கம்.

பெண்கள் மட்டுமல்ல ஆண்கள்கூட வரலட்சுமி விரதம் இருந்து நோய் நீங்கி அழகிய உடல் பெற்றதாகவும் நல்ல மனைவி, மக்கள், ராஜ்ஜியம் பெற்றதாகவும் புராண நூல்கள் கூறுகின்றன.

சித்திரநேமி என்பவர் இந்த விரத பயனாக பெருநோய் நீங்கி அழகு பெற்றார் எனவும் விக்கிரமாதித்தன் விரதம் இருந்து பல வெற்றிகளை அடைந்தான் எனவும் விரத சூடாமணி என்ற நூல் கூறுகிறது. ★

# சிரிப்பு

நர்ஸ்.- அப்பு. நம்பர் முடிந்துவிட்டது, நாளைக்கு வாவேன்.

வயோதிப நோயாளி-: நம்பர் முடிந்தால் பறவாயில்லைப் பிள்ளை மருந்தையும் கட்டி, ஊசியையும் போட்டுவிடு, நம்பரை நாளைக்கு வந்து எடுக்கிறன்.

★ ★ ★

சோதிடர்:- நீர் 2 ஆம் நம்பர் ஆதலால் சந்திரன் முழு ஆதிக்கம் பெற்றிருக்கிறன்.

சோதிடம் பார்ப்பிக்க வந்தவர்:- எந்தச் சந்திரன் ஐயா, இராமச்சந்திரனே, பாலச்சந்திரனே இரண்டு பேரிலையும் தான் எனக்கு ஐமிச்சம்.

திருமதி ச. திலகா.
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘வடு’க்களே எமது வழிகாட்டிகள்!

## கலைஞர் விளக்கம்

‘பொறுத்தது போதும்’ படத்தொடக்கவிழாவில் தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி பேசினார்.

அவர் சொன்னதாவது;

‘பொறுமையாக இரு என்று செல்பவரை நம்பாதே. அவர்கள் எல்லாம் சமுதாயத்தை பின்னோக்கித் தள்ளுகிறார்கள்’ என்று வலம்புரி ஜான் எம். பி. கூறினார்.

பொறுமையாக இரு என்று சொல்வது கோழையாக இரு என்று சொல்லுவது அல்ல.

பேரறிஞர் அண்ணா நமக்கு எல்லாம் பொறுமையைத் தான் போதித்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று கூறிய அண்ணா, பொறுமைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை புரிந்துகொள்ளலாம்.

பொறுமை இரு என்று சொன்னால் பொங்கி எழக்கூடிய காலமும் வரும்.

உரியநேரத்தில் சொன்னால் தான் அந்த வார்த்தைக்கு மதிப்பு ஏற்படும். அடிக்கடி சொன்னால் மதிப்பு இருக்காது.

சினிமாத் தொழில் நடிகர்களை மட்டும் வாழ வைக்கவில்லை. கீற்றுக்கொட்டகையில் உள்ள சாதாரண தொழிலாளர் முதல் பல்லாயிரக்கணக்கானோர் இதில் ஈடுபட்டு உள்ளனர்.

திரையுலகில் பல சக்கரவர்த்திகள் வாழ்ந்து இருக்கிறார்கள். அவர்கள் நமக்கு வழிகாட்டிகளாக அமைந்து இருக்கிறார்கள்.

### இளநீர்

தென்னை மரத்தில் மட்டைகள் விழுந்து, பல ‘வடு’க்கள் ஏற்பட்டு தென்னை மரம் வளர்ந்து இருப்பதுபோல அவர்களுடையபணி அமைந்து விடுகிறது. அந்த ‘வடு’க்களைப் பயன்படுத்தி திரையுலகில் நல்ல தென்னைம் நீரை மக்களுக்குத்தர அனைவரும் பாடுபடவேண்டும்.

இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார். ★

# வங்கக் கவிஞர் தாகூரின் கதைகளும் சினிமாவும்

ரவீந்திரநாத் தாகூரின் 127 ஆவது பிறந்ததினம் இந்த ஆண்டு வருகிறது.

இலக்கியத்துக்காக நோபல் பரிசு வாங்கியவர் தாகூர்.

அவரின் மிகச்சிறந்த நாவல்களும், சிறுகதைகளும் 1960 களில் வங்காள மொழியிலும் இதர இந்திய மொழிகளிலும் சிறந்த ... படங்களாக



தாகூர்

வெளிவந்து சினிமா உலகுக்கு பெருமையைச் சேர்த்துள்ளன.

தாகூரின் இலக்கிய வடிவத்தை எல்லாம் சினிமாக் கதைகளாகத் தரமுடியுமா என்று அப்போதைய சினிமாக்காரர்கள் தயங்கிய காலகட்டத்தில், பிரபல வங்காள திரைப்பட இயக்குநர்களான தபன் சின்ஹாவும், சத்யஜித் ரேயும் தாகூரின் இலக்கியத்தை திரைப்பட ஓவியங்களாக்கி ரசிகர்களுக்குப் படைத்துள்ளார்கள்.

இயக்குநர் தபன்சின்ஹா, தாகூர் எழுதிய ‘Run away’ என்ற கதையை ‘அதிதி’ என்ற பெயரில் முதன்முதலாக வங்கமொழியில் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டார்.

திரபதா என்னும் அனாதைச் சிறுவனின் பிரச்சினைகளைக் கூறும் கதை அது.

அப்போதைய சினிமா விமர்சனங்களினால் இந்தப்படம் சிறந்தது என்று பாராட்டப்பட்டாலும், வர்த்தகரீதியில் தயாரிக்கப்படும் படங்களைப்போல பெருந்திரளான ரசிகர்களுக்கு இப்படம் சென்றடையவில்லை. ஆனாலும் இயக்குநர் தபன்சின்ஹா மனந்தளராமல் தொடர்ந்து தாகூரின் மற்ற சில கதைகளை மீண்டும் படமாக்கச் செயல்பட ஆரம்பித்ததில் ஒரு குறிப்பிட்ட அளவு வெற்றியைச் சந்தித்தார்.

அடுத்து தாகூரின் ‘ஹங்ரி ஸ்டோன்ஸ்’, ‘காபூலிவாலா’ எனும் இரண்டு கதைகளையும் தபன் சின்ஹ இயக்கினார். இவற்றுள் ‘காபூலிவாலா’ பெரிய வெற்றியைத் தந்தது.

இதைத் தொடர்ந்து சத்யஜித் ரே தாகூரின் 3 சிறுகதைகளைப் படமாக்கினார்.

மூன்று கதைகளையும் தனித்தனியே படமாக்காமல் ஒன்றாக ‘தீன் கன்யா’ என்னும் பெயரில் திரைப்படமாகத் தயாரித்து இயக்கினார்.

மூன்று பெண்களைப்பற்றியது இப்படம்,

வேண்டாவெறுப்பாக கிராமத்துக்கு வரும் தபால் அதிபருக்கும் அந்தக் கிராமத்தில் வாழும் ஒருபெண்ணுக்கும் ஏற்படும் பிரச்சினைகளை முதற்கதை கூறுகிறது.

இளம் பருவத்தில் காலடி எடுத்துவைக்கும் ஒரு பெண்ணைப் பற்றியது. ‘மோனி ஹரா’ என்ற இரண்டாவது கதை.

‘சமப்தி’ என்ற மூன்றாவது கதை பெற்றோர்கள் பார்க்கும் மணமகனை மறுத்துவிட்டு, தன் விருப்பத்துக்கு ஏற்றபடி தானே மணமகனைத் தேர்தெடுத்து; பெண்ணுக்குத் தன் வாழ்க்கையை தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை உண்டு என்ற பெண்ணின் உரிமையை வலியுறுத்துகிறது.

இதன் பின்னர் தாகூரின் பிரச்சினைக்குரிய ‘சாருலதா’ கதையை ரே படமாக்கினார்.

‘சமாப்தி’ படம் இந்தியில் தாகூரின் கதை என்று பெரிய அளவில் தாகூரின்படத்துடன் விளம்பரம் செய்யப்பட்டும் தோல்வியடைந்தது.

இந்தப் படத்துக்கு பிறகு இந்தியில் தாகூரின் கதை படமாக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தாகூர் எழுதிய ‘நௌகா டுபி’ என்னும் கதை ‘மாதர் குல மாணிக்கம்’ என்ற தலைப்பில் தமிழில் திரைப்படமாக வந்து வெற்றிகரமாக ஓடியது.

இதே கதை பின்பு மலையாள மொழியில் ‘அக்னி பரீட்சை’ என்னும் பெயரில் படமாக்கப்பட்டது. ★

# சர்வதேச திரைப்பட விழாக்கள்;

# ஒரு சரித்திரக் கண்ணோட்டம்!

1910இல் மிலான் நகரில் நடந்த திரைப்படவிழா தான் உலகின் முதலாவது சர்வதேச திரைப்படவிழா.

இத்தாலி, பிரான்ஸ் ஜேர்மனி, அமெரிக்கப் படங்கள் கலந்துகொண்டன.

ஆனால் நிரந்தரமாக இன்றுவரை தொடர்ந்து நடந்துவரும் - முதலாவது சர்வதேச திரைப்படவிழா 1932இல் வெனிஸ் நகரில்நடந்ததுதான்.

கேன்ஸ் திரைப்படவிழா 1946இல் தொடங்கப்பட்டது,

இதேபோல உலகின் முக்கியமான திரைப்படவிழாக்கள்:

1. பெர்லின் திரைப்பட விழா.
2. செக்கோஸ்லோவேக்கியாவின் Karlovy Vary விழா.
3. ஸ்பெயினின் சன்செபஸ்டியன்விழா.
4. ஆர்ஜென்ரீனாவின் Mardel Plata விழா.
5. சான்பிரான்ஸிஸ்கோ திரைப்படவிழா.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பரில் திரைப்படவிழாக்களின் திரைப்படவிழா (The Festival of Festivals) என்ற ஒன்று மெக்ஸிகோவின் அகாபல்கோ நகரில் நடந்துவருகின்றது. இதில், பல்வேறு சர்வதேச விழாக்களில் பரிசுபெற்ற படங்கள் மட்டுமே கலந்து கொள்ளும்.

டொக்குமென்டரி படங்களுக்கு மட்டும் என ஒருவிழா ஜேர்மனியில் Mannhein விழா என்று நடக்கிறது.

குட்டிப்படங்களுக்கு ஜேர்மனியின் Oberhavscn விழாவும், அனிமேஷன் படவிழா பிரான்ஸிலும், சமூக - இனப் பிரச்சினைபற்றி படங்களுக்கு முக்கியத்துவம் தருவதான விழா புளோரன்ஸ் நகரிலும், பூரண கலைப்படங்களுக்கான சர்வதேச விழா பெர்கோமோவிலும் நடந்துவருகின்றது. ★

# குன்னக்குடியின் ‘இசைச் சக்கரவர்த்தி’

இளகாத இதயத்தையும் இளக வைக்கும் விதமாக வயலின் இசை மீட்டுவதில் வல்லவராக விளங்குபவர் குன்னக்குடி வைத்தியநாதன்.

### சினிமா இசை

இவர் திரைஉலகில் மறைந்த ஏ. பி. நாகராஜனின் அரவணைப்பினால் முதலில் ‘‘வா ராஜா வா’’ படம் தொடங்கி ‘‘கண்காட்சி’’ ‘‘அகத்தியர்’’ தேவரின் ‘‘தெய்வம்’’ தமிழில் முதல் சினிமா ஸ்கோப் படமான ‘‘ராஜராஜ சோழன்’’ ‘‘திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா திருத்தணிமலை மீது எதிரொலிக்கும்’’ என்ற பக்திப் பரவசமூட்டும் ‘‘கந்தன் கருணை’’ உட்பட 36 படங்களுக்கும் இசை அமைத்துள்ளார்.

### இயக்குனர் ஆகிறார்

இப்போது முதல் முறையாக நாதாலயாவின் ‘இசைச் சக்கரவர்த்தி’’ என்ற படத்தின் மூலம் இயக்குனராகவும் (டைரக்டர்) ஆகிறார் குன்னக்குடி. இசை மணம் கமழும் வகையில் நிறைந்த பொருட்செலவில் உருவாகும் இந்தப் படத்தில் சிவகுமார் நடிப்பார் என்று தெரிகிறது. நடிகர்கள் — நடிகைகள் தேர்வு நடைபெறுகிறது.

### தொடக்க விழா

‘‘இசைச் சக்கரவர்த்தி’’ படத் தொடக்க விழா பிரசாத் படப்பிடிப்பு நிலையத்தில் நடந்தது. தென்னிந்திய

சென்னையில் இருந்து
தி. மேனகன்

திரைப்பட வர்த்தகசபைத் தலைவர் ஜி. வெங்கடேசுவரன் (ஜி.வி.) விழாவை தொடக்கி வைத்தார். தொடக்க விழா நாளில் கவிஞர் வைரமுத்து எழுதிய பாடல் ஒலிப்பதிவானது. இசையும் குன்னக்குடியே.

எல்லா பாடல்களையும் கவிஞர் வைரமுத்து எழுத, திரைக்கதை வசனம் ஏ. எல். நாராயணன் எழுத விபின் தாஸ் காமிராவைக் கையாளுகிறார்.

‘‘தலைவா, இறைவா, துணைவா’’— என்று தொடங்கும் பாடல் முதலில் பதிவு செய்யப்பட்டது.

இசைக் கலைஞன் ஒருவனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாகிறது. (எ-4)

# நடிகை தீபாவின் அரசியல் பேச்சு!

‘காசு கொடுக்காமல் அதிக கூட்டத்தை என்னால் மட்டுமே கூட்ட முடியும்’ என்று நடிகை தீபா கூறினார்.

கும்பகோணம் வந்த நடிகை தீபா, நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

மற்றக் கட்சிகளில் இருக்கும் நடிகர், நடிகைகள் காசு கொடுத்துக் கூட்டம் கூட்டுகின்றனர். காசு கொடுக்காமலேயே என் கூட்டங்களுக்கு மக்கள் குவிகின்றனர்.

நெடுஞ்செழியன் என்னைத் தாக்கிப் பேசி வருகிறார். முதல்வர் பதவி கிடைக்காத விரக்தியில் அவர் மூளை குழம்பிப் பேசுகிறார்.

காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் அமர்த்தாமல் நான் ஓய மாட்டேன். அதற்காக சூறாவளி சுற்றுப்பயணம் செய்வேன். அங்கங்கே ஆட்டம் ஆடி மக்களைக் காங்கிரஸ் பக்கம் திருப்புவேன்,

தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று மத்திய அமைச்சர்களிடமும் காங்கிரஸ் தலைவர்களிடமும் வலியுறுத்துவேன். இதற்காக டில்லி செல்கிறேன். ★

# துணுக்கு

ஆறு படங்களுக்கு கதை வசனம் எழுதுகிறார் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி

கடைசியாக வசனம் எழுத ஒப்புக் கொண்ட படத்தின் பெயர் ‘பாடாத தேனீக்கள்’ பூம்புகார் புரொடெக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படம் இது.

நெஞ்சை நெகிழ வைக்கும் குடும்பப் பாங்கான கதை அமைப்பைக் கொண்டது இப்படம். ★

★ ★ ★

‘‘செந்தூரப்பூவே வெளிப்புறப்படப்பிடிப்புக்காக கேரளாவில் உள்ள ஆலப்புழைக்கு சென்றது படப்பிடிப்பு குழு. அங்கேபடப்பிடிப்புக்கு தகுந்த பழங்கால வீடு ஒன்றை வாடகைக்கு கேட்டும், கொடுக்க மறுத்து விட்டனராம். ‘படப்பிடிப்புக்கு கொடுத்ததும் போதும்!’ பாழ்படுத்துவதும் போதும் என்று ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் மறுக்க படப்பிடிப்பு குழுவினருக்கு மிஞ்சியது ஏமாற்றம். இதற்கு முன்பு சிலர் படப்பிடிப்பை நடத்தி வீட்டை அலங்கோலப் படுத்தியதே காரணமாம். ★

# சென்னை ஸ்ருடியோக்களில்....

★ ‘மதுரைக்காரத் தம்பி’ என்ற பெயரில் ஆனந்த் அன்ட் ஆனந்த் நிறுவனம் புதியபடம் ஒன்றைத் தயாரிக்கிறது.

நடிகர்: ராம்கி, சுதாகர், நடிகை: ஸ்ரீபாரதி ரேணுகா, சாவித்ரி.

★ ‘பெண் ஒன்று கண்டேன்’ படத்தை ஐஸ்வர்யா கிரியேஷன்ஸ் தயாரித்து வருகிறது.

ராம்கி, நிஷாந்தி ஸ்ரீவித்யா, ஜெய்கணேஷ் ரகுபரன்



நதியா

மோகனப்பிரியா, பூர்ணம் விசுவநாதன் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதுவதுடன் அசோகர் ராஜன் டைரக்ட் செய்கிறார்.

★ ‘ஒரு ஊமையின் ராகம்’ படத்தை ஜி. வி. சினி கிரியேஷன்ஸார் தயாரிக்கின்றனர்.

பாடல்களைக் கவிஞர்உமா கண்ணதாசன் எழுதுகிறார்.

மயூரி, நந்தினி ஆகிய புதுமுகங்கள் நடிக்கின்றனர்.

கதாநாயகனும் நடிக்கும் குருசங்கர் கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் அனைத்தையும் கவனிப்பார்.

★ ஆஸ்கார் மூவிஸாரின் அடுத்த தயாரிப்பு - ‘‘சட்டத்தின் திறப்பு விழா’’.

கார்த்திக், ஷோபனா ஜோடியாக நடிக்கின்றனர். கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை எம். பாஸ்கர் ஏற்றுள்ளார்.

★ ரகுவரன், நிரோஷா (மைதிலி) ஜோடியாக நடிக்கும் புதியபடம் ‘என் கணவர்’

கதை, திரைக்கதை வசனம் டைரக்ஷன் சகலதையும் அஸ்வினிகுமார் ஏற்றிருக்கிறார்.

★ ‘ஆஷாவின் ஆவி’ - ஒரு திகில் படம். மதர்சினி கிரியேஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் அம்பிகா, ராதா ஆகியோர் நடிக்கின்றனர்.

★ ரஜனிகாந்த், நதியா ஜோடியாக நடிக்கும் பாவலர் கிரியேஷன்ஸின் புதிய படம்’ ராஜாதி ராஜா’ -

கதை, டைரக்ஷன்: ஆர், சுந்தரராஜன். திரைக்கதை வசனம்: பஞ்சு அருணாசலம். ★

வெள்ளித் திரையில்

# நிறம் ‘மாறிய’ காகம்!

அந்தக் காக்காவுக்கு மனதுக்குள் எப்போதுமே ஒரு ஏக்கம். மற்றப் பறவைகள் மாறுபட்ட வண்ணங்களில் நிறம் நிறமாய் காட்சியளிக்க, நாம் மட்டும் கன்னங்கரேலென்று கறுப்பாகக் காட்சியளிக்கிறோமே என்ற கவலைதான் அது.

இந்தக் கவலையை அது தன் கூட்டத்தாரிடம் ஒருநாள் வெளியிட்டது. ‘நாம் ஏதாவது நிறத்தை பூசிக்கொண்டு நிறம் மாறிவிடுவோம்’ என்றது.

‘புறாவைப் பாருங்கள். இளநீல நிறத்தில் என்ன அழகு... கிளியைப் பாருங்கள்... பச்சை பசேல் என்று என்ன ஒரு நிறம் ...... நாம் தான் கறுப்பாகப் பிறந்து அலங்கோலமாகக் காட்சியளிக்கிறோம்’ என்று தனது எண்ணத்தை வலுவாகவே எடுத்து வைத்தது.

இவ்வளவு சொல்லியும் நிறம் மாற ஆசைப்பட்ட காக்கையின் கோரிக்கை மற்ற காக்கைகளிடம் எடுபடவில்லை. ‘நமது நிறம் நமக்கு எடுப்பாகத்தான் இருக்கிறது: இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழப் பழகிக் கொள்வதே உத்தமம்’ என்று மற்றக் காக்கைகள் அதற்கு எடுத்துரைத்தன.

ஆனால் என்ன புண்ணியம்? காக்கைகளின் குரல் எதுவுமே சறுப்பை வெறுக்கும் காக்கையின் காதில் ஏறவில்லை. எப்படியாவது கறுப்பு நிறத்தை விட்டு வேறு நிறம் மாற்றிக் கொள்வதில் தீவிரமயிருந்தது.

அதற்கான வாய்ப்பும் வந்தது. புடவைகளுக்குச் சாயம் போட ஒரு தொட்டியில் கரைத்து வைக்கப்பட்டிருந்த சிவப்புச் சாயத்தில் காக்கை தன்னை உடல் முழுக்க நனைத்துக் கொண்டது.



இப்போது காக்கையின் நிறம் மாறிப்போயிற்று. சிவப்பு நிறத்தில் ஜொலித்தது. தன் அழகைப் பார்த்து அதற்கே கர்வம், மனசுக்குள் புதியசாதனை படைத்துவிட்ட நினைப்பில் தன் கூட்டத்தாரின் இருப்பிடம் வந்தது.

காக்கைகள் தங்களைத் தேடி ஒரு சிவப்பு நிற பறவை வருவதைப் பார்த்தது. உடனே அனைத்தும் ஒன்று. திரண்டு அதைக் கொத்தி விரட்டின.

நிறக் காகம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தது. நான் தான் உங்கள் நண்பன். நிறம் மாறி வந்திருக்கிறேன் என்று கெஞ்சியது.

உருவகக் கதை

ஆனால் எந்தக் கெஞ்சலும் எடுபடவில்லை. முகம், மூக்கு, முதுகு, கண் என்று மற்ற காக்கைகள் கொத்தியும் கொத்தியும் உடல் முழுக்க ... கொத்தத் தொடங்கியது. இதனால் நிறத்திலே சிவப்பாக இருந்த காக்கை மேலும் சிவப்பானது.

வேதனையோடு வேறு பறவைகளிடமாவது அடைக்கலம் கிடைக்குமா என்று காக்கை தேடிப் போனது. புதிய நிறத்தில் காக்கையைப் பார்த்ததும் மற்றப் பறவைகளும் வெருட்டவே தொடங்கின.

நிறம் மாறியதால் ஏற்பட்ட கஷ்டம் காக்கைக்குப் புரிந்தது. எனக்கு இறைவன் கொடுத்த இயற்கையான அழகை மாற்ற நினைத்ததற்கா இத்தனை பெரிய தண்டனை......! என்று மனம் நொந்து அழுதது.

காக்கையின் கண்ணீர் கடவுளை எட்டியிருக்க வேண்டும் அந்த நேரம் பார்த்து மழை கொட்டத் தொடங்கியது. மழையில் காக்கை நனைந்ததால் நிறம் மாறி மறுபடியும் கறுப்பு நிறமாக ஆகிவிட்டது.

மழை முடிந்த கொஞ்ச நேரத்தில் மறுபடி தன் கூட்டத்தினரை நோக்கி காகம் பறந்து போனது. இப்போது அதற்கு எந்த தொல்லையுமில்லை.


## யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

**உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!**

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



# உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு

**விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.**

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நிதி விசாரணை குறித்து கருணாநிதி

தேர்தல் நிதி சேகரிப்புப் பற்றிய பிரச்சினை, தமிழ்நாடு அரசியலில் புதிய கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளது.

அ. தி. மு. க, தி. மு. க. தேர்தல் நிதிசேகரிப்புப் பற்றி மத்திய அரசு விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்போவதாக புதுடில்லி வட்டாரத் தகவல் சென்ற சஞ்சீவியில் பிரசுரமானது.

இதற்கு தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி சவால் ஒன்றை விடுத்திருக்கிறார்.

சவாலில் கருணாநிதி கூறியிருப்பதாவது;

தேர்தல் நிதியாக இரண்டு கோடி ரூபா எப்படித் திரட்டப்பட்டது என்பது பற்றி மத்திய அரசு நடத்தப் போகும் தி.மு.க தயார்.'

ஆனால் இந்திரா காங்கிரஸின் நிதி பற்றி விசாரிக்கும் உரிமை மற்றக் கட்சிகளுக்கும் இருக்கவேண்டும். அதற்கு இந்திரா காங்கிரஸ் தயாரா?



கருணாநிதி

இப்படிக் கருணாநிதி கேட்டிருக்கிறார். ★

# கொள்ளையரிடம் இருந்து நல்லவர் பிரிய வேண்டும்

## பிரிவோம் - சந்திப்போம் பட விழாவில் பண்ருட்டி பேச்சு

சென்னை பிரசாத் ஸ்ருடியோவில் ''பிரிவோம் சந்திப்போம்'' என்ற படத்தின் தொடக்க விழா நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தார்'

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமை வகித்தார்.

திருநாவுக்கரசு பேசியதாவது;

''பிரிவோம் சந்திப்போம்' என்ற படத்தின் பெயரை எண்ணும்போது பலவித சிந்தனைகள் ஏற்படுகின்றன.

இப்போதுள்ள நிலைமையில் யார், யார் பிரிந்திருக்கிறோம், யார் யார் சந்தித்திருக்கிறோம் என்று எங்களுக்கே தெரியவில்லை.

பிரிவும் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். சந்திப்பும் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

இப்படி திருநாவுக்கரசு சொன்னார்.

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னதாவது;

படத்தின் தலைப்பு இன்றைய அரசியலுக்குப் பொருத்தமாக உள்ளது. 'பிரிவோம் சந்திப்போம்' என்பது இயற்கையின் நியதி.

கடல்நீர் மேகமாக மாறுகிறது.

மேகம் மழையாகப் பொழிகிறது.

அந்த மழைநீர் அருவியாகி நதியாகிறது.

கடைசியில் அந்த நதி சந்திக்கும் இடம் கடல்தான்.

### கொள்ளையர்

யார் இடத்தில் இருந்து யார் பிரிகிறார்கள் என்பது முக்கியம்.

கொள்ளையரிடம் இருந்து நல்லவர் பிரிவது வரவேற்கத்தக்கது.

அதேபோல் நல்லவர்கள் கொள்ளையரிடம் போய்ச் சேராமல் தடுப்பதும் வரவேற்கத்தக்கது.

### யாருடன் சந்திப்பு?

பிரிகிறபோது யார் இடத்தில் இருந்து பிரிகிறோம், சந்திக்கும்போது யாரைச் சந்திக்கிறோம் என்பது கவனிக்கத்தக்கது.

பிரிந்தவர்கள் சந்திக்கிறபோது நாட்டுக்கு நன்மை கிடைக்கும் என்றால் அது வரவேற்கத்தக்கது அதே நேரத்தில் சந்திக்கிறபோது வீட்டில் இருக்கிற பொருளும் கொள்ளை போகும் என்றால் அது வரவேற்கத்தக்கது அல்ல.

### எம். ஜி. ஆருக்கு வாரிசா?

புரட்சித் தலைவர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு துறையில் வளர்த்தார்.

**சென்னையிலிருந்து தி. மேனகன்**

தங்கள் திறமையை மட்டும் நம்பி தாங்கள் தான் வாரிசு, தாங்கள்தான் எல்லாம் என்று நினைக்கிறவர்கள் எம். ஜி. ஆரின் வாரிசு என்று கூறிக் கொள்கிறவர்கள் புரட்சித் தலைவரையும் புரிந்துகொள்ளவில்லை, நாட்டையும் புரிந்து கொள்ளவில்லை. நாமமையும் புரிந்து கொள்ளவில்லை எம். ஜி. ஆரின் தொண்டன் ஒவ்வொருவனும் அவரின் வாரிசுதான்.

இப்படிப் பண்ருட்டி பேசினார். ★

# மீண்டும் காமராஜர் ஆட்சி வராதா?

காமராஜர் ஆட்சி மீண்டும் வராதா என்ற ஏக்கம் தமிழ்நாட்டு மக்களுக்கு வந்து விட்டது என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் தெரிவித்தார்.

(எ—4)

# சித்த மருத்துவப் பாடல் ஆங்கில மொழியில்

'சித்த மருத்துவப் பாடல்கள், சங்கத் தமிழ்ப் பாடல்கள், சம்பராமாயணம் ஆகியவற்றை ஆங்கிலத்திலும், சில இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது' என்று தமிழக ஆளுநர் அலெக்சாண்டர் கூறினார்.

'தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் உள்ள பல அரிய கையெழுத்துப் பிரதிகளின் பொருள்பற்றி ஆராய்ந்து அவற்றை நூலாகப் பதிப்பிக்கவும் திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படும்' என்றும் ஆளுநர் கூறினார்.

ம. பொ, சிவஞானத்தின் 83 – வது பிறந்தநாள் விழா ஞாயிறன்று சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் நடந்தது. ஆளுநர் அலெக்சாந்தர் இந்த விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசினார்.

# விஷக்கன்னியை விரட்டவேண்டும்!

## வீரப்பன் வீராவேசம்

'நம்மைக் கொல்ல வந்த விஷக் கன்னி ஜெயலலிதாவை தமிழ்நாட்டை விட்டே விரட்ட வேண்டும்' என்று ஆர். எம். வீரப்பன் கூறி உள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் பரம்பூரில் அ. தி. மு. க. விழாவில் வீரப்பன் பேசியதாவது:-

இங்கே நடமாடும் பேயும் இருக்கிறது. ஆனால் ஜானகி எம். ஜி. ஆர். அவர்கள் புரட்சித் தலைவருடன் '40 ஆண்டு காலம் வாழ்ந்தவர். அவரை ஏன் அரசியலுக்கு ஜானகி வந்தார் என்று கேட்கும் சில பெண்களையும் பார்க்கிறேன்.

ஆனால் இங்கு நான் சொன்னது ஒரு பாம்பின் கதையாகும். அதுவும் படம் எடுத்து ஆடும் பாம்பின் கதை. நல்ல பாம்பு எப்போதும் படம் எடுத்து ஆடும். அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஆனால் அது விஷப் பாம்பு. அது நம்மைக் கடிக்கும் விஷக் கன்னி, விஷ ஜந்து. இதுவரை அது வீட்டிலிருந்து ஆடியது. இப்போது அது தெருவிற்கு ஓடி வந்துள்ளது. படம் எடுத்து ஆடுகிறது. அதைத் தமிழ்நாட்டில் நடமாட விடாமல் அடித்து நொறுக்கி விட வேண்டும்.

இவ்வாறு ஆர். எம். வீரப்பன் பேசினார். ★

# மீண்டும் வாருங்கள் ஜானகி அழைப்பு


கட்சியை விட்டுப் பிரிந்தவர்கள் மீண்டும் இணையும்படி இரண்டு முறை அழைப்பு விடுத்து இருக்கிறேன். நெடுஞ்செழியன், பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசு போன்றவர்களுக்கு அந்த அழைப்பு இன்னும் இருக்கிறது– என்று ஜானகி கூறினார்.

'பிள்ளைகள் வெளியே போய் அவமானப்பட்டால் அது தாய்க்கு வேதனை தான்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில மாத இடைவெளிக்குப் பிறகு நிருபர்களை அ. தி. மு. க. (ஜா) தலைவர் ஜானகி நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

லாயிட்ஸ் சாலையில் உள்ள அ. தி. மு. க. தலைமை நிலையக் கட்டிடத்தில் இந்தப் பேட்டி நடைபெற்றது.

# சொற்சிலம்பம்



போட்டி இல. 84

சொற்சிலம்பம் இல: 84
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

———— இங்கே வெட்டுக ————

முடிவு திகதி: 03–8–1988

**இடமிருந்து வலம்**

1. பயிற்சி 4. மேன்மை, வலிமையைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல் 6. நீரிட்டுக் கொடுத்தல் 8. ஒரு வகைப் புல். 10. ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று. 12. முறையீடு. 14. வஞ்சகம். 15. சுவை. 16. சித்திரம் வரையத் தேவையே! 17. கால். 18. மழை. 19. உள் உறுப்புகளுள் ஒன்று. 20. வாய் ஒடுங்கிய குண்டுப்பாத்திரம்.

**மேலிருந்து கீழ்**

1. அரண்மனையில் பெண்கள் பகுதி. 2. இந்தியாவுக்கு ராஜீவ்......... 3. கற்புடையாள். 5. நதி. 7. தடி தலைகீழாய் இறுதி இழந்து நிற்கிறது. 8. ஒரு வாசனைப் பொருள். 9. பார்வைக்குறைபாடுகளுள் ஒன்று. 11.செய்தி. 13.புண்ணிய ஸ்தலம். 16. நீரோட்டத்தில் உருவாகும். 17. மறை. 18. ஆரணியம்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றும் பரிசு: | 25 ரூபா |

# தமிழுக்காக பேசுவேன்!

## நடிகை ராதிகா சொல்கிறார்

கருணாநிதிக்காக மேடைகளில் பேசுவேன் என்று நடிகை ராதிகா கூறினார்.

சென்னை திருவொற்றியூர் எம்.எஸ்.எம். சினிமா தியேட்டரில் 'பாசப்பறவைகள்' படத்தின் 50 ஆவது நாள் வெற்றி விழாவில் நடிகை ராதிகா கலந்து கொண்டு கூறியதாவது:-

தமிழ்நாட்டு மக்கள் இன்னும் இவரை (கருணாநிதி) சரியாக புரிந்துகொள்ளவில்லை. நான் சமீபத்தில் மலேசியா சென்றிருந்தேன் அங்குள்ள மக்கள் இவர்மீது அளவற்ற அன்பும், மரியாதையும் வைத்துள்ளார்கள்.

இவர் மட்டும் மலேசியா சென்றால் போதும் 'பிரதமர் கூட ஆகிவிடலாம்' அந்தளவுக்கு செல்வாக்கு இருக்கிறது.

### கருணாநிதிக்காக பேசுவேன்

ஏது இப்போது ராதிகா மிகவும் அதிகம் பேசுகிறாளே என்று சிலர் கேட்கக்கூடும்.

நான் பேசுவேன். நல்லவர்களுக்காக பேசுவேன். தமிழுக்காக பேசுவேன். தமிழர்கள் நலனுக்காக உழைக்கும் கலைஞருக்காக பேசுவேன்.

இவ்வாறு ராதிகா பேசினார்.

டைரக்டர் பாரதிராஜா பேசும்போது கூறியதாவது:-

கலைஞரின் [illegible] சிந்திய தமிழும், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த நடிப்புமே என்னை திரை உலகிற்கு இழுத்துவந்தன. இடையில் நான் எங்கோ நின்றதை சிலர் கூறலாம். அவர்களுக்கு கலைஞரே பதில்சொல்வார்.

கலைஞர் வழிகாட்டியாக இருக்கிறார். ஆனால் நாங்கள் எல்லாம் அவர் பக்கத்தில் இருக்கிறோம்.

கலைஞர் எங்களுக்கு ஒரே சுமைதாங்கி. எங்கள் சுமைகளையெல்லாம் அந்தச் சுமை தாங்கியில் ஏற்றிவைத்து இளைப்பாற நினைக்கிறோம்.

இவ்வாறு பாரதிராஜா பேசினார்.

### பழைய நினைவு

இதைத் தொடர்ந்து கருணாநிதி பேசியதாவது:-

நடிகர்–நடிகைகள் பேசும்போது என்னுடைய வசனத்தை படித்தபின்னரே தமிழ் கற்றுக்கொண்டதாக கூறினார்கள். அவர்கள் மிகைப்படுத்திக் கூறினார்கள்: அதை நான் ஏற்கத் தயாராக இல்லை. அண்ணை வாழ்த்த வேண்டும் என்ற வேகத்தில் அவர்கள் பேசுவது எனக்குப்புரிகிறது.

நடிகை ராதிகா பேசியபோது தமிழுக்காகவும், தமிழகத்தை ஆளப்போகும் தலைவருக்காகவும் இனி பேசுவேன் என்று குறிப்பிட்டார்.

அவர் பேசியதைக் கேட்கும்போது மறைந்த நடிகர் எம். ஆர். ராதாவே ராதிகா உருவில் வந்து நேரில் பேசியது போல் [illegible] சொன்னதைச் செய்வார்.

இவ்வாறு கருணாநிதி பேசினார். (எ—4)




அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு படத்தில் தெரியும்

அழகுக்கு அழகூட்டும் தரமான கலர்ப்படப் பிரதிகளை

யாழ்ப்பாணத்திலேயே

அதிகுறை கட்டணத்தில்

மிகக் குறுகிய காலத்தில் பெற

"ஷப்ரு"வை நாடுங்கள்!

கலர் படச் சுருள் கழுவுதல்-

முற்றிலும் இலவசம்!!

- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுதல்
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை!!!
- கலர்ப் பிரதி Glossy / Matt தாள்களில் பிரதி செய்து கொடுக்கப்படும்

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone No: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகம்பத்துக்கும் நிறம் உண்டு!

பூமியின் பல பாகங்களிலும் அதிர்ச்சிகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆயினும் பூமியதிர்ச்சி குறிப்பிட்ட ஓரிடத்தில் மிகுதியானால் அதுவே பூகம்பமாகிறது.

பூமியின் மேற்பரப்பு குன்றுகளும், மலைகளும், பள்ளத்தாக்குகளும், சமவெளிகளும், ஏரிகளும் கடல்களும் நிறைந்தது.

காற்றும் ஆறுகளும் கடினமான பாறைகளான மலைகளையும் அல்லது மேட்டு நிலங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக உடைத்து, அடிவாரங்களில் உள்ள பிரதேசங்களில் வண்டல்களாக குவிக்கின்றன.

இந்தவண்டல் படிவங்கள் ஒன்றின் மீது ஒன்றாக படியும் போது கீழேயுள்ள படிவங்கள் மேற்படிவங்களால் அழுத்தப்பட்டு கெட்டியாகிவிடுகின்றன. ரொம்ப காலம் கழித்து அழுத்தத்தை தாங்கமுடியாமல் அவை வெடிக்கின்றன.

அப்போது கொஞ்சம் அசைந்து கொடுக்கின்றன.

சிலசமயம் பிளவுண்ட பாகங்கள் ஒன்றின்மீது ஒன்று சரியலாம்.

இப்படியாக பூமியினுள் அசைவும் சரிவும் நிகழும்போது பூகம்பம் உண்டாகிறது.

இமயமலை, ஆல்ப்ஸ்போன்ற மலைகள் பரவியிருக்கும் பிரதேசங்களில் பூகம்பங்கள் அதிக அளவில் ஏற்படுகின்றன. இம்மலைகள் மடிப்பு மலைகள் எனப்படும்.

இம்மலைகள் உள்ள பிரதேசங்கள் பல யுகங்களுக்கு முன்னால் நீர்ப்பரப்புகளாக இருந்தன. சுற்றியுள்ள பீடபூமிப் பிரதேசங்களில்இருந்து காற்று, ஆறு இவற்றின் நாசவேலை காரணமாக வண்டல்கள் குவிந்தன. காலப்போக்கில் இவ்வண்டல்கள் கெட்டியாகி பாறையாக மாறின.

சுற்றியுள்ள கண்டங்கள் அசைவு கொடுத்ததன் மூலம் இப்படிவங்கள் மடிப்பு மடிப்பாக ஆனதோடு மேலே உயர்ந்து பெரிய சிகரங்களைக் கொண்டுள்ள மலைகளாயின.

சிலபகுதிகளில் பூமியின் ஆழத்தில் பாறைகள் மிக மெதுவாக இடம்பெயருகின்றன. அப்போது மேலேயுள்ள பாறைகளும் இழுக்கப்படுகின்றன.

இப்படி இழுத்துச் செல்லப்படும் பாறைகளில் ஏதாவது தடைகளினால் நிறுத்தப்பட்டால், மேல்பாகம் மட்டும் கொஞ்சகாலம் நகரும். இந்தத் தடை மறுபடியும் ஏதாவது ஒரு கட்டத்தில் நகர்த்தப்பட நிறுத்தப்பட்ட அடிப்பாகம் திடீரென முன்னேறி பக்கத்து பாறைகளைத் தாக்கும், அப்போது பூகம்பம் உண்டாகும்.

பூமியின் கீழ் எந்த இடத்திலாவது சரிவோ பிளவோ உண்டாகிறது என்றால் அந்த இடத்துக்கு பூமி அதிர்ச்சிக் குவியல் என்று பெயர்.

சில பூகம்பங்களில் சுமார் அரை மைல் ஆழத்தில் குவியல் இருக்கலாம். அபூர்வமாக சில பூகம்பங்களில் 250 மைல் ஆழத்தில் கூட இருக்கலாம்.

பூகம்பம் ஏற்படுவதற்கு முன் சாதாரண பூதியதிர்ச்சி ஏற்படுவது இயற்கை.

பூமி அதிர்ச்சியானது தொங்கும் விளக்குகளை ஆடச் செய்யலாம், கோயில்மணிகளை அடிக்கச் செய்யலாம். கட்டடங்களில் வெடிப்புக்களை உண்டாக்கலாம், கட்டடங்களைச் சாய்த்துத் தரைமட்டமாக்கலாம்.

1897 ஆம் ஆண்டு அசாமில் நடந்த ஒரு பூகம்பத்தினால் ரயில் தண்டவாளங்கள் 15 அடி தூரம் இடம்பெயர்ந்தன. தூரா என்னுமிடத்தில் ஒரு தொங்கு விளக்கு 4 நாள் வரை ஆடிக்கொண்டே இருந்ததாம்.

1397இல் பீகாரில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக ஒரு பட்டணமே காலி.

பூகம்பங்களினால் சில இடங்களில் பெரிய வெடிப்புகள், பள்ளங்கள் உண்டாகின்றன.

பூகம்ப விளைவால் நீர் ஊற்றுகள் வற்றிப்போவதும், வற்றிப்போன ஊற்றுக்களில் மறுபடி நீர் புறப்படுவதும் உண்டு.

பூகம்பம் ஏற்படும்போது பலவகையான ஓசைகளும் சில சமயம் கண்ணைப் பறிக்கும் வெளிச்சமும் உண்டாகும். ரயில் ஓடும் சத்தம் போலவும் காதைப் பிளக்கும் இடிமுழக்கம் போலவும், அலைகள் மோதும்போது ஏற்படும் ஓசை போலவும் பல ஓசைகள் கேட்டதாக பூகம்பத்தைப் பார்த்தவர்கள் கூறியிருக்கிறார்கள்.

1933 இல் ஈடு என்ற இடத்தில் பூகம்பம் ஏற்பட்டபோது மஞ்சளில் நீலம், அல்லது சிவப்புக் கலந்த வெளிச்சம் தெரிந்ததாம்.

மாலெட் என்ற பூகம்பவியல் நிபுணர் உலக வரலாற்றில் இதுவரை நிகழ்ந்துள்ள பூகம்பங்களின் இருப்பிடங்களை ஓர் உலகப் படத்தில் குறித்தார். அதன்படி பெரும்பாலும் பெரிய கண்டங்களின் விளிம்புகளில்தான் பூகம்பம் ஏற்படுவது தெரியவந்தது.

பூகம்பம் உண்டாகும் நேரத்தைக் கணக்கிட ஜப்பானில் 'பிலடா மீட்டர்' என்ற கருவியைப்பயன்படுத்துகிறார்கள். பூகம்பம் ஏற்படுவதற்கு முன்னரே பூமி சில இடங்களில் ஒருபக்கமாகத் தாழ்ந்து வருகிறது. இத்தாழ்வின் அளவை பிலடா மீட்டர் காட்டுகிறது இதைக் கொண்டு பூகம்பம் ஏற்படக் கூடிய நேரத்தை உத்தேசமாகக் கூறுகிறார்கள்.

''வானவியல் ஆராய்ச்சி'' யின் பலனாக பூமியில் மாறுபாடுகளை உண்டாக்கும் சக்தி சுற்றுப்புற கிரகங்களுக்கு உண்டென்றும் ஆகவே வானவியல் முறைப்படி கிரகங்களின் இருப்பிடங்களைக் கணக்கிட்டு ஓரிடத்தில பூகம்பம் எப்போது ஏற்படும் என்று சொல்லிவிடலாம்''

இப்படிச் சொல்லியிருப்பவர் இந்திய புவியியல் இலாகா விஞ்ஞானி ஒல்டாம். ★

# 'விவசாயிகளைப்பாதுகாக்கும் திட்டம்'

விவசாயிகள் தமது கைகால்களை இழந்து அல்லது வேறு வழியில் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலை அல்லது மரணம் ஏற்படும் வேளைகளில் அவரை நம்பி இருப்போர் துன்பம் அடைய நேரிடும்.

எனவே, விவசாயிகளில் தங்கி இருப்போர் நலன் கருதி, நாட்டு நலன் நாடி, உயர்விளைச்சலின் பொருட்டு நெற்காணிகளில் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம் சடந்த ஆண்டு யாழ்ப்பணத்தில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது,

இத்திட்டம் பற்றி, விவசாயிகள் மத்தியில் பூரண விளக்கம் இன்மையால் கடந்த ஆண்டுஇத்திட்டத்தில்குறைந்தளவு விவசாயிகளே சேர்ந்தனர். ஆனால் இன்று இத்திட்டத்தின் செயற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டமையால் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள யாழ்ப்பண விவசாயிகள் பெரும் ஆர்வம் கொண்டு விண்ணப்பித்திருப்பதாக யாழ். மாவட்ட விவசாயிகள் ஓய்வூதியத்திட்ட பணிப்பாளர் திரு. சுப்பையா சிவகுரு தெரிவிக்கின்றார்.

### திட்டத்தின் நன்மைகள்

இத்திட்டத்தில் சேரும் விவசாயிகள் பின்வரும் நன்மைகளைப் பெறுவர்.

1. 60 வயதை அடையும் போது ஓய்வூதியம்.
2. ஓரளவு இயலாமை ஏற்படும்போது ஒரு தொகைப் பணிக்கொடை அல்லது 60 வயது எய்தும்போது ஓய்வூதியம்.
3. பூரண இயலாமை ஏற்படும்போது ஒரு தொகைப் பணிக்கொடை அல்லது ஏலாமையுற்ற திகதியிலிருந்து ஆயுள் காலம்வரை ஒழுங்கான ஒரு படி.
4. மரணப் பணிக்கொடை.

### ஓய்வூதியம்

உதவுதொகை செலுத்துபவர் 60 வயதை அடையும் போது ஓய்வூதியம் பெற உரித்துடையவர். இது அவர் இறக்கும் வரை வழங்கப்படும்.

55-59 வயதுக்கிடைப்பட்ட ஒரு வயதில் சேருபவர் 5 வருடங்கள் உதவுதொகை செலுத்திய பின்தான் தமது ஓய்வூதியத்தைப் பெறமுடியும்

உதவுதொகை செலுத்துபவர் ஓய்வூதியத்தை பெறுமுன் அல்லது பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் இறந்தால் அவரது தேறிய உதவு தொகையும் அதற்கான வட்டியும் அவரது உரித்தாளருக்குக் கிடைக்கும்

### ஏலாமை

கை, கால் இழப்பு, கண்பார்வை இழப்பு, முழுக்குக் கீழ் சக்தி இழத்தல் போன்ற ஆற்றல் பாதிப்படைதல் ஏலாமையாகும். பூரண ஏலாமை நலனுக்கு உதவு தொகை செலுத்துபவர் தமது விருப்பின் பேரில் ஏலாமை பணிக்கொடையுடன் அத்திகதி வரை அவர் செலுத்திய தேறிய உதவுதொகைத் தொகையையும் வட்டியையும் பெற முடியும். அல்லது ஏலாமை ஏற்பட்ட திகதியிலிருந்து மேலும் உதவுதொகை எதுவும் செலுத்தாமல் வாழ்நாள் முழுதும் ஏலாமைப் படியைப் பெற முடியும்.

### மரணப் பணிக்கொடை

உதவுதொகை செலுத்துபவர் 60 வயதை அடையுமுன் இறந்தால் அவரது மரணப் பணிக்கொடை அவரது மனைவிக்கு அல்லது உரித்தாளருக்குத் தரப்படும். விபத்து அல்லது நோயினால் மரணம் ஏற்படினும் மரணப் பணிக்கொடை வழங்கப்படும்.

### திட்டத்தில் சேரும் தகுதி

விவசாயியான ஆண், பெண் இருபாலாரும் 18 – 50 வயதுக்குட்பட்டவர்கள் இத்திட்டத்தில் சேரமுடியும்.

நெல், பருப்புவகை, உப உணவுப் பொருள், மரக்கறி, கிழங்குவகை, பழங்கள், வெற்றிலை போன்ற பயிர்ச்செய்கை பண்ணும் காணி உரிமையாளரான விவசாயியாக அல்லது குத்தகைக்காணி விவசாயியாக இருக்கவேண்டும்.

10 ஏக்கருக்கு மேல் காணி வைத்திருக்கும் விவசாயிகளும், வருமான வரி செலுத்துவோர் அல்லது வேறு ஓய்வூதியம் உரித்துடையவர்கள் இதில் சேரத்தகுதியற்றவர்கள்.

திட்டத்தில் சேர்ந்து ஓராண்டின் பின்னரே நலன்களைப் பெற உரிமையுண்டு.

வயது குறைந்த விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்வதன் மூலம் இழப்புகள் ஏற்படும் வேளைகளில் அதிகமான பணிக்கொடைகளைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் காரணமாக யாழ் மாவட்ட இளம் விவசாயிகள் பலரும் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்வதில் இன்று அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

கமநலசேவை நிலையங்கள், விவசாயக் காப்புறுதிச்சபை மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று இத்திட்டத்தில் சேர்ந்து கொள்[illegible] என்று அறிவிக்[illegible] ★

- வி. பி. சர்மா -

**தாயகம்**

# யாழ் விளையாட்டுத்துறையின் இன்றைய அவல நிலை தீருமா?

யாழ்ப்பாணத்தில் பல விளையாட்டுக்கள் அருகிக் கொண்டு வருகின்றன.

பல விளையாட்டுக்களை இன்றைய சிறுவர்கள் அறியாமல் கூட உள்ளனர்.

முன்பெல்லாம் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், ஹொக்கி, சரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், டெனிஸ், டேபிள் டெனிஸ், பட்மின்ரன் போன்ற ஆட்டங்கள் யாழ்ப்பாணத்தைக் கலக்கி எடுக்கும்.

ஆனால் இப்பொழுது இப்படியான எல்லா ஆட்டங்களும் யாழ்ப்பாணத்தில் ஆடப்படுவதில்லை.

உலக நாடுகள் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவமளித்து அவற்றை ஊக்குவித்துவரும் அதே வேளையில் புதிய விளையாட்டுக்கள் பலவற்றையும் தோற்றுவித்து வருகின்றன.

ஆனால் இங்கோ! ஆடிய ஆட்டங்களைக்கூட தொடர முடியாத நிலையில் அனைத்தும் கைவிடப்பட்டுவருகின்றன.

இங்கு தற்போது உதைபந்தாட்டம், கிரிக்கெட் போன்றவற்றோடு சரபந்தாட்டமும் கூடைப்பந்தாட்டமும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

ஆனாலும் முன்னரைப் போல அவை நடைபெறுவதில்லை.

பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட, கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளும் அண்மைக்காலமாக நடத்தப்படவில்லை:

கூடைப்பந்தாட்டப் போட்டி அத்தி பூத்தால் போல எங்காவது ஒரு நாள் நடைபெறும்.

யாழ் மாவட்ட பாடசாலைகளிலும் இதற்கு இப்பொழுது இடமில்லையென்றநிலை ஓரிரு கல்லூரிகள் மட்டும் 'பேருக்கு' தமது கூடைப்பந்தாட்ட அணிகளை வைத்திருக்கின்றன.

ஆனால் முன்னைய ஆண்டுகளில் யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை அணிகள் கூட அகில இலங்கை ரீதியில் கூடைப்பந்தாட்ட சாம்பியன்களானது யாவரும் அறிந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள இரு கல்லூரிகளுக்கிடையில் கூட இப்பொழுது கூடைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவதில்லை.

இங்கு ஹொக்கிப் போட்டிகளைக் காண்பது 'குதிரைக் கொம்பு' ஆகிவிட்டது.

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் நகரில் உள்ள ஒரு பிரபல மகளிர் கல்லூரி ஒன்று பெண்களுக்கான ஹொக்கி அணியை ஆரம்பித்தது.

அந்த அணியுடன் போட்டியிடுவதற்கு வேறு அணிகள் இல்லை. யாழ் பல்கலைக்கழக அணியுடன் மட்டும் சில தடவைகள் ஆடியது. அத்துடன் பெண்கள் ஹொக்கியும் முடிவடைந்தது.

இப்படியாக யாழ்ப்பாணத்தில் பல விளையாட்டுக்கள் அருகிவருகின்றன.

அதை அப்படியே விட்டு விட முடியாது.

ஒவ்வொரு விளையாட்டு வீரனும், ஒவ்வொரு விளையாட்டு ரசிகனும் இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கல்வியும், விளையாட்டும் எமது வாழ்க்கையின் அடித்தளங்கள்.

அவற்றை நாம் கோட்டைவிட்டுவிடக் கூடாது.

அகில இலங்கை ரீதியில் திறமைமிக்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் எம் மத்தியில் உள்ளனர்.

அவர்களுக்கு உற்சாகமளித்து ஊக்கமளிப்பது பாடசாலைகளின் கடமை.

வீரர்களின் திறமை மழுங்கடிக்கப்படாத வகையில் எமது பகுதிப் பாடசாலைகள் அனைத்திலும் முன்னர் நடைபெற்ற விளையாட்டுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சின்னப் பாடசாலைகளும் இந்தப் போட்டிகளில் ஈடுபட வேண்டும்.

இதனுடன் தொடர்புடையோர் இதைக் கருத்திற் கொண்டு உடனடியாகச் செயற்பட வேண்டும். ★

- விவியன் -

### ஹாக்கி போட்டி;

# இந்தியா - பாகிஸ்தான் இன்று மோதல்

ஒலிம்பிக் ஹாக்கிபோட்டியில் பங்கேற்க இந்தியா, பாகிஸ்தான் அணிகள் தங்களை ஆயத்தப் படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இதையொட்டி இரு அணிகளும் இந்தியாவில் சில டெஸ்ட் போட்டிகளில் விளையாட முடிவெடுத்திருக்கின்றன.

அதன்படி முதலாவது டெஸ்ட் போட்டி இன்று 30 ஆம் திகதி புதுடில்லி நேஷனல் ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது.

இந்த டெஸ்ட் தொடர் போட்டிகளில் விளையாடுவதன்மூலம் 2 நாட்டு அணிகளும் ஒலிம்பிக் பந்தயத்தில் ஓரளவு சிறப்பான சாதனை செய்து காட்டமுடியும் என்று நம்பப்படுகிறது. ★

# ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெறுவேன் - உஷா நம்பிக்கை

சோல் 'ஒலிம்பிக்' போட்டியில் தங்கப் பதக்கம் பெறுவேன் என்று பி.டி. உஷா கூறினார்.

### பயிற்சி

உலக நாடுகள் கலந்து கொள்ளும் ஒலிம்பிக் போட்டி இந்த ஆண்டு சோலில் நடைபெறவிருக்கிறது.

அந்தப்போட்டியில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் ஓட்டப்பந்தய ராணி பி. டி. உஷா மற்றும் வந்தனாராவ், வந்தனுஷன்பக், அஸ்வினி நாச்சப்பா, ஷைனி ஆபிரகாம், சரோஜிலக்ரா சாந்திமால் ஆகிய 8 ஓட்டப் பந்தய வீராங்கனைகள் பெங்களூரில் பயிற்சி பெற்றுவந்தனர்.

அந்த வீராங்கனைகளுக்கு பெங்களூரில் பாராட்டுவிழா நடந்தது.

அவர்கள் தவிர பயிற்சியாளர் ஜேபசிந்தர்சிங் சைனி, பி. டி. உஷாவின் பயிற்சியாளர் ஓ. எம். நம்பியர் ஆகியோரும் விழாவில் பாராட்டப்பட்டனர்.

விழாவில் பி டி. உஷா பேசுகையில் 'இந்த ஆண்டு சோலில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் நிச்சயம் ஒரு தங்கப்பதக்கம் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது' என்றார்.

## விளையாட்டுத் துறை

# லண்டன் போட்டியில் மீண்டும் டைஸன்

உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரர் மைக் டைஸன்.

சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற போட்டியில் ஒரு நிமிடத்தில் எதிரியை வீழ்த்தி 75 கோடி ரூபாயை பரிசுப்பணமாகப் பெற்றார்.

இந்தப் போட்டிக்குப் பின்னர் ஓய்வுபெறப்போவதாக அவர் அறிவித்தார்.

ஏன் விளையாட விரும்பவில்லை என்று கேட்டதற்கு 'மனைவி விரும்பவில்லை என்று அவர் சொன்னார்.

அமைதியான குடும்ப வாழ்வு நடத்தப்போவதாகக் கூறிய அவர் இப்போது மனம்மாறி விட்டார்.

மீண்டும் குத்துச்சண்டைப் போட்டியில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளார்.

இதனால் வருகிற செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி லண்டனில் நடைபெறும் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கிறார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் வீரருக்கு பரிசுத் தொகையாக 15 கோடி ரூபா கிடைக்கவிருக்கிறது. ★

# வில்ஸ் கிரிக்கெட் போட்டி ஒக்டோபரில்

வில்ஸ் ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி நடக்க இருக்கிறது.

இந்தப் போட்டி அக்டோபர் 27 ஆம் திகதி தொடங்கும்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய 4 நாடுகள் இப்போட்டியில் விளையாடுகின்றன.

முதல் போட்டியில் பங்களாதேஷை எதிர்த்தது இந்தியா ஆகும்.

மற்றொரு போட்டியில் இலங்கையை எதிர்த்து பாகிஸ்தான் மோதும்

வெற்றி பெற்று சம்பியன் ஆகும் அணிக்குப் பரிசுத் தொகையாக 1 கோடி ரூபா வழங்கப்படும். இரண்டாவது இடத்தை அடையும் அணிக்கு 50 லட்சம் ரூபா கிடைக்கும். பங்களாதேஷில் இப்போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. ★

★ ★ ★

இந்தியக் குத்துச்சண்டை வீரர்கள் பயிற்சிபெற பாகிஸ்தான் செல்கின்றனர்.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய குத்துச் சண்டை வீரர்கள் பாகிஸ்தான் செல்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

[illegible] திகதி முதல் 10 நாட்களுக்கு இஸ்லாமாபாத்தில் [illegible] நடைபெறும். ★

# பொது அறிவுப்போட்டி இல. 10

1. ஒவ்வொருவருக்கும் இந்த உணர்வு வேண்டும்? … … கட்டுப்பாடு / கடமை
2. ரஷ்யாவில் இறந்த பாரதப் பிரதமர் யார்? … … … … நேரு / சாஸ்திரி
3. இந்தப் பலம் இருந்தால் ஒருவரும் அசைக்கமுடியாது? … … … … … ஆத்மபலம்/ யானைபலம்
4. மாலையில் மலர்வது எது? … … … … … … … மல்லிகை / அல்லி
5. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது எது? … … .. … முதலை / தவளை
6. ஆற்றை மறித்து எதைக் கட்டுவார்கள்? … … … … அணை / பாலம்
7. செய்தி கொண்டு வருவது எது? … … … … … … கடிதம் / பத்திரிகை
8. முன்னேற்றத்துக்கு எது வேண்டும் என்பர்? … … … உழைப்பு / ஊக்கம்
9. இலக்குமி எனும் லக்ஷ்மியின் அவதாரம் என்பர்? … … … … ராதை / சீதை
10. காற்றை விட வேகமானது எது? … … … … … … மனம் / ரொக்கட்
11. துணி நெய்வதற்கு எது வேண்டும்? … … … … … … பஞ்சு / நூல்
12. குழந்தைக்கு எது அவசியம்? … … … … … சத்துணவு / விளையாட்டு

பெயர்:- ………………
விலாசம்:- ……………………
……………

பொது அறிவுப்போட்டி இல: 10
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 10. 8. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

### பொது அறிவுப் போட்டி இல: 9

**சரியான விடைகள் வருமாறு;**

1. சப்பல், 2. மஞ்சள், 3. வங்கி, 4, நாய் 5. இஞ்சி, 6. விழி, 7. ராணி, 8. மழை, 9. முட்டாள், 10. எலி, 11. திருக்கார்த்திகை, 12. வாய்மை.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் & பிளவ்ஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
**ராசி சில்க்ஸ்**
**70, நியூ மார்க்கட்,**
(உட்புறம்)
**யாழ்ப்பாணம்.**


# சஞ்சீவி சஞ்சிகை


நவநாகரீகத்திற்கேற்ப
✱ பிறிடைம் ✱ பாட்லி
★ றிமோட் கொன்ரோல்
✱ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
**ராசி சில்க்ஸ்**
**70, நியூ மார்க்கட்,**
(உட்புறம்)
**யாழ்ப்பாணம்.**


### சுதந்திரமான பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படும் வரை

# பாகிஸ்தானில் ஸியா - பெனஸீர் அரசியல் பலப் பரீட்சை

## தொடரும் சாத்தியக் கூறுகள்

### பிலிப்பீன்ஸில் மார்க்கோஸுக்கு ஏற்பட்ட கதி தமக்கும் ஏற்படக் கூடாது என்பதில் ஸியா தீவிரம்

இந்த வருடம் நவம்பர் 16 ஆம் திகதி பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெறும்.

ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் இந்த வாரம் இதனை அறிவித்தார்.

பொதுத் தேர்தல் கட்சி அடிப்படையில் நடைபெற மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேட்பாளர்கள் தனிப்பட்ட முறையிலேயே போட்டியிட முடியும்.

''கட்சி அடிப்படையில் நடத்தப்படாத தேர்தல் வேண்டாம் அதனைப் பகிஷ்கரிப்போம்'' என்று பெனஸீர் பூட்டோ தலைமையிலான 9 கட்சிகள் கூட்டணி தற்போது அறிவித்துவிட்டது. இதனால் பாகிஸ்தான் அரசியல் நெருக்கடி மீண்டும் அதே இழுபறி நிலைக்குள்ளேயே சென்றுகொண்டிருக்கிறது.

**9 கட்சிகள் கூட்டணி**

1977 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஸியா-உல்-ஹக் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ஜனநாயகத்தை நாட்டில் மீண்டும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய இந்த 9 கட்சிகள் கூட்டணி அமைக்கப்பட்டது.

பெனஸீர் பூட்டோ பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவின் மகள்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியின் போது ஸியா-உல்-ஹக்கினால் பதவியில் இருந்து பூட்டோ கவிழ்க்கப்பட்டார்.

பங்களாதேஷில் முஜிபுர் ரஹ்மானுக்கு நடந்தது போன்று எவரும் எதிர்பாராத வண்ணம் திடீர் என்று இந்த ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றது.

கொலைக் குற்றம் ஒன்று சோடிக்சப்பட்டு நடந்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு இரண்டு வருடத்தின் பின்பு பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.

**பூட்டோ குடும்ப செல்வாக்கு**

பாகிஸ்தானின் சக்திமிக்க தலைவர்களில் ஒருவராக



தேர்தல் பிரசாரத்தில் ஆதரவாளர்களுடன் பெனஸீர்

விளங்கிய பூட்டோ உயிர்த் தியாகம் செய்து தற்போது சுமார் 10 ஆண்டுகள் கழிந்துவிட்டன,

ஆனால் பூட்டோ குடும்பத்தின் செல்வாக்கை ஜனாதிபதி ஸியா-உல்-ஹக்கினால் இன்னும் மழுங்கடிக்க முடியவில்லை. பாகிஸ்தானின் பெரும்பான்மை மக்களின் ஆதரவு இன்னும் பூட்டோ குடும்பத்துக்கே இருந்து வருகிறது.

கட்சி ரீதியான பொதுத் தேர்தல் ஒன்றில் பெனஸீர் பூட்டோவைச் சந்திக்க ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் தயங்குவதற்கு இதுதான் காரணம்.

**மார்க்கோஸ் பாதையில் ஸியா**

அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளும் சுதந்திரமான ஒரு பொதுத் தேர்தல் பாகிஸ்தானில் நடைபெற்றால் பிலிப்பீன்ஸில் பேர்டினன்ட் மார்க்கோஸுக்கு ஏற்பட்ட கதிதான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக்குக்கும் ஏற்படும் இதனை எவரும் மறுக்கமுடியாது.

ஸியாவுடன் ஒப்பிடுகையில் மார்க்கோஸ் இன்னும் ஓரளவு கண்ணியமான மனிதராகவே கணிக்கப்பட்டு வருகிறார்.

தற்போதைய பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்கினோவின் கணவர் செனட்டர் பெனிக்னோ அக்கினோ மீது கொலை, ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருந்த போதிலும் 1980 ஆம் ஆண்டு அக்கினோ குடும்பம் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல மார்க்கோஸ் அனுமதி அளித்திருந்தார்.

1983 இல் செனட்டர் பெனிக்னோ அக்கினோ அமெரிக்காவில் இருந்து பிலிப்பீன்ஸ் திரும்புவதற்கும் மார்க்கோஸ் அனுமதி அளித்தார்.

நாடு திரும்பியபோது மானிலா விமான நிலையத்தில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டபோது அமெரிக்காவில் இருந்துவந்து கணவரின் மரணச் சடங்கில் கலந்துகொள்ளவும் கொரஸோன் அக்கினோவுக்கு அனுமதிவழங்கப்பட்டது.

பின்பு 1986 இல் நடந்த பொதுத்தேர்தலில் அதே கொரஸோன் அக்கினோவுடன் தேர்தலில் போட்டியிட்டு மார்க்கோஸ் தோல்வியடைந்தார்.

மார்க்கோஸ் தற்போது ஹவாய் தீவுகளில் அஞ்ஞாதவாசம்புரிகிறார் சுமார் 1000 கோடி டாலர்சொத்து மோசடிகள் தொடர்பாக அவருக்கு எதிராக பிலிப்பீன்ஸில் 35 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

**மே 29 அறிவிப்பு**

ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் கடந்த மே மாதம் 29 ஆம் திகதி திடீர் அறிவிப்பொன்றை விடுத்தார்.

நிக்கரகுவா, வளைகுடா யுத்தநிறுத்த அறிவித்தல்கள் போன்று இதுவும் திடீரென்று வெளிவந்து சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

✱ பிரதமர் மொஹமட் கான் ஜுனேஜோ பதவி நீக்கம். அமைச்சரவை கலைப்பு.

★ நாடாளுமன்றமான தேசிய சபையும் நான்கு மாகாணசபைகளும் கலைப்பு.

★ அரசியல் கட்சிகள் கலந்துகொள்ளும் விதத்தில் 90 நாட்களுக்குள் நாட்டில் பொதுத்தேர்தல்.

இவையே ஜனாதிபதி ஸியா கடந்த மே 29 இல் வெளியிட்ட திடீர் அறிவிப்பாகும்.

அரசியல் கட்சி ரீதியான தேர்தல் என்று சொல்லப்பட்டதால் இந்த அறிவிப்பு எதிர்க்கட்சிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஜூன் 2ஆம் திகதி பெனஸீர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கமிட்டியின் மத்திய செயற்கமிட்டி கூடியது. பொதுத்தேர்தலில் பங்குபற்றுவது என்று முடிவுசெய்தது. ஆகஸ்ட் 14ஆம் திகதி பொதுத்தேர்தலுக்கு நாள் குறிக்கும்படியும் ஜனாதிபதி ஸியாவை அது கேட்டுக்கொண்டது.

மற்றொரு எதிர்க்கட்சியான Tehik - i - Istial கட்சியின் தலைவர் எயர் மார்ஷல் அஸ்ஹார்கான் பொதுத்தேர்தல் ஊழல் இன்றி நடைபெறுவதைக் கண்காணிப்பதற்காக குலாம் முஸ்தபா யாரோய் தலைமையில் இடைக்கால அரசு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

குலாம் முஸ்தபா யாரோய் 1986 ஆம் ஆண்டு பெனஸீர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியில் இருந்து பிரிந்து தனிக்கட்சி அமைத்தவர்.

பாகிஸ்தான் அரசியலில் இவரும் ஓரளவு செல்வாக்கு மிக்கவராக விளங்குகிறார்.

தற்போது எதிர்க்கட்சியின் நம்பிக்கைகளை எல்லாம் மீண்டும்சிதறடித்துவிட்டார்ஜனாதிபதி ஸியா. அரசியல் கட்சி ரீதியில் பொதுத்தேர்தல் நடத்தப்படமாட்டாது என்று இவ்வாரம் அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் 90 தினங்களில் பொதுத் தேர்தல் நடத்தும் மே 29 அறிவிப்பையும் தூக்கி எறிந்து நவம்பர் 16க்கு பொதுத்தேர்தலுக்கு நாள் குறிப்பிட்டுள்ளார்,

**1985 தேர்தல்**

1985 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஸியா பாகிஸ்தானில் சடைசியாகப் பொதுத்தேர்தலை நடத்தி இருந்தார்.

அத்தேர்தலிலும் கட்சிகள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

பெனஸீர் பூட்டோ தலைமையிலான எதிர்க்கட்சிகள் அப்போதும் தேர்தலைப் பகிஷ்கரித்திருந்தன.

பிரதமர் மொஹமட்கான் ஜுனேஜோ தலைமையில் அப்போது நியமிக்கப்பட்ட சிவில் அரசாங்கமே கடந்த மே 29 இல் கலைக்கப்பட்டது.

பிரதமர் மொஹமட்கான் ஜுனேஜோவின் போக்கில் ஜனாதிபதி ஸியா அண்மைக்காலமாக அதிருப்தி கொண்டிருந்தார்.

ஜெனீவாவில் கைச்சாத்திடப்பட்ட ஆப்கானிஸ்தான் சமாதான ஒப்பந்தம் தொடர்பாகப் பிரதமர் ஜுனேஜோ ஜனாதிபதி ஸியாவின் விருப்பத்துக்கு மாறாக பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்து இருந்தார்.

அத்துடன் கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதி பாகிஸ்தானின் ஒஜ்ஹிரி வெடிமருந்துக் குதத்தில் ஏற்பட்ட வெடி விபத்துத் தொடர்பாக விசாரணைக் கமிட்டி நியமிக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றும் இவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆப்கான் முஸ்லிம் கெரில்லாக்களுக்கு இரகசிய ஆயுத விநியோகம் இடம்பெற்ற சமயம் ஏற்பட்டதாகக் கூறப்படும் இந்த வெடிவிபத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருந்தனர்.

**ஜென்மப் பகை**

1977 ஆம் ஆண்டு சுல்பிஹார் அலி பூட்டோ கவிழ்க்கப்பட்ட நாளில் இருந்து ஜனாதிபதி ஸியாவும் பூட்டோ குடும்பத்தினரும் அரசியலில் எதிரும் புதிருமாகவே இருந்து வருகின்றனர்.

பூட்டோவின் ஆட்சிக்காலத்தில் பூட்டோவின் மிக நம்பிக்கை வாய்ந்த ராணுவத் தளபதியாக ஸியா இருந்து வந்தார்.

சேவை மூப்புக்கு மாறாக ராணுவத்தில் உயர் பதவிக்கு இவர் பூட்டோவினால் நியமிக்கப்பட்டிருந்தார். அப்படி இருந்தும் பூட்டோவின் ஆட்சியை ஸியா கவிழ்த்தார்.

புருட்டஸ் பாணியில் நடந்த இந்தப் பதவி கவிழ்ப்பும் கொலையும் பூட்டோ குடும்பத்துக்கும் ஸியாவுக்கும் இடையில் ஜென்மப் பகையை ஏற்படுத்தியதில் ஆச்சரியம் இல்லை.

**பெனஸீர் திருமணம்**

கடந்த டிசம்பர் மாதம் நடந்த பெனஸீர் பூட்டோவின் திருமணத்துக்கு அரச பிரமுகர் எவரும் அழைக்கப்படவில்லை.

அதே சமயம் இத்திருமணம் பற்றி அரச சார்புப் பத்திரிகைகள் ஒரு சொல்கூடப் பிரசுரிக்கவில்லை.

திருமண நிகழ்ச்சிகளை டெலிவிஷனில் ஒளிபரப்புவதற்கான செய்மதித் தொடர்புச் சாதன வசதியையும் பாக். அரசு வழங்க மறுத்திருந்தது.

இந்த நிலையில் பாக். அரசியல் பலப்பரீட்சை எப்படி முடியும் என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## எவரெஸ்ட் மலை சுத்தம் செய்யும் பணி அக்டோபரில்

எவரெஸ்ட் மலையைச் சுத்தம்செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக 40 பேர்கொண்ட குழு ஒன்றை பிரிட்டன் அனுப்பவுள்ளது.

சுத்தம் செய்யும்பணி எதிர்வரும் அக்டோபரில் ஆரம்பமாக உள்ளது.

## பொது அறிவுப் போட்டி இல: 9

முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு:**
நி. சதீஸ்வரன்,
117, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாவது பரிசு:**
செ. இராஜகுமார்
1 ஆம் ஒழுங்கை,
சோப்பாய் ரோட்,
உரும்பராய்.

**மூன்றாவது பரிசு:**
சி. சிவச்செல்வன்,
மே/பா வே. சிவநேசன்,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

# குழந்தையின் தவிப்பு!

நிர்மலமான காலைப்பொழுது இரவு முழுவதும் அம்மா...... அம்மா... என்று அழுது ஓய்ந்து தூங்கிக்கொண்டு இருந்தாள் குழந்தை நிலா.

ஜன்னல் ஓரத்தில் போடப்பட்டிருந்த மேசையின்மேல் வைக்கப்பட்டிருந்த கடிதம் காற்றில் படபடத்தது.

மறுபடியும் அதைப்பிரித்துப் படிக்கிறேன். என் தங்கை ராஜி எனக்கு எழுதிய கடிதம் அது.

'அக்கா...!...குழந்தை நிலாவைப் பிரிந்து இருப்பது மன வேதனையாக இருக்கிறது. அவளும் அம்மா... அம்மா... என்று அழுதுகொண்டுதான் இருப்பாள்...அவளை விட்டுவிட்டு வந்தது தவறு. எனக்குப் பெரிய தண்டனையாகவும் தவிப்பாகவும் இருக்கிறது.

சிலவேளைகளில் கண்ணீர் விட்டு அழுகிறேன். அக்கா...! உன் குழந்தைபோலவே என் குழந்தையையும் கண்கலங்காமல் கவனி. விரைவில் நான் வந்து அவளையும் என்னுடன் அழைத்துக்கொண்டு போய் விடுகிறேன்,

கடிதத்தை எழுதும்போது அவள் அழுதிருக்கவேண்டும். கண்ணீரில் ஒருதுளி கடிதத்தில் விழுந்து எழுத்துக்களை கரைத்திருந்தன.

அவள் மனவேதனையும் தவிப்பும் நன்றாக விளங்கின. ஒருகணம் குழந்தை நிலாவைத் திரும்பிப் பார்த்தேன். அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

அவள் எழுவதற்கு முன் பூக்களைப் பிடுங்கி சாமி கும்பிட்டுவிட்டேன் என்றால் பின் அவளைக் கவனிக்கலாம்.

பூத்தட்டை எடுத்துக்கொண்டு மல்லிகைப்பந்தலை நோக்கிப்போகிறேன். 'பளிச்' எனத் தன் இதழ் விரித்துச் சிரித்துக்கொண்டிருக்கும் மல்லிகை மலர்களைக் கொய்து தட்டில் நிரப்பிக் கொண்டிருந்தேன்.

பக்கத்து முல்லைப் பந்தலில் உள்ள குருவிக் கூட்டினுள் தேன் குருவிக் குஞ்சொன்று தாய்க்குருவியைக் காணாது

### கடுகுக் கதை

தவியாய்த் தவித்துக் கத்திக்கொண்டிருந்தது.

குருவியின் கீச்...கீச் என்ற குரலைத் துளைத்துக்கொண்டு 'விண்' என்ற விமானத்தில் ஒலி காதை அடைத்தது.

திகைப்புடன் வாசல் புறத்தைநோக்கினேன். நான் நினைத்தது சரியாக இருந்தது.

தூங்கிக்கொண்டிருந்த நிலா தன் பிஞ்சுக் கால்களைத் தரையில் பதித்துப்பதித்து ஓடிவந்தாள்.

விமானம் போகும் திசை பார்த்து அம்மா...அம்மா... என்று அழத்தொடங்கிவிட்டாள்;

விமானம் தன் போக்கில் போவதை உணர்ந்து அது போகும் திசையில் ஓடத்தொடங்கினாள். சட்டென அவளைத் தடுத்து நிறுத்தினேன். கோபத்துடன் திமிறியவளை நான் விடவில்லை.

''ஆன்ரி ...! அம்மா பிளேனிலே போறா... என்னையும் அம்மாவோடு விடுறீங்களா...?''

விமானத்தைக் காட்டி கண்ணீர் பெருக, உள்ளம் தவிக்கக் கேட்கிறாள் நிலா.

ஜேர்மன் சென்ற தன் கணவனைப் பிரிந்திருக்க முடியாமல் தவித்தவள், மூன்று வயதுக் குழந்தையான நிலாவைப் பிரிந்து தன் தவிப்பையும் மறைத்து, குழந்தையின

**- அல்லி -**

தவிப்பையும் பொருட்படுத்தாது விமானத்தில் ஏறிய போதும் நிலா இப்படித்தான் அழுதாள்.

அன்று தொடங்கி ஆகாயத்தில் விமானம் போனால் அழத்தொடங்கிவிடுவாள். நான் மௌனமாக அவளைப் பார்க்கிறேன்.


அவளின் தவிப்பு என் கண்களிலும் நீரை வரவழைத்தது. மெதுவாக நிலாவைத் தூக்கி நெஞ்சோடு அணைக்கிறேன். அட்டையாக மார்பில் சுருண்டு படுத்தவளின் முதுகை ஆறுதலாகத் தடவிக்கொடுக்கிறேன்.

நெருப்பாகச் சுட்டது உடல்.

ஓ... காய்ச்சல் வேறு வந்துவிட்டதா... குடும்பமென்றால் கணவன் மனைவி பிள்ளைகள் என்று ஒன்றாக இருக்கவேண்டும். இப்படி ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்து தவிப்புடன் வாழ்வதில் என்ன சந்தோஷத்தைக் காணப்போகிறார்கள்...? குழந்தைதான் தாக்குப் பிடிக்குமா...? யோசித்தபடி படியேறி விட்டுவிட்டு நிலாவுக்கு மருந்து கொண்டுவருவதற்காகச் செல்கிறேன்.


உலக உலா
என்.பி.சீலன்






புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறாம்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org